EZUTHU

1961

19B2l

இலக்கிய
விமர்சன
குரல்

எழுத்து

25

ஜனவரி 61

காசு ஐம்பது

எழுத்து

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா

ஜனவரி 61...........ஏடு 25...........3-ம் ஆண்டு

அடக்கம்

புது ஆரம்பமாக—	1
மாரீசம்	2
சிந்தனைக்கு	3
வாடைக்காற்று	4
அசுவதி	
இலங்கையும் நாமும்	7
தோற்காதவன்	9
எர்னஸ்ட் ஹெமிங்வே	
மௌனியின் மனக்கோலம்	17
சி. சு. செல்லப்பா	
எழுத்து அரங்கம்	21
ஆனை ஸ்ரீ. குஞ்சிதபாதம்	
ம. ந. ராமசாமி	
சுப. கோ நாராயணசாமி	
எஸ். எஸ். சாமி	
இலக்கிய வம்பு	அட்டையில்

இலக்கிய விமர்சனம், படைப்புத் துறையில் சோதனைகள் இவற்றில் அக்கறைகொண்ட மாதப் பத்திரிகை எழுத்து. ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று வெளிவருவது

சந்தா விகிதம்: தனிப்பிரதி 50 ந. பை. ஆண்டுச் சந்தா ரூ. 5 00 சிலோன் உள்பட. பர்மா மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 6.00 இலங்கை அன்பர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தா அனுப்பலாம். மற்றவர்கள் மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

எழுத்துவில் வரும் கையெழுத்திட்ட கட்டுரைக் கருத்துக்கள் எழுத்துவின் கருத்துக்கள் அல்ல. மாறுபட்ட கருத்துக்களுக்கு எழுத்து இடம் தரும்.

இலக்கியம் சம்பந்தமான பொதுப்படைக் கருத்துக்கள், தற்கால இலக்கிய இயக்கங்கள், தனிப்பட்ட ஆசிரியர்கள், நூல்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் புதுக் கவிதை முயற்சி சிறுகதை ஓரங்க நாடகம், நாடகம், நாவல் இவைகளில் சோதனை முயற்சிகளையும் எழுத்து வரவேற்கிறது.

'எழுத்தரங்கம்' பகுதிக்கு எழுதப்படும் கட்டுரைகள், கடிதங்கள் எழுத்துவில் ஒருபக்கத்துக்கு (சுமார் 500 வார்த்தைகள்) மேல் போகாமல் இருக்கவேண்டும்.

கட்டுரை அனுப்புவோர் தபால் தலைவைத்த தம் முகவரி கவருடன் தெளிவாக எழுதி அனுப்பவும்.

கடிதப் போக்குவரத்து, சந்தா, மானேஜர், ஆசிரியர் என்று குறிப்பிட்டு 'எழுத்து' (Ezhutthu) 19-A பிள்ளையார்கோவில் தெரு, திருவல்லிக்கேணி சென்னை-5. முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

வாசக அன்பர்களுக்கு

இந்த இருபத்தைந்தாவது ஏட்டுடன் எழுத்து தன் மூன்றாவது ஆண்டுக்குள் காலெடுத்து வைக்கிறது. நான் சென்ற ஏட்டில் குறிப்பிட்டதுபோல அன்பர்கள் அனைவரும் இந்த ஜனவரி மாதத்திற்குள் தங்கள் சந்தாக்களை அனுப்பி புதுப்பித்துக் கொண்டு எழுத்து தாக்காக வளரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இந்த ஏட்டின் வெளி அட்டையில், புதிய சந்தாதாரர்களாக சேர்பவர்களுக்கு ஒரு பொங்கல் சலுகை தரப்பட்டிருப்பதை காண்பீர்கள். ஒவ்வொரு எழுத்து அன்பரும் இதை தங்கள் இலக்கிய நண்பர்கள் காதில்போட்டு இந்த சலுகைபெற்ற சந்தாதாரர்களாக ஆகச்செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். நல்ல வாய்ப்பு இது. இந்த இரண்டு ஆண்டு எழுத்து ஏடுகளை மொத்தமாக பார்க்கும்போது அது எவ்வளவு விஷயங்களை அடக்கி இருக்கிறது என்பது தெரிகிறது என்கிறார்கள் அன்பர்கள். எழுத்து ஒரு இலக்கிய கருத்து பொக்கிஷம் என்பதை தங்கள் நண்பர்களிடம் தெரிவியுங்கள். உங்களுக்கு தெரிந்த நூல் நிலையங்களுக்கும் தெரிவியுங்கள். எழுத்து உங்களிடமிருந்து இதை உரிமையுடன் எதிர்பார்க்கிறது.

இந்த ஏடு முழுக்க 'சட்டை உரிப்பு' ஏடாக வரவில்லை என்றாலும் சட்டை உரித்துக்கொள்ள அது ஆரம்பித்திருப்பது தெரியவரும்.

எழுத்து எப்படி இருக்கவேண்டுமென்பதைப் பற்றி தங்கள் கருத்துக்களை பலர் அவ்வப்போது தெரிவித்திருக்கிறார்கள் மொழிபெயர்ப்புகள் வேண்டும், வேண்டாம் பழசுகளை போடுங்கள், போட வேண்டாம், பழைய பிரபல எழுத்தாளர்களை எழுதச்செய்யுங்கள், புதியவர்கள் எழுத்துக்களை போடுங்கள் இப்படி பலதரப்பட்டதாக இருக்கின்றன. திட்டவட்டமாக எதையும் செய்யமுடியாது இன்றுள்ள நிலையில். பழய 'பெரியவர்கள்' என்பதற்காக போடுவதோ, புதிய 'சிறியவர்கள்' என்பதற்காக போடுவதோ அர்த்தமற்றது தரம்தான் முக்கியம். அப்படி தமிழில் கிடைக்காதபோது சிறந்த மொழிபெயர்ப்புகள் அவசியம். மேல்நாட்டில் மொழிபெயர்ப்பு மூலமே இலக்கியங்களின் போக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. அதே போல புதுசு சிறப்பாக இல்லாதபோது நல்ல பழசை படித்து ரசிப்பது நமக்கு திருப்தி தரும். மேல்நாட்டு இலக்கிய கட்டுரைகள் மொழிபெயர்ப்பும் நமக்கு மிகவும் பயன்படும், ரசனை வளரவும் படைப்பு வளமாகவும்.

எழுத்தரங்கம் பகுதியை இந்த ஆண்டு வாசகர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சுருக்கமாக இருக்கவேண்டும். சிலர் நீண்ட கட்டுரைகளாக எழுதிவிடுகிறார்கள். வாசகர்களுக்கும் புத்தக மதிப்புரை செய்யும் வாய்ப்பை அளிக்க கேட்டிருக்கிறார் அன்பர் ஒருவர். பேஷாக. இலக்கியத்தரமான எந்த நூலையும் அதற்கு உரிய இடம் கொடுத்து எழுதவும்.

எழுத்து ஏப்ரல் ஏட்டை ஒரு சிறப்பு ஏடாக கொண்டுவர திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன்.

— சி. சு. செ.

புது ஆரம்பமாக

புது ஆண்டு பிறக்கவும் ஏதாவது புதுசாக ஆரம்பம் செய்ய முற்படுவதும் சங்கல்பம் செய்து கொள்வதும் மனித இயல்பு. இலக்கியத் துறையில் இன்று அத்தகைய கங்கணம் கட்டிக்கொள்ளுதல் படைப்பாளிகளுக்கு அவசியம் ஆகிறது. இன்றய படைப்பாளி தனக்குமுன் சென்றுள்ள அத்தனை பேருக்கும் வாரிசுதான் என்பதில் சந்தேகமில்லை. அப்படி வாரிசாக இருப்பவன் அந்த சொத்தை எப்படி அனுபவிக்கிறான், பெருக்குகிறான் என்பதுதான் கேள்வி. ஆனால் இன்றய படைப்பாளிக்கு அநுபவிக்கவும் தெரியவில்லை, பெருக்கவும் தெரியவில்லை என்பதுதான் நாம் காண்பது. நூற்றாண்டுகள் கணக்கான இலக்கிய வளம் இருக்கட்டும், முப்பது, நாற்பது அல்லது இந்த நூற்றாண்டு அறுபது வருஷ காலத்து இலக்கியத்தையாவது அவன் முழுக்க அல்லது பெரும் பங்கு அறிந்தவனாக இன்று படைக்க முன்வருகிறானா என்று பார்க்கப் போனால் அது இல்லை என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. இன்றய படைப்பாளிகளுக்கு 'பாரதி காலம்' ஒரு மரபு. அதற்குப்பின் வந்த 'மணிக்கொடி காலம்' ஒரு மரபு. இந்த இரண்டும் அன்று புரட்சிக்கு உள்ளானவை; பாரதி கவிதைக்கும் மணிக்கொடி கதைக்கும். இலக்கியத்தில் இந்த மாதிரியான கலகங்கள் ஏற்பட்டுத்தான் போக்குகள் மாறுகின்றன, திருப்பங்கள் ஏற்படுகின்றன.

'இலக்கியத்தில் முன்னேற்றம் என்று கிடையாது' என்று கூறி இருக்கிறார் ஒரு விமர்சகர். அது உண்மையே. கம்பனும் இளங்கோவும் ஒருவருக்கு ஒருவர் முன்னேற்றம் அல்ல, திருப்பம். முன்னேற்றம் என்றால் ஒருவாறு கலைத்தர வளர்ச்சிபற்றி குறிப்பிடலாமே தவிர, அடுத்து வருகிற ஒரு தலைமுறை புதிய சோதனை செய்துவிட்டால் அது முன்னேற்றம் என்று ஆகிவிடாது. அல்லது உள்ளடக்கத்தில் வேறுபாடு இருந்துவிட்டதாலும் அதை முன்னேற்றம் என்று சொல்லிவிட முடியாது. இளங்கோவும் கம்பனும் அவரவர் காலத்து உச்சநிலை இலக்கியத் தரத்தை எட்டியவர்கள். அவர்களுக்குப் பின் வந்த பாரதியும் ஒரு உச்சநிலையை எட்டியவன். அவர்களது இலக்கியத் தரம் மிக உயர்ந்து இருப்பதுதான் குறிப்பிடத்தக்கது. ஆகவே இலக்கிய வளர்ச்சி என்கிறபோது அவர்களைவிட இலக்கியத் தரமாக நாம் எழுதுகிறோம் என்பதல்ல; முன்னேற்றம் என்கிறபோது அவர்கள் படைப்புகளின் மதிப்பு குறைந்து வருகிறது என்பதும் அல்ல. இலக்கியம் தனி மனிதப் பார்வையின் விளைவு ஆதலால், நாம் புதுப்பார்வை இன்றய சூழ்நிலையில் செலுத்துகிறோம், புதிய உத்திவகைகளைக் கையாண்டு புது உருவங்கள் அமைக்கிறோம் என்பதுதான். இவைகள் தான் திருப்பங்கள், போக்குகள்.

இந்த திருப்பமும் போக்கும் இன்றய படைப்பாளிகளுக்கு விளைவிக்க இயலுகிறதா என்று பார்க்கப் போனால் இல்லை என்று சொல்லவேண்டி இருக்கிறது. உண்மையில் அவன் பாரதிக்கும் மணிக்கொடிக்கும் வாரிசாக நடந்துகொள்ள இல்லை என்கிற மாதிரி தான் தோன்றுகிறது. வாரிசு என்ற பட்டப் பெருமை இருக்கிறது; செயலீட்டுச் சாதனை காணப்படவில்லை. இன்றய படைப்பாளி விழித்துக்கொள்ளவேண்டும். பெரிய எழுத்தாளர்களை அடியொற்றி எழுதுவதோ தனக்கு முன் சிறப்பாக எழுதப்பட்டிருப்பதை தானும் திரும்ப ஒரு தடவை (அந்த அளவுக்கும் இல்லாமல்) பலஹீனமாக முயன்று பார்ப்பதும் வீண் உழைப்பு ஆகும். தனக்கென ஒரு புதுப்பார்வை இருந்து, ஏதாவது அதில் ஒரு நோக்கம் ஏற்ற முடியுமானால்தான் பேனாவை கையில் பிடிக்க வேண்டும். பேனா பிடிக்கவேண்டும் என்பதற்காக பேனா பிடிப்பது இப்போது சகஜமாகி இருக்கிறது. 'இலக்கியத்தரம்' என்பதற்கு உரிய அர்த்தம் உணரப்படவில்லை.

இந்த 'இலக்கியத்தரம்' என்ற உணர்வு ஏற்படவேண்டுமானால் அதற்கு சிறந்த இலக்கியங்களை படித்த ஒரு படிப்பு, அதன் விளைவாக ஏற்பட்ட ஒரு மனப் பக்குவம் இருக்கவேண்டும். படைப்பாளி படிப்பாளியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், தனக்கு முனை செய்யப்பட்டிருப்பதை முழுக்க உணர்ந்தவனாக இருந்தால் தான், தான் செய்யக் கூடியது என்ன என்பதையே நிதானித்துக் கொள்ள முடியும். இதை இன்றய படைபபாளிகள் மனதில் போட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் சிலதை செய்தாகவேண்டும், சிலதை செய்யக் கூடாது. தமிழில் ஒரு வரி எழுதுமுன் இன்றுவரை எழுதப்பட்டிருப்பதை மனதில் கொணர்ந்து அதை தான் திரும்பச் சொல்கிறோமோ என்று பார்த்து, பட்டால் விலக்கிவிடவேண்டும். தொகைக் கணக்குக்கு ஆசை இன்று நிறைய இருக்கிறது. இது அபாயகரமானது படைப்பாளிக்கு. மணிக்கொடி காலத்தவர்கள் பலர் இன்று சிறுகதைகளே எழுதுவதில்லை, எழுதினாலும் அபூர்வமாக, என்று இருப்பதை நாம் கவனிக்கவேண்டும். புதுமை, தன் தனிப் பார்வை தொனிக்காத எழுத்துக்கு இடம் கிடைக்காது, பிற்கால மதிப்பீட்டில். இன்று சூடாக விலைபோவதை எண்ணி மகிழ்ந்து திருப்திப்பட்டுக்கொண்டு விடக்கூடாது, இளம் படைப்பாளி. இன்று தரம் அற்ற எழுத்து பரவிக்கிடப்பதற்கு பத்திரிகைத் தேவையை சம்பந்தப் படுத்தி எழுத்தாளன் பேசுவதில் அர்த்தம் இல்லை. ஒரு 'கற்புள்ள' எழுத்தாளன் இந்த வித மோகவலை விரிப்பில் சிக்கிக் கொள்ளாதவன். அத்தகைய எழுத்தாளர்களால்தான் இலக்கியப் பெருக்கு சாத்தியமாகிறது. தொகைக்கணக்கால் அல்ல. காலப் போக்கில் இந்த தரமான இலக்கியப் பெருக்குதான் வளம் என்று சொல்லத்தக்க நிலையை ஏற்படுத்தித் தருகிறது.

ஆகவே, இன்றய படைப்பாளி புது ஆரம்பம் அறிந்து செய்பவனாக இருந்தால் ஒழிய அவனது இலக்கிய வாழ்வு வாழ்ந்ததாக ஆகாது. இலக்கிய வளம் தொகையைப் பொறுத்தது அல்ல, தரத்தைப் பொறுத்தது என்பதை மனதில் போட்டுக்கொண்டு, தான் சொல்ல ஏதோ இருக்கிறது என்று உந்தப் பட்ட ஒரு உணர்வுடன் இந்த 1961-ல் பேனாவைக் கையில் பிடித்தால் தமிழ் இலக்கியத்தில் எதிர்கால நம்பிக்கைக்கு இடம் ஏற்படலாம். இதை அவன் செய்யப்போகிறானா? காத்திருந்து பார்ப்போம்.

மாரீசம்

எது சுயம், எது மாரீசம் என்று வாதிக்க ஆரம்பித்து விட்டால் முடிவு காண முடியுமோ முடியாதோ, நிறைய விவகாரம் பேசிக்கொள்ள முடியும். ஆனால் சுயம், மாரீசம் இரண்டுக்கும் ஒரு வரையறை அர்த்தம் இருப்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் எதுவும் சுயமாகும்; எதுவும் மாரீசமாகும். சுயத்தை மாரீசமாகவும் மாரீசத்தை சுயமானதாகவும் தக்க ஆராய்வு இல்லாமல் ஏற்றுக்கொண்டால் அது ரொம்ப கெடுதலானது. எனவே ஒருவர் இது சம்பந்தமாக நிதானிப்பதில் வெகு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆனால் இதை செய்வது அவ்வளவு லகுவான காரியம் அல்ல. பிசகு இரு தரப்பிலும் ஏற்படுவது இயல்பானது.

எதானாலும் இந்த பாகுபாட்டை நாம் இனம் பிரித்து வைத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். 'ஒரு படைப்பாளியிடமிருந்து மற்றொரு படைப்பாளி வேறுபட்டவனாக இருக்கிறான் என்று நமக்கு படச் செய்கிற மனதுகளுக்குத்தான் படைப்புத் திறன் சாத்யமாகி இருக்கிறது,' என்பதை சுயம் என்பதற்கு அடிப்படையாகக் கொள்ளலாம். இதற்கு எதிராக, ஒரு படைப்பாளியினுடையது போலவே இதுவும் இருக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறதை மாரீசத்துக்கு அடிப்படையாக வைத்துக் கொள்ளலாம். ஆனால், இந்த போலவேயும் வேறுபாடானதும் பல சாயல்களை கொண்டு நம்மை தடுமாற வைக்கக்கூடும். கதை ஒத்து இருப்பது எந்த அளவுக்கு, வேறுபடுவது எந்த இடத்தில், உத்தேச ஒருமைப்பாடும் மாறுபாடும் எங்கு பிரிகிறது. உணர்த்தல் ஒன்றாக விழுந்திருக்கிறதா, இல்லை, வேறாக முடிந்திருக்கிறதா, இதெல்லாம் பார்த்துத்தான் இரண்டில் ஒன்றை முடிவு கட்ட வேண்டும். இது பார்ப்பதற்கு லேசாக தோன்றினாலும் நடைமுறையில் சிரமப்படுத்தும். எனவே ரசிகன், விமர்சகன் வேலை சிக்கலானதாக ஆகிறது.

இந்த சுயம்—மாரீசம் பிரச்னை நமக்கு வெகு தொல்லையை அளித்து வந்திருக்கிறது. கதைத் துறையில்தான் இன்று அது தூக்கி நிற்கிறது. ஒற்றுமை முழுக்கவும்' ஒற்றுமை பெரிதும் இருப்பவை பல. மாறுபாடுகளுடன் இருப்பவை பல. 'அந்த கதையை நான் படித்திருக்கிறேன். ஆனால் அதிலிருந்து என் மனதில் இந்த கதை பிறக்கவில்லை' என்கிறார்கள், அநேகமாக இதை எடுத்துக் காட்டப்பட்ட எந்த எழுத்தாளரும். அவர்கள் ஒப்புக்கொள்வதே இல்லை. ஒரு குறிப்பிட்ட கதையை படித்திராதவர்கள், அல்லது அதைப்பற்றி கேட்டேயிராதவர்கள் ஒரு கதையை எழுதினால், அதை, ஒருமைப்பாடு இருந்தாலும் சுயம் என்று ஏற்றுக் கொள்ளமுடியும். அப்போது, அந்த இரு கதைகளை ஒப்பிட்டு தரம் பார்த்து சொல்லலாம். ஒரு கதையைப் படித்துவிட்டு 'இதை நான் எழுதும்போது, என் நினைவில் அது இல்லை' என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 'பிறிதோர் படைப்பை படிக்க நேர்ந்த சமயத்தில் ஏற்பட்ட மன அருட்சியின் செல்வாக்கில் வசப்பட்டு அதனால் எழுந்த புதிய கற்பனையில், சுயமான பார்வையில் இலக்கியம் படைப்பது' என்று ஈழத்து விமர்சகர் சில்லையூர் செல்வராஜன் ஒரு (தினகரன், காரசாரம் கட்டுரையில்) கூறுகிறார். சுயமான ஒரு பார்வையில் எழுப்பதுதான் முக்கியம். ஆனால் அவரே, மற்றொரு இடத்தில் 'எங்கோ படித்த அல்லது கேள்விப்பட்ட, ஏதாவதொரு கதை யம்சத்தின் வெற்று ஞாபகத்தை வைத்துக்கொண்டு சுயமாக எழுதி தமக்கென்று ஒரு அந்தஸ்தை சம்பாதித்துக் கொண்டிருப்பவர்கள்மீது கல்லெறிய வேண்டாம்' என்கிற போது அவரது வரையறை தளர்ந்து விடுகிறது. படித்த, கேள்விப்பட்ட கதையம்சத்தின் வெற்று ஞாபகத்தைக் கொண்டு சுயமாக எழுதுவது என்ன? அவர் முன்குறிப்பிட்ட 'பார்வை' இல்லாமல் எழுதப்படுவது சரியில்லை தானே? கதையம்சம், உத்தேசமும் உணர்த்தலும் ஒரே மாதிரியாக இருந்தால் அது சுயமாக எப்படி ஆகும்? ஞாபகத்தில் உள்ள ஒரு கதையம்சம் எதாவது மாறுதல் தன் பார்வை மூலம் பெற்றால்தான் உத்தேசமும் உணர்த்தலும் வேறாகி விடுமே. சுயம் ஆகும். ஒரு பழைய கதையம்ச ஞாபகத்தைக் கொண்டே சுயமாக எழுதுவது எப்படி சாத்தியம்? உத்திமுறைகள் மூலம் அமைப்பு மாற்றம் இருந்தாலும் அதற்காக பாராட்டலாமே ஒழிய, சுயமானது என்பது எப்படி? இந்த பார்வை ஆரம்பத்திலிருந்தே விழுந்திருந்தால் இந்த ஒப்பிடலுக்கு இடம் ஏற்பட்டே இருக்காது. ஆரம்பத்திலேயே தெளிவாகிவிடும்.

இன்றைய எழுத்தாளர்களுக்கு பார்வை என்று ஒன்று இல்லாததால்தான் இம்மாதிரி ஒரே ரகமாகவோ, அல்லது ஒருவர் முன் எழுதின போக்கிலேயோ எழுதத் தோன்றுகிறது. ஒரு சம்பவம் அல்லது ஒரு கதைக்கரு தங்களுக்கு பட்டால், அது இதற்கு முன் கையாளப்பட்டிருக்கிறதா, எப்படி, எந்த அளவுக்கு, எந்த தரத்துக்கு என்று பார்க்கிறதே இல்லை. தெரிந்து ஒரு தொழிலாக செய்கிற மாரீசத்தைப் பற்றி இங்கு பேச்சே இல்லை. சுயம் என்று நினைத்து செய்யப்படுகிறதே அதைப்பற்றித்தான் பேச்சு. ஒரு கதையை எடுத்துக்கொண்டால் படைப்பாளர்கள் அதன் தூலத் தோற்றத்தை மட்டும் மனதில் வாங்கிக்கொள்ளாமல் அதன் ஜீவனை முழுக்க அறிய முயலவேண்டும் அப்போது அந்த கதையின் ஜீவனுக்கு தாங்களும் திரும்ப மற்றொரு உருவம் கொடுக்கத் தோன்றாது. அந்த கதையின் ஜீவன் அவர்களுக்குள் உளைந்து கொண்டிருந்தாலும் அது அவர்களுக்குள் வேறு ஜீவன்களுக்கு தாயாக இருக்குமே அன்றி தாயின் நகலாக இருக்காது. இன்றைய படைப்பாளி எவைகளை கையாளுவது என்பதை விட எவைகளை தள்ளிவிடுவது என்பதில் தான் கவனம் செலுத்தவேண்டும். ஏனெனில் அவனது முன்னோடிகளுக்கு இல்லாத வாய்ப்பாக, ஒரு அகண்ட இலக்கிய பரப்பு அவன் முன் விரிந்து கிடக்கிறது. எனவே அவன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவன் கொஞ்சமாக எழுதினாலும் பார்வையுடன் சுயமாக, திறமையாக எழுத முற்பட வேண்டும். அப்போதுதான் அவனுக்கு மாரீசப் பட்டம் வருவதற்கு இடம் இருக்காது.

நிபுணர் வார்த்தை

விமர்சகனாக எனக்கு உளவியலுடன் ஒரு உறவு தேடத்தான் ஆசை ஏற்படுகிறது. ஆனால் பொதுவான ஒரு ஒப்பந்தத்துக்கும் கடமையான ஒரு உடன்பாட்டுக்கும் இடையே வித்யாசப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஒரு விமர்சகனாக அதாவது என் துறையில் ஒரு சாஸ்திரக்காரனாக இன்னொரு சாஸ்திரத்துடன் நான் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கிறபோது என் ராஜ்யத்து உரிமைகளை தாங்கி நிற்பதில் பிடிவாதமாக இருக்கிறேன். என் காரியத்துக்கு உசிதமானதாகத் தோன்றும் அளவுக்கே நான் ஏற்றுக்கொள்கிறேன். என் சொந்த விசேஷ உணர்வு மூலம் கிடைக்கும் ஆதாரங்களுக்கு ஒத்துவராத எதையும் மறுத்துவிடுகிறேன். ஆனால், உண்மையில் முன் கூட்டின வெறுப்பு இல்லாமல் ஒரு விமர்சகன் உளவியலை நெருங்கினால், உளவியலார்களாலேயே பொதுவாக ஏற்கப்பட்ட சில முடிவுகளை ஒருவன் காண்பான். இலக்கியம் பற்றி அறிந்துகொள்ள அவன் அவைகளை லாபகரமாக பயன்படுத்த முடியும்.

—ஹெர்பர்ட் ரீடு
(பிரிட்டிஷ் கவி)

நமது கற்பனையை எழுப்பி, அதன் மூலம் நமது உணர்ச்சியையும் பாதித்து மும்மடி நியாயம் (ஸில்லஜிஸம்) மூலம் இல்லாமல் உருவகங்கள் மூலம் நம்மை திருப்தி செய்யும் ஒரு கவி, ஒரு சரித்திரக்காரனுடைய விதி முறைகள் அத்தனையையும் மகிழ்ச்சியுடன் மீறுவான். அவன் ஆதாரங்களை திரித்து விடுவான். விரிவு படுத்தியும் காட்டுவான். நம்பவே தகாத உதாரணங்களை எல்லாம் அவன் ஏற்றுக்கொள்வான். ரொம்பவும் கற்பனையான சாட்சியங்களை எல்லாம் ஏற்றுக்கொள்வான். ஒரு சரித்திரக்காரன் நடப்பை அடக்கித் தரவேண்டியவன், ஒரு கவி தன் உருவகத்துக்கு கட்டுப்பட்டு பெருக்கம் காட்டுபவன்.

கவிகள் தத்துவாசிரியர்கள் அல்ல. தங்கள் கவிதைக்குள் ஒரு தத்துவ முறையை உட்புகுத்தி அடைபட்டுப் போகிறவர்கள் அல்ல. ஒரு நியாயமான தத்துவ முறையை, அதற்கு உருவகங்களை அணிவித்ததின் மூலம் கவிதையாக ஆக்கிவிட முடியாது. கருத்துப் பிரித்து எடுக்கப்பட்டதுக்கு அதற்கென ஒரு தனி அழகு உண்டுதான். ஆனால் அது கவிதைக்கு உரியது அல்ல. ஒரு கருத்துக்கு கவிதை மதிப்பு ஏற்படுவதே அது கவிதை உருவத்தில் பிறந்ததும் தான். உருவமும் கருத்தும் பிரிக்க முடியாதது. ஒன்றின் மீது மற்றொன்றை வலிந்து புகுத்த முடியாது.

—டான் காமிரான் அல்லன்
(அமெரிக்க பேராசிரியர்)

'விமர்சன யுகம்' என்பதின் முக்யத்வம் அந்த காலத்து விமர்சனத்தின் தரத்தை வைத்துத்தான். அந்த காலம் விமர்சனத்தில் அக்கறை கொண்டு இருக்கிறதா என்ற வெறும் தகவலை வைத்து அல்ல, விமர்சனம் சரியானதா மோசமானதா என்பதை பொறுத்தது. மற்றவை எல்லாம் சரியாக இருப்பதாக கொண்டால், அதிகமான விமர்சன சாதனை இருப்பது, கலைகளில் உள்ள ஆழ்ந்த அக்கறையை காட்டுகிறது. சாதாரணமாக படைப்புச் செயலோடு கூடவே அதுவும் உண்டாகிறது. விமர்சனம் படைப்புடன் போட்டி போடுகிறதில்லை. ஒரு விமர்சகன், அகம்பாவத்துடன், ஒரு கவிதையின் அமைப்பைப் பற்றி விளக்கும் ஒரு திட்டத்தையோ கவிதைகள் எழுதவேண்டிய முறை பற்றிய ஒரு விதி முறையையோ தர முற்படவில்லை. இல்லை, ஒரு கவிதையை விளக்குவதற்காக, அதாவது கவிதைக்கு அர்த்தம் சொல்லி, அதன் ஜாலத்தை (மாஜிக்) வெளிப்படுத்தி, உணர்ச்சிப் பதிலெழுப்பைக் கொன்று ஒரு அறிவுப்பாங்கான கருத்து முறைக்கு சத்துக்குறைத்து ஒடுக்கி விடுவதல்ல.'

—கிளெனத் புருக்ஸ்
(அமெரிக்க விமர்சகர்)

★ ★ ★ ★ ★ ★ ★

ஒரு நல்ல விமர்சகன், தன் விமர்சனம் எண்ணிச் செய்யாததாகவோ வேறொன்றுக்கு ஈடாக உள்ளதாகவோ ஆகிவிடாமல் இருக்கப் பார்த்துக் கொள்பவன். அவன் ஆராயும் திட்டமான கலைப்படைப்பு போல அவன் அறிவுக்கான உழைப்பும் திட்டமானது.

ஆர். பி. பிளாக்மூர்
(அமெரிக்க கவி)

ஒரு சிறந்த படைப்பில் அடங்கி இருப்பதை அநேகம் பேர்கள் அறிய முடிகிறதில்லை. ஏனெனில் அவர்கள் கற்பனா சக்தியுடன் படிக்கிறதில்லை.

—ஜான் மிடில்டன் மர்ரே.
(பிரிட்டிஷ் விமர்சகர்)

வெறும் சபலம், சந்தோஷத்தால் கவிதை படைக்கப்படுவதில்லை. சுதாவான அவசியத்தால் தான்.

பெனடெட்டோ குரோஸே
(இத்தாலிய தத்துவாசிரியர்)

கவிதைகள், வாசகர்கள் யூகிக்கிறபடி, வெறும் உணர்ச்சிகள் அல்ல; அவைகள் அநுபவங்கள்.

ரெயினர் மேரியா ரில்கி
(ஃபிரஞ்சு கவி)

★ ★ ★ ★ ★ ★ ★

வாடைக்காற்று

ஒரு நாட்டு கலாச்சாரம், கலை இத்யாதிகளை பரஸ்பரம் தெரிந்து கொள்ளும் ஆவல் பரவியுள்ள காலம் இது. தமிழ் எழுத்தாளர்களுக்கும் பத்திரி காசிரியர்களுக்கும் இந்த ஆசை இருக்காதா? எனவே பக்கத்து, நம் இனத்தவர் கணிசமாக வாழ் கிற இலங்கைக்கு போய் வருகிறார்கள். அவர்களும் வருகிறார்கள். ஈழத்துக்கும் நமக்கும் இலக்கிய தொடர்பு வரவர நெருக்கமாகிக் கொண்டிருக்கிறது. அது இன்னும் வளர இருக்கிறது. இருவருக்கும் லாபகரமான ஒரு உறவு அது. எனவே இந்த நெருக்கத்துக்கு வழிசெய்வதுதான் ஒவ்வொருவரது முயற்சியாக இருக்கவேண்டும். ஆனால் இன்று போகிற எழுத்தாளர்கள் பத்திரிகாசிரியர்கள் இதை சரியாக செய்கிறார்களா? எந்த அளவுக்கு செய்கிறார்கள்? இது ஒரு கேள்வி. இலங்கைக்கு சென்று வந்துள்ள எழுத்தாளர்களின் சொற்பொழிவுகள் சில இங்கு நடந்திருக்கின்றன. அவைகளில் எல்லாம் தங்களுக்கு கிடைத்த வரவேற்பு, உபசாரம், பேசின கூட்டத்து அளவு, கணக்கு, சாப்பாடு இதுகளைப் பற்றித்தான் அநேகமாக இருந்திருக்கிறது. ஏதாவது இலக்கியம் பற்றியதாக கேட்டால், அங்கு ஒரு பரபரப்பு இருக்கிறது, உணர்ச்சி இருக்கிறது— இப்படி ஏதாவது பொதுப்படையாக சொல்லி, தங்களுக்கு அறிமுகமான பெயர்கள் ஏதாவது இரண்டொன்றை சொல்லி விடுவார்கள். உண்மையில் இலக்கியத் தகவல் கிடைக்கவே கிடைக்காது.

காரணம் இலக்கிய யாத்திரை என்று இவர்கள் சொல்லிக்கொண்டாலும் இவர்கள் அக்கறை முதன்மையாக அது இல்லை. ஊர் பார்ப்பது, வசதியாக அங்கு இருப்பது, எதையாவது இரண்டொரு கூட்டங்களில் பேசுவது இந்த அளவுக்குத்தான். பத்திரிகைக்காரர்களாக இருந்தால் பத்திரிகைவிற்பனை அக்கறை முதன்மையாக இருக்கும். பத்திரிகை முதலாளிகளைவிட, எழுத்தாளனும் பத்திரிகாசிரியருமான ஒருவர் போவது செல்வாக்கானது அல்லவா? தமிழ் நாட்டில் வெளியாகிற பத்திரிகைகளுக்கு எல்லாம் ஈழநாடு ஒரு நல்ல மார்க்கெட். இது யாவரும் ஏற்றுக்கொள்வது.

இந்த பகைப்புலத்தை வைத்துக்கொண்டுதான் சமீபத்தில்—சென்ற நவம்பரில், இங்கு கடும் மழையும் புயலுமான நாட்களில், ஈழத்தில் எழுத்துத் துறையில் ஒரு புயல் வீசி அடித்திருந்ததை நாம் பார்க்க வேண்டும். இந்த ஒரு பரபரப்புக்கு காரணமாக இருந்தது அங்கு போயிருந்த 'கங்கை' ஆசிரியர் பகீரதன் வெளியிட்ட அபிப்ராயங்கள். (அவை இந்த ஏட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஆ-ர்.)

இந்த அபிப்ராயங்கள்மீது அங்குள்ள விமர்சகர்கள், எழுத்தாளர்கள் வாதத்தை எழுப்பி பத்திரிகைகளிலும் சொற்பொழிவுகளிலும் நடத்தி இருக்கிறார்கள். காரசாரமாகத்தான். இன்றைய இலங்கை எழுத்து நிலையைப் பற்றி ஒன்று சொன்னதுக்கு அவர்கள் பத்தாக இன்றைய தமிழ் நாட்டு எழுத்து நிலையைப்பற்றி விளாசிவிட்டார்கள்.

இந்த மாதிரி ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதற்கு நாம் திருப்திப்படவேண்டும். இன்றைய தமிழ்நாட்டு எழுத்துப் போக்குபற்றி இங்குள்ள பொறுப்பான கருத்து அறிவிப்பவர்கள் ஏதாவது குறிப்பிட்டால், 'சொல்லப் போச்சா' என்று, 'அவர்கள் தோற்றவர்கள், வெற்றியைக்கண்டு பொறாமை, என்றெல்லாம் தனி சம்பாஷணைகளில் மட்டுமல்ல, எழுத்தில் மட்டுமல்ல மேடைமீது ஏறியும் கொட்டி வருகிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு 'வளப்பம்—தேக்கம்' விவகாரம் நடந்தது அன்பர்களுக்கு ஞாபகமிருக்கும். அதன் தூவானமாக இன்றும் பேச்சுகள் இருக்கின்றன. இப்போது இந்த 'வெற்றி பெற்ற', பெரும்தொகை வாசக அபிமானம் பெற்றுள்ள எழுத்தாளர்கள், பத்திரிகைகள், எழுத்து இவைகளைபற்றி இவர்களது இலங்கை வாசகர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை கொஞ்சம் பார்க்கட்டும். வாய்திறந்து அதுவும் இவ்வளவு அழுத்தமாக, முடிவாக ஈழத்து வாசகர்கள் தங்கள் கருத்தை சொல்வது முதல்தடவை இது. பெட்டிக்குள் சுருண்டு படுத்திருந்த நல்லபாம்பை குச்சியால் குத்திவிட்ட பையன் காரியமாக யாரோ ஒருவர் ஏதோ, செய்யப்போய் அது சீறிப் பாய்ந்துவிட்டது. ஏதோ தான் ரொம்ப சிரமப்பட்டு ஒரு உண்மையை கண்டுபிடித்து, துணிச்சலாக சொல்லிவிட்டதாக நினைக்கையில் பேருண்மைகளை வாங்கிக் கட்டிக் கொள்ள ஏற்பட்டுவிட்டது. இங்கு தமிழ் நாட்டில் இலக்கிய சர்ச்சை என்றால், நமக்கும் வேண்டாம், நமது பத்திரிகைக்கும் வேண்டாம் என்றும், இலக்கிய விமர்சகர்கள் என்றால்' துஷ்டப்பிள்ளைகள்' என்று கருதி 'துஷ்டர்களை கண்டால் தூர விலகு' என்றபடியும் ஒதுங்கிப் போய்விடுகிறவர்கள் கடல் கடந்து போய் பேட்டியிலும் சொற்பொழிவுகளிலும் இங்கு சொல்லத் துணியாததை அங்கு சொல்வது பழக்கமாகி விட்டது. ஆனால் அங்கேயுள்ள 'துஷ்டப் பிள்ளை'களிடம் அகப்பட்டுக் கொண்டு தவிக்க ஏற்பட்டுவிட்டது. அங்கே 'போய் நான் தாய்—நீ சேய்', 'எனக்கு முப்பது வயது—உனக்கு பத்து வயது', 'நான் குரு—நீ சீடன்' என்றெல்லாம் அசட்டு பாகுபாடுகளை உண்டாக்கி உளறினதால் வந்தவினை இது. 'தாய்எட்டடி', குட்டிபதினாறு அடி', 'குருவுக்கு மிஞ்சின சிஷ்யன்' என்பதும் இவர்களுக்கு ஞாபகம் இல்லைபோலும். வயதை வைத்துத்தான் சாதனையை கணக்குப் போடுகிறதோ? ஒருவிதத்தில் இது சரியாக இருக்கலாம். பத்திரிகையின் விற்பனையைப் பொறுத்து பத்திரிகையின் தரத்தையும், வாசகர்கள் தொகைப் பெருக்கத்தைக்கொண்டு தங்கள் படைப்புகளின் தரத்தையும் நிர்ணயித்துக் கொள்பவர்களுக்கு இதுவும் சரியான கணக்கு தானே?

இரண்டு சிறுகதை எழுதினவர்கள் விமர்சனம் செய்ய வரக்கூடாதாம். சமைக்கத் தெரிந்தால்தான் மனைவி சமயலில் குற்றம் கண்டுபிடிக்க உரிமை உண்டு என்கிறதாக இருக்கிறது இது. 'ஆர்னல்டு, ரிச்சர்ட்ஸ், லெவிஸ் போன்ற மேனாட்டு விமர்சகர்கள் இலக்கிய படைப்பாளிகளா?' என்று சரியாக கேட்டார் சிவகுமாரன். ஆனால் சிவகுமாரனுக்கு சொல்கிறேன், 'ஐயோ. இந்த பெயர்களை எல்லாம் இவர்கள் கேட்டதே இல்லையே!

'முப்பது' வயது பெருமை இருக்கிறதாம் தமிழ் சிறுகதை படைப்புக்கு! உண்மைதான் அவர்களும் அதை மறுக்கவில்லை. இப்போது பக்கவாதக் கையாக நடுங்குகிறதே அல்லது மரத்துப்போனதே உங்கள் பேனா எல்றுதானே சொல்கிறான் விறைப்பாக பேனா பிடித்த உங்கள் 'பத்து' வயதான தம்பி. 'மணிக்கொடி குழுவிற்குப் பின்னர் சமீப காலத்தில் சிறுகதை வளர்ச்சி அந்த ஆரம்பத்திற்கேற்ற வளர்ச்சி யுடையதாக இல்லை' என்கிறார் கா. சிவத்தம்பி என்ற விமர்சகர். எவ்வளவு சரியாக சொல்கிறார். 'ஆரம்பத்திற்கேற்ற வளர்ச்சி' என்பதை தமிழ்நாட்டு எழுத்தாளர்களும் பத்திரிகாசிரியர்களும் கவனத்தில் போட்டுக்கொள்ளவேண்டும். அன்று முப்பது வருஷங்களுக்குமுன் அவர்கள் எழுதின மாதிரியே இன்று இவர்கள் எழுதுகிறார்கள் (உண்மையில் அப்படியும் எழுதவில்லை)என்றுவைத்துக்கொண்டாலும் அது வளர்ச்சி, முன்னேற்றம் அல்ல. முப்பதுக்களுக்குப்பின் நாம் வளரவில்லை என்பதுதான் அர்த்தம். இதெல்லாம் உலக சிறுகதை இலக்கியம் இன்று வளர்ந்துள்ள நிலையை அறியாததன் கோளாறு. 'வ. வெ. சு. அய்யர், புதுமைப்பித்தன், கு. ப. ரா., ந. பிச்சமூர்த்தி ந. சிதம்பரசுப்ரமண்யன், மௌனி... ஆகிய பெயர்களே இவருக்குப் புதிதாக இருக்கின்றன! அதாவது கடந்த முப்பது நாற்பது ஆண்டுச் சிறுகதை மரபில் வந்தவரல்லர் இவர். இந்நிலையில் இவரால் சிறந்த சிறுகதைகளை எப்படிப் படைக்க முடியும்? கால்நூற்றாண்டு காலத்திய தமிழ் இலக்கிய ஞானமே இன்றைய சிறுகதை ஆசிரியருக்கு இல்லை ... ஸ்டெயின்பெக்கையும் ஹெமிங்வேயையும் எங்கே படித்திருக்கப்போகிறார்? உலக இலக்கிய பாரம்பரியம் இவருக்கு எங்கே இருக்கப்போகிறது?' என்று நம் நாட்டு விமர்சகர் தி. க. சிவசங்கரன் இன்றைய சிறுகதை ஆசிரியர்களைப்பற்றி கூறி இருக்கிறார். அப்படி இருக்க, சமீபத்திய உலக சிறுகதை ஆசிரியர்கள் வரைக்கும் தெரிந்துகொண்டிருக்கிற இலங்கை தமிழ் எழுத்தாளர்களைப் போய், ஒன்றிரு மேல்நாட்டு தொகுதிகளை மட்டும் யாரோ சொல்லக் கேட்டு வாங்கிப் படித்துவிட்டு அதையேபற்றி பேசிக்கொண்டிருக்கிற நம் எழுத்தாளர் பிரதிநிதிகள் 'நீங்கள் பிறநாட்டு இலக்கியங்களை படிக்க வேண்டும். அவர்களது உத்திகளை அறிந்துகொள்ள. வேண்டும் என்கிறார்களே. இது பரிகாசத்துக்கு உரியதாக இல்லை? 'நீங்கள் படித்து என்ன உத்தி வகைகளை கையாண்டிருக்கிறீர்கள்' என்று கேட்டால்? 'கேட்டால்' என்ன, கேட்கிறார்கள். பதில் சொல்ல வாய் இருக்கிறதா இவர்களுக்கு? இவர்களது 'வண்ணா', 'மாவட்ட' 'முத்திரை' கதைகளே பேசுமே இவர்கள் உலக இலக்கியம் படித்து கையாளுகிற உத்திவகை லட்சணத்தை.

குருவாம் சீடனும்! இந்த 'பரமார்த்த குரு'க்களுக்கு சீடனைஅவர்கள் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்களா? அது கிடக்கட்டும். 'குரு' என்று சொல்லிக் கொள்கிறவர்கள் இங்கு முப்பது வருஷத்தில் தங்களுக்கு குருவாக யாரையாவது ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா? செத்துப்போன கு. ப. ரா., புதுமைப்பித்தன் இருவரையுமாவது குருவாக வைத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தாலும் அந்த வழியில் ஒரு சிறந்த எழுத்தாளரை காட்டுங்கள் பார்க்கலாம். மகாராஜபுரம் பாணியில் ஒருவர் சிறப்பாக தன் கற்பனையும் கலக்க பாடினால் சீடர் என்று ஏற்கலாம். இந்த 'இலக்கியச் சீடர்கள்', காந்தியைப்பற்றி துதித்து பேசிக்கொண்டு காந்தீயத்தை பறக்கவிட்ட நம் இன்றய அரசியல்வாதிகளைப் போலத்தானே தங்கள் குருக்களையும் பற்றி பேசுகிறவர்கள்? இலங்கை எழுத்தாளர்களிடம் போய் குரு-சிஷ்ய வம்பு எதற்கு?

இன்னும் இப்படி இவர்கள் அபத்தங்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்துகொண்டே போகலாம். ஒரு சகோதர நாட்டுக்கு போய், நமது இலக்கியம் பற்றி அவர்கள் அறியும்படியாக சொற்பொழிவுகள் செய்து, அவர்கள் இலக்கியம்பற்றி நாமும் கேட்டு, பார்த்து, அறிந்துகொண்டு வருவதுதான் மேல்நாடுகளிலிருந்து இந்தியா வரும் எழுத்தாளர்கள், விமர்சகர்கள், பத்திரிகைக்காரர்கள் செய்கிறார்கள். தங்கள் தேவைகளைத் தெரிவிக்கிறார்கள். தாங்கள் புதிதாகவும் எதிர்பார்க்கிறார்கள். இந்த நம் பிரதிநிதிகளோ இப்படித்தான். அவர்கள் இலக்கியம் பின்தங்கியது என்ற, தான் கண்டறிந்த உண்மையை சொல்லியாக வேண்டும் என்று விரும்பினால் அதை மென்மையாக தக்க ஆதாரங்களுடன் சொல்லவேண்டும். 'பண்பாடு, பண்பாடு' என்ற கூச்சல் காதை துளைக்கிற இந்த நாட்களில் (பண்பாடு நமக்கு இல்லாததால் தான் இப்படி கூச்சல் போடுகிறோம் என்றார் ஒரு நண்பர்) இந்த பண்பாட்டை தாயகத்து கரையில் அல்லது விமானநிலயத்தில் வைத்துவிட்டுப் போய் விடுவானேன்? இதற்கு மாறாக 'சரஸ்வதி' ஆசிரியர் விஜயபாஸ்கரன் பல இடங்களில் தன் கருத்தை பண்பாட்டுடனும், உறுத்தியும் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார். இலங்கை எழுத்தாளர்கள், விஷயம் பற்றி அதிகம் கவனிக்கிறார்கள், உருவம்பற்றி கவனிப்பதில்லை, வேகம் இருக்கிறது முதிர்ச்சி பற்றாது என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார். இதை எல்லாம் சுமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஏனென்றால் இது விமர்சன வழியானது. அதை விட்டு இப்படி குத்து மதிப்பாக, 'பொத்தம் பொதுவாக' சொல்லித் தொலைத்ததால் தானே, 'நீங்கள் எங்கள் இலக்கியங்களை எவ்வளவு, படித்திருக்கிறீர்கள், உங்கள் விமர்சன அளவுகோல் என்ன? உங்கள் இலக்கிய சாதனை என்ன என்றெல்லாம் அவர்கள் விண்டுவிண்டு கேட்க ஏற்பட்டது. உண்மையில் அந்த விவகாரக் கடிதங்களை பார்க்கும்போது இவர்களுக்கு பதில் சொல்லவே இயலாது. அவ்வளவு உணர்த்தி இருக்கிறார்கள்.

முன்பு சென்றிருந்த ஒரு தமிழ்நாட்டு 'இலக்கிய' மாதப்பத்திரிகாசிரியர் தனிப்பேச்சில் பின் வருமாறு சொன்னாராம்: 'மணிக்கொடிக்காரர்களா? அவர்கள் அந்த காலத்தில் எதை வேண்டுமானாலும் போடுவார்கள். அப்படி எல்லாம் போடமுடியுமா?' என்று. இப்பொழுது இன்னொரு தகவலும் கிடைத்திருக்கிறது. பத்திரிகைகளில் வெளிவராதது. ஆனால் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினதாக தெரியவருவது. உண்மை என்று நினைக்கிறேன். ஏனெனில், மற்றதெல்லாம் சேர்த்துபார்க்கிறபோது

அனுமானிக்க முடிகிறது. சமீபத்தில் சென்றிருந்த நா. பார்த்தசாரதி சொன்னாராம். 'தமிழ் நாட்டில் தான் மணிக்கொடி மணிக்கொடி என்று (முட்டாள் தனமாக என்ற வார்த்தையை உபயோகித்ததாக ஒருவர் சொன்னார். அது இருக்காது என்று தான் நம்புகிறேன்) உடுக்கு அடிக்கிறார்கள் என்றால், இங்கும் அது மாதிரி (முட்டாள்கள் 'என்று கூறியதான் வார்த்தையும் இருக்காது என்று நம்புகிறேன்) இருக்கிறார்களே' என்றாராம். இவர்கள் போன காரியம் எதுவோ அதை பார்த்துக்கொண்டு திரும்பலாம். தங்கள் கட்சியை எடுத்துச் சொல்லலாம், பேஷாக. மேல்நாட்டில் மில்டன் போன்றவர்களுக்கு எல்லாம் சிறந்த கவி அல்ல என்றெல்லாம் ஆபத்துகள் வருகிறமாதிரி, இந்த மணிக்கொடி கோஷ்டி, காலம் இதைப்பற்றி ஆதாரத்துடன் பிளந்து கட்டலாம். உரிமை உண்டு நிச்சயம். தகுதிதான் அவர்களுக்கு வேண்டும். தங்களுக்கு அந்த தகுதி இருப்பதாக கருதினால் இலக்கிய விசாரத்தில் இறங்கட்டும். 'மணிக்கொடி'யை கிழித்து எறியட்டும். தமிழகம் அதை மறக்கச் செய்யட்டும். ஆனால் இப்படி பண்பாடுமட்டும் அல்ல, விஷயஞானமே இல்லாமல் பேசவேண்டாம். இந்த எழுத்தாளர்கள் ஒன்றை தெரிந்து கொள்ளட்டும். மணிக்கொடிக்கு உடுக்கு அடிக்கிற எந்த தனிமனிதனும் வாசகனுகத்தான் உடுக்கு அடிக்கிறான். வாசகர்கள் என்பதை மறுபடியும் அழுத்திச் சொல்கிறேன். நீங்கள் குறிப்பிடுகிறீர்களே, முன் நின்று பேசுகிறீர்களே அந்த வாசகன். உடுக்கு அடிக்கிறான் என்று அவனை நாக்கை நீட்டி சொல்லாதீர்கள். உங்கள் வாக்கியத்தின் அர்த்தம் என்ன தெரியுமா? 'மணிக்கொடிக்கு உடுக்கு அடிக்காதே; எனக்கு உடுக்கு அடி' என்பதுதான். உங்களுக்குப்பின் வருபவன் உங்களை விட்டு தனக்கு அடிக்கக் கேட்பான். வள்ளுவருக்கும், கம்பருக்கும், இளங்கோவுக்கும், பாரதிக்கும் உடுக்கு அடித்துவரும் வாசகன் எந்த நல்ல எழுத்துக்கும் உடுக்கு அடிக்க தயங்கவேமாட்டான்—அதன் நல்ல அர்த்தத்தில். ஆனால் இங்கு அந்த வார்த்தை உபயோகிக்கப்பட்டிருப்பது இளப்பமாக. இது பேசப்பட்டிருந்தால் பண்பாடே இல்லாத பேச்சு. நம் மேடைகள்மீது ஏறி, கொட்டி வருவதை கடல் கடந்து போய் கொட்டவேண்டாம். இம்மாதிரி பேசும் நம்மைவிட அதிக விமர்சன ஞானம் உள்ள இலங்கை இலக்கிய அன்பர்களுக்கு தங்கள் வேலை தங்களுக்குத் தெரியும். இன்னொருவிஷயம் அவர் கூறியதாக பத்திரிகையில் வந்தது. ரசமானது. இலங்கை எழுத்தாளர்களைப் பார்த்து 'விற்பனை, கொள்முதல் ரீதியில் தமது படைப்புகளுக்கு தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இடம் கேட்பது தவறு, அவமானம்,' என்று குறிப்பிட்டிருக்கிறார். உண்மை, அவர்கள் அந்த அடிப்படையில் கேட்பது சரியல்லதான். ஆனால், 'இத்தனை ஆயிரம் பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகையில் எங்கள் கதை வெளிவருகிறது. ஒரு பத்திரிகையை சராசரி இத்தனை பேர்கள் படிக்கிறார்கள். ஆக எங்களுக்கு மொத்தம் இத்தனை வாசகர்கள். ஆகவே, நாங்கள் வெற்றி பெற்ற, இலக்கியத்தரமான, மக்கள் விரும்பும் எழுத்தாளர்கள்' என்று பெருமைப்பட்டுக் கொள்வதும் இந்த விற்பனை, கொள்முதல் ரீதி கணக்குத்தானே. மானம் அவமானம் பேச்சு எதற்கு?

இந்த அன்பர் இன்னொன்றும் குறிப்பிட்டதாகவும் தெரியவருகிறது. பொதுக்கூட்டத்தில் பேசியது தானும். 'எழுத்து' பத்திரிகையைப் பற்றி ஏதோ பேச்சு வந்த போது குறிப்பிட்டாராம்; 'அவர் பத்திரிகையா நடத்துகிறார். ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக. கிழிந்த பையும் குடையுமாக சந்தாவுக்காக வீடுவீடாக ஏறிக்கொண்டிருப்பார். எனக்கே அவரை பார்க்க பரிதாபமாக இருக்கும். நான் சந்தாதாரர் ஆக இருந்தேன். நிறுத்திவிட்டேன்.' வாசகம் எப்படியோ, கருத்து இதுதான் என்று அன்பர் குறிப்பிட்டார். இது உண்மையாக இருக்காது, இப்படி கருத்துப்பட பேசி இருக்கமாட்டார் என்றுதான் கேட்ட பிறகும் நினைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் காதில் விழுந்ததை வைத்து பேசிக்கொள்வோம். மறுப்பு வந்தால் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நா. பார்த்தசாரதிக்கு 'எழுத்து' ஆசிரியர் மிகவும் கடமைப்பட்டவர் ஆகிறார். இதைவிட வேறு யார் இவ்வளவு அக்கறையாக எழுத்து ஆசிரியரின் தோற்றத்தைப் பற்றியும் 'எழுத்து' நடத்தப்படுகிற விதத்தைப் பற்றியும் வெளித்தெரியவைக்க முடியும்? ஆகவே அவரது நன்றி கிடைக்கும் இவருக்கு. இருக்கட்டும் அது. '...... சரஸ்வதி போன்ற பத்திரிகைகள் குறிப்பிட்ட லட்சியத்துக்காக நடத்தப்படுபவை. அவை பிரசுரிப்பவைகளை எல்லாம் 'கல்கி' 'ஆனந்த விகடன்', 'குமுதம்' போன்ற பத்திரிகைகள் பிரசுரிக்க மாட்டா. இவற்றிற்கு லட்சியத்தோடு வியாபார நோக்கமும் உண்டு' என்று பகீரதன் சொன்னதை ஒட்டி 'வியாபாரம், இலக்கியம் முதலானவை பொதுப்படையாக எல்லா பத்திரிகைகளுக்கும் இருக்கும். இதை குறை கூறமுடியாது' என்றார் இவர். ஏற்றுக் கொள்வோம். சந்தா சேர்க்க கிழிந்தபையும் குடையுமாக படியேறி கேட்பதில் என்ன இளப்பம்? பத்திரிகை விற்பனையை பெருக்க வழிசெய்ய 'எழுத்தாளர்—பத்திரிகாசிரியர், பத்திரிகை சொந்தக்காரர்' ஆகிய மூன்றும் ஒன்றும் சேர்ந்த ஒரு அந்தஸ்தில், இலங்கைக்கோ மற்ற ஊர்களுக்கோ போவதும் ரொம்ப கவுரவமா? இல்லை, ஒரு குறிப்பிட்ட பத்திரிகை நடக்கும் ஒரு சிறுகதைப் போட்டிக்கு ஆதரவு தேட எழுத்தாளர்களை எழுதத் தூண்டிக் கேட்க ஒரு பண்டிதப் போக்கு எழுத்தாளர் கடல் கடந்து போவதும் கவுரவமா? இல்லை. போயிருந்த இடத்தில் தான் பங்கெடுத்துக்கொண்ட கூட்டத்தில் மற்றவர்கள் பேசுகையில்—அவர்கள் எதுவும் பேசட்டும்—நடுவில் குறுக்கிட்டுக் குறுக்கிட்டுப் பேசி, 'இது தான் உங்கள் தமிழ் நாட்டுப் பண்போ' என்று ஒரு சொற்பொழிவாளர் கேட்கவும், 'பார்த்தசாரதியின் குறுக்கீடு ஒழுங்கற்றவை' என்று தலைவர் கண்டிக்கவும் (இவை இலங்கை பத்திரிகையில் வெளியானவை) ஏற்பட்டதே. அதுதான் கவுரவமா? குட்டி குலைத்து தாய் தலையில் வைத்த விதமாக 'தமிழ் நாட்டுப் பண்போ' என்று கேட்கும்படியாக நடந்துகொண்டதுதான் கவுரவமா? உபதேசிக்கப்போய் உபதேசம் அல்லவா தேவைப் பட்டிருக்கிறது!

—அசுவதி

சமீபத்தில், சென்ற நவம்பரில் இலங்கை தமிழ் எழுத்து உலகில்-பத்திரிகை, சொற்பொழிவு உலகில்-ஒரு பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அது, அவர்களுக்குள்ளேயே, அவர்களை மட்டும் பொறுத்ததாக இருந்தால் மூன்றும் மனித பார்வை போதும் நமக்கு. ஆனால், அங்கு சென்றிருந்த நம் தமிழகத்து எழுத்தாளர்கள் சம்பந்தப்பட்டு நம் நாட்டு இலக்கிய நிலையையும் பற்றியதாக இருக்கிறது. நம் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ள இந்த விவகாரம் பற்றிய தஸ்தாவேஜுகள் பல பக்கங்களுக்கு வரும். எனவே இவர்கள் அவர்களைப்பற்றி சொன்னதில் அவர்கள் இவர்களைப் பற்றி சொன்னதில் ரசமானதை, அவசியமானதைப் பொறுக்கித் தரப்படுகிறது.

ஈழத்து எழுத்து பற்றி

தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கும், ஈழத்து எழுத்தாளர்களுக்கும் உள்ள தராதரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. தமிழ்நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களைவிட ஈழத்து சிறுகதை எழுத்தாளர்கள் பத்து ஆண்டுகள் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள்.

உண்மையாகவே ஈழத்து எழுத்தாளர்கள் சிறுகதை இலக்கியத்துக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டால் மனத்தை விசாலப்படுத்திக்கொண்டு மற்றநாட்டு எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் அபிப்ராயங்களையும் பார்க்க வேண்டும்.

இது ('ஆழமும் ஆத்ம தரிசனமும் கொண்ட மறுமலர்ச்சி) தமிழ் எழுத்தாளர்கள் பிறமொழி இலக்கியங்களை கூர்ந்து படித்து அதன் ஆழத்தையும் அகலத்தையும் புரிந்து கொண்டதினால் ஏற்பட்டது. அப்படிப் பண்பட்ட தமிழ்நாட்டு எழுத்தாளர்களுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் ஈழநாட்டு தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இல்லை.

அவர்கள் மற்றமொழிகளில் உள்ள சிறுகதைகளைப் படிக்கவேண்டும். அந்த சிறுகதைகளின் பாணிகள் உத்திகள் முதலியவற்றை புரிந்துகொள்ள வேண்டும்...

இரண்டு சிறுகதைகள் எழுதியவர்கள் கூட ஈழ, இந்திய, உலக எழுத்தாளர்களைப்பற்றி இந்த நாட்டில் விமர்சனம் செய்கிறார்கள்.

தமிழ்நாட்டு சிறுகதைக்காரர்களுக்கு முப்பது வருட அநுபவம். ஈழத்து சிறுகதைப் படைப்பாளருக்கு பத்து வரு அநுபவம். அவர்கள் குருக்கள். இவர்கள் சிஷ்யர்கள். குருவையும் சிஷ்யரையும் ஒப்பிடலாமா ?

'சரஸ்வதி' போன்ற பத்திரிகைகள், குறிப்பிட்ட சில லட்சியத்துக்காக நடத்தப்படுபவை. அந்தப் பத்திரிகைகள் பிரசுரிக்கும் விஷயங்களை எல்லாம், நிச்சயமாக கல்கியும் ஆனந்தவிகடனும் குமுதமும் பிரசுரிக்கமாட்டா. இவற்றிற்கு லட்சியத்தோடு வியாபார நோக்கமும்உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது.

சங்க இலக்கியம், மேனாட்டு இலக்கியங்களை ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் வாசிக்க வேண்டும்.

—பகீரதன்.

இலங்கையின் சமீபகால சிறுகதைப் படைப்புக்கள் பல தமிழ் நாட்டு சிறுகதைப் படைப்புகளுடன் ஒப்பிடுகையில் பத்துவருடம் பின்தங்கியவை என நான் கருதவில்லை. உருவம் உள்ளடக்கத்தைப் பொறுத்த அளவில் தமிழ்நாட்டு எழுத்தாளர்களுடன் ஒப்பிடக்கூடிய எழுத்தாளர்கள் இலங்கையில் பலர் இருக்கிறார்கள்.

'இலக்கியம் நல்ல முறையில் நாட்டிற்கும் எழுத்துலகிற்கும் நன்மை பயக்கக்கூடிய விமர்சிக்கக்கூடிய தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டைவிட ஈழத்தில் அதிகமாக இருக்கிறார்கள். இலக்கியங்களை விமர்சனம் பண்ணுவதில் இலங்கையில் பொறுப்புணர்ச்சி இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலும் நாடகத் துறையில் எந்தவித வளர்ச்சியும் இல்லை.

இலங்கைத் தமிழ் தங்களுக்கு விளங்கவில்லை என தமிழக பத்திரிகையாசிரியர் சிலர் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத காரணம். சென்னைத் தமிழ் கோயமுத்தூர்வாசிகளுக்கு புரிவதில்லையே. பல இடங்களினதும் மொழி வழக்குகள் பத்திரிகைகள் மூலம் ஒன்று சேருவது தமிழ் மொழிக்கு வேண்டிய தொன்று.

இலங்கை எழுத்தாளர்கள் இன்று தமது நாட்டுப் பின்னணியைக் கொண்டே எழுபத்தைந்து சதமான கதைகளை படைக்கிறார்கள்.

இலங்கை எழுத்தாளர் மத்தியில் இருப்பது போல் முற்போக்கு, முற்போக்கு அல்லாத எழுத்தாளர் என்ற பிரச்னை எதுவும் தமிழகத்தில் கிடையாது. முற்போக்கு எழுத்தாளர் என்று கருதிக் கொள்வோர் தொகை அங்கு மிகக்குறைவாக இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம் இந்த வரையளவு இலக்கிய வளர்ச்சிக்கு தடையாக இருந்து விடலாம் என்ற கருத்து தமிழகத்தில் நிலவுகிறது.

இலங்கை எழுத்தாளர்கள் ஒரேயொரு விஷயத்தை கருத்தில் கொள்ளவேண்டும். கதையின் கருவைப் பொறுத்தவரை அதிக கவனம் செலுத்துகிறார்களே தவிர உருவைப்பற்றி சிந்திப்பதில்லை. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

—வ. விஜயபாஸ்கரன்

இலங்கை எழுத்தாளர்கள் விற்பனைக் கொள்முதல் ரீதியில் தமது படைப்புகளுக்கு தமிழ்நாட்டு பத்திரிகைகளில் இடம் கேட்பது தவறு; அது அவமானம் கூட.

—நா. பார்த்தசாரதி

தமிழ் எழுத்து பற்றி

பாரதி கவிதை பாடிய அதே காலத்திற்றான் யமகம் திரிபு நிறைந்த கவிதைகளும் தோன்றுகின்றன என்பதையோ, லா. ச. ரா. போன்றார் புது உத்திகளைக் கையாண்டு சிறுகதை எழுதும் தென்னிந்தியாவிலேதான் ஆரணி குப்புசாமி முதலியாரின் தலையங்கங்களை நினைவு படுத்தும் தலையங்கங்களைக் கொண்ட சிறுகதைகளை எழுதும் ஆசிரியர்களும் இருக்கின்றனர் என்பதையோ நினைவில் நிறுத்தி இவை காலவழு என்று நீக்கி இவற்றாடே தோன்றும் பொதுப்பண்பினையே எடுத்துக்கொள்ள வேண்டும்... தொல்காப்பியருக்கும் சிறுகதை தெரிந்ததே என்ற கதையை ஒதுக்கிவிட்டு, உண்மை வரலாற்றைப் பார்த்தால் தமிழிலக்கியத்துறையில் சிறுகதை என்பது இலக்கிய உருவமாக வளரத் தொடங்கியது மேனாட்டு இலக்கியச் செல்வாக்கினாலேயே என்பது எந்த தமிழ் சிறுவனுக்கும் தெரியும்... தொடர்ந்து இந்தியத் தமிழ்ச் சிறு கதைகளையும், ஈழத்தமிழ்ச் சிறுகதைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியத் தமிழ் எழுத்துலகில் மணிக்கொடிக்குழுவிற்குப் பின்னர், சமீபகாலத்தில் சிறுகதை வளர்ச்சி அந்த ஆரம்பத்திற்கேற்ற வளர்ச்சியுடையதாக அமையவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர்... சிறுகதைத் துறையில் பெரியதொரு தேக்கம் ஏற்பட்டிருப்பதை நாம் காணலாம். 1960-ம் ஆண்டு தீபாவளி மலர்ப் படைப்புகள் அங்குள்ள சிறுகதை வறட்சிக்கு நல்ல உதாரணங்கள். சமூகச் சீர்திருத்தம் என்று சொல்லி ஆபாசம் வார்த்த ஓர் இலக்கியக் குழுவினரும் நாடகத்தையும் சினிமாவையும் தமது முக்கிய சாதனமாகக் கொண்டுவிட இலக்கியத்தின் சமூகப் பண்பினை உணராதவர்களே அங்கு சிறுகதைகள் இயற்றுகின்றனர் என்பதை நாம் அறியலாம்.

—கா. சிவத்தம்பி

நல்ல இலட்சியத்தோடு சிலர் எழுதுகிறார்கள். அவர்களுக்கு ஈழத்தில் இருக்கும் வரவேற்புகூட இந்தியாவில் இல்லை. பத்திரிகையைப் பக்கம் பண்ணியும் படம் பார்த்தும் வாங்கும் வாசகர்களுக்காக அவர்கள் எழுதுவதில்லை... நிலையான இன்பம் தர வல்ல இலக்கியங்களை படைப்பவர்கள் அவர்கள். இவர்களோடு போட்டியிட்டு முந்திக்கொண்டு இன்று பரிசுகள் பெறுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களை சுவாரஸ்மான எழுத்தாளர்களென்று சொல்வார்கள். இன்று பெரும்பான்மையான பத்திரிகைகளில் எழுதிப் பெரும் வாசகக் கூட்டத்தை சம்பாதித்து விட்டவர்கள் இவர்கள்தான். ஏற்கெனவே கையாளப்பட்ட கருத்துகளையே சிதைவு செய்து வாசகர்களின் குறையை புரிந்து கொண்டு சுவாரஸ்யமாக எழுதும் திறமை கைவரப்பெற்றவர்கள்... எழுத்தாளர் தரம் பற்றி விவாதிக்கப் படுகிறது. எல்லாவற்றிற்கும் மூலகாரணமான வாசகர்கள் நிலைபற்றி நோக்குவதுதான் முக்கியம். பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் முன்னிருந்தவர்கள் போன்ற பத்திரிகைக்காரரும் வாசகரும்தான் இன்றும் அநேகமாக இருக்கிறார்கள்.... இலக்கியங்களை முறையாக மதிப்பிடும் அறிவை இன்னமும் அவர்கள் பெறவில்லை. அவர்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுவிட்ட பத்திரிகைகள் அந்த அறிவை இன்னமும் அவர்களுக்கு ஊட்டவில்லை என்பதும் தவறாகாது... இங்கே, ஜனரஞ்சகமான இந்திய எழுத்தாளருக்கும் ஈழத்து எழுத்தாளருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டவேண்டும். இது எல்லோருக்கும் பொருந்தாவிட்டாலும் பொதுவான உண்மைதான். மொழியின் அவசியத்தை பெரிதும் கவனித்து ஈழத்தார் எழுதுவார்கள். ஜனரஞ்சகமான இந்திய எழுத்தாளர் படைப்புக்களில் அலங்காரமும் நீண்ட விளக்கங்களும் இருக்கும். அது பொதுமக்களுக்கு மிகவும் கவர்ச்சியாக இருக்கும். ஈழத்து எழுத்தாளர்கள் கருத்தை அநேகமாக கருத்தாகவே தருவார்கள். கதைகளில் கற்பனையும் சுவையும் இருக்கவே செய்யும். ஆனால், ஒரு, மீண்டும் மீண்டும் கையாளப்பட்ட சின்ன விஷயத்தை நீட்டி விரித்து சுவை சேர்த்து அலங்காரம் பண்ண இவர்களுக்குத் தெரியாது... ஜனரஞ்சகமான பிரபல இந்தியப் பத்திரிகைகளில் கணக்கின்றி வெளியாகும் கதைகளைப் பார்க்கும்போது அவற்றில் ஈழத்து எழுத்தாளரியின் கதைகளுக்கு இடங் கிடைக்காதது குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

— சி. தில்லைநாதன்

...மணிக்கொடிப் பரம்பரையினருக்குப் பிறகு தமிழ் நாட்டில் சிறுகதை வளரவில்லை என்றே சொல்லலாம். மணிக்கொடி தொடங்கிய பணியை ...'சரஸ்வதி' பத்திரிகை செய்கிறது... தமிழ் நாட்டில் எழுத்து இப்பொழுது ஒரு முக்கிய கைத்தொழிலாக மாறி இருக்கிறது. அங்குள்ள எழுத்தாளர்கள் அநேகம் பேர் பணத்துக்காகத்தான் எழுதுகிறார்கள். இலக்கியத்தை ஒரு லட்சியமாகக் கொண்டு எழுதுபவர்கள் மிகக்குறைவு... தமிழில் ஏறக்குறைய பத்து லட்சம் கதைகள் வெளியாகி இருக்கின்றன என்றுஒரு தென்னிந்திய எழுத்தாளர் பெருமையுடன் கூறினார். இப்பத்து லட்சம் கதைகளில் எத்தனை எஞ்சியுள்ளன என்று நாம் கவனிக்கும்போது நூற்றுக்குக் குறைவான கதைகள்தான் இன்றும் படிக்கத் தகுதி வாய்ந்தன.. எமக்குப் பத்து வருடங்களுக்கு முன்னால் போய்க்கொண்டிருக்கும் இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் இந்த நிலையிலிருக்கின்றன.

— முஹம்மது சமீம்

ஒரு விமர்சகன் சிருஷ்டி இலக்கிய கர்த்தாவாக இருந்து எண்ணற்ற பத்திரிகைக் கதைகளை எழுதிக் குவித்துக்கொண்டுதான் விமர்சிக்கவேண்டும் என்ற நியதியா என்ன? ஆர்னால்ட், அடிசன், ரிவிங் பிரெஸ்கொட், ரிச்சர்ட்ஸ், லெவிஸ் போன்ற மேனாட்டு இலக்கிய விமர்சகர்கள், நிறைய எழுதிக் குவித்த சிருஷ்டி இலக்கிய கர்த்தாக்களல்ல. ஈழ, இந்திய, உலக எழுத்தாளர்களைப்பற்றித் தாம் கற்ற கல்வி, பெற்ற அநுபவம், கிரகித்த அறிவு, படித்த நூல்கள், அறிந்த விமர்சன முறைகள், கொண்டுள்ள இலக்கியச் சூழ்நிலை போன்றவற்றிற்கு ஏற்ப இலங்கை விமர்கர்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களைச் செய்வார்களாயின் அதில் விசனிக்க என்ன இருக்கிறது?

—எஸ். சிவகுமாரன்

சிறுகதை

தோற்காதவன்

எர்னஸ்ட் ஹெமிங்வே

டான் மினுயல் ரெடனுவின் ஆபீசுக்கு படி ஏறிச் சென்றுன் மானுயல் கார்சியா. சூட்கேஸை கீழே வைத்துவிட்டு கதவை தட்டினுன். பதில் இல்லே. முன் ஹாலில் நின்றுகொண்டு, மானுயல், யாரோ அறைக்குள் இருப்பதாக உணர்ந்தான். கதவை ஊடுருவி அவன் அதை உணர்ந்தான்.

'ரெடனு,' கவனித்து அவன் அழைத்தான்.

பதிலே இல்லே.

அவன் உள்ளேதான் இருக்கான், சரிதான், மானுயல் நினேத்தான்.

'ரெடனு,' கூப்பிட்டு அவன் கதவை இடித்தான்.

'யாரது?' ஆபீசிலிருந்து யாரோ கேட்டார்கள்.

'நான்தான், மானலோ,' என்றுன் மானுயல்.

'என்ன வேணும் உனக்கு?' குரல் கேட்டது.

'எனக்கு வேலே வேணும்' என்றுன் மானுயல்.

கதவில் பலதடவை கிளிக்கிட்டது, வீசி திறந்தது. சூட்கேஸை தூக்கிண்டு மானுயல் நுழைந்தான்.

அறையின் எட்டின கோடியில் சிறு சாய் மேஜைக்கு பின்னுடி ஒரு சின்ன ஆள் உட்கார்ந்திருந்தான். அவன் தலேக்கு மேலே மாட்ரிட் செத்த மிருக-தோல்-பொம்மை செய்பவர் ஒருவர் அமுக்கி அடைத்த ஒரு காளேயின் தலே இருந்தது. சுவர்களில் சட்டம் போட்ட போட்டோக்களும் காளேச் சண்டை சுவரொட்டிகளும் இருந்தன.

அந்த சின்ன ஆசாமி மானுயல்லே பார்த்துண்டே உட்கார்ந்திருந்தான்.

'உன்னே அதுகள் கொன்று போட்டதாகவே நான் நினேத்தேனே' என்றுன் அவன்.

மானுயல் தன் விரல் கணுக்களால் சாய்வு மேஜைமீது தட்டினுன். அந்த சின்ன மனிதன் சாய்மேஜைக்கு அப்பால் அவனே பார்த்துக் கொண்டே இருந்தான்.

'எத்தனே காரிடா (சண்டை) இந்த வருஷம் உனக்கு?' ரெடனு கேட்டான்.

'ஒன்றுதான்,' அவன் பதில் சொன்னுன்.

'அந்த ஒன்றுதானு?' அந்த சின்ன ஆசாமி கேட்டான்.

'அவ்வளவுதான்.'

பேப்பரில் அதைப்பற்றி படித்தேன்,' என்றுன் ரெடனு. நாற்காலியில் பின் சாய்ந்து மானுயல்லே கூர்ந்து பார்த்தான்.

'திணித்த' காளேயை பார்த்தான் மானுயல். முன்னம் அடிக்கடி அவன் பார்த்திருக்கிறுன். அதில் அவனுக்கு குடும்ப அக்கறை உணர்வு ஏற்பட்டது. ஒன்பது வருஷத்துக்கு முன்பு, முன்னுக்கு வந்த தன் சகோதரனே கொன்றது அது. அந்த நாள் மானுயல்லுக்கு ஞாபகம் இருந்தது. காளேயின் தலே பொருத்தி இருந்த கருவாலி கேடயத்தில் ஒரு பித்தளே தகடு இருந்தது. மானுயல்லுக்கு படிக்க முடியாது, ஆனுல் அது தன் சகோதரன் ஞாபகத்துக்கு என்று அவன் பாவித்துக்கொண்டான். ஆமாம், அவன் நல்ல பயலாக இருந்தான்.

தகடு சொன்னது; 'வெரகுவா பிரபுவின் காளே' 'மரிபோஸா' 9 வாராக்களேயும் 7 குதிரைகளேயும் பார்த்தது. அன்டோனியா கார்ஸியாவை கொன்றது, நொவில்லரோ, (முன்னுக்குவந்து சாதிக்க முடியாமல் போனவன்). ஏப்ரல் 27, 1909.'

திணித்த காளேத் தலேயை அவன் பார்த்துக் கொண்டே இருப்பதை கவனித்தான் ரெடனு.

ஞாயிற்றுக்கிழமைக்கு 'டியூக்' அனுப்பினதுகள் எல்லாம் பழிகொண்டாங்துவிடும்,' என்றுன் அவன். 'அதுகளின் கால்கள் ரொம்ப மோசம்' கேஃப் (ஹோட்டல்)லே அதைப்பற்றி என்ன பேசிக்கிறுர்கள்?'

'தெரியாது' என்றுன் மானுயல். இப்பொத்தான் நான் வந்தேன்.'

'ஆமாம்.' என்றுன் ரெடனு. 'இன்னும் உன் பையை வைத்துக்கொண்டுதான் இருக்கே.'

பெரிய சாய்மேஜைக்குப் பின் சாய்ந்து கொண்டு அவன் மானுயல்லே பார்த்தான்.

'உட்காரு' என்றுன் அவன். 'தொப்பியை எடுத்து விடேன்.' மானுயல் உட்கார்ந்தான்; தொப்பியை எடுக்கவும், அவன் முகமே மாறிக் காட்டினது. அவன் வெளுத்து தோன்றினுன். அவன் தொப்பிக்கு அடியில், துருத்திக் காட்டாதபடி அவன் தலேமேல் தூக்கிக்குத்தி இருந்தபின்னல் அவனுக்கு ஒரு புது தோற்றம் தந்தது.

'உன்னே பார்க்க நன்றுக இல்லேயே' என்றுன் ரெடனு.

'இப்பத்தான் ஆசுபத்திரியிலே இருந்து வரேன்' என்றுன் மானுயல்.

'உன் காலேயே வெட்டிட்டதாக கேள்விப் பட்டேனே,' என்றுன் ரெடனு.

'இல்லே,' என்றுன் மானுயல். 'அது சரியாகப் போச்சு.'

ரெடனு, சாய்மேஜை முன் சாய்ந்து மானுயல் பக்கம் ஒரு சிகரெட் மரப்பெட்டியை தள்ளினுன்.

'சிகரெட் பிடியேன்,' என்றுன் அவன்.

'நன்றி'.

மானுயல் பற்றவைத்தான்.

'நீ பிடிக்கவில்லே?' என்றுன் அவன் ரெடனுவுக்கு தீக்குச்சியை நீட்டிக்கொண்டே.

'வேண்டாம்,' ரெடனு கையலேத்தான். 'நான் புகைபிடிப்பதே இல்லே.

புகைபிடிக்கும் அவனேயே ரெடனு கவனித்தான்.

'ஏதாவது ஒரு உத்யோகம் பார்த்து வேலேக்குப் போகக்கூடாது?' என்றுன் அவன்.

'வேலைசெய்ய விரும்பவில்லைநான்,' என்றான் மானுயல். 'நான் மாடுகளோடே சண்டைபோடுகிறவன்.'

'மாடுகளோடு சண்டை போடுகிறவன் எவன் இருக்கிறான் இப்போ' என்றான் ரெடனா.

'நான் காளைச்சண்டை போடுகிறவன்,' என்றான் மானுயல்.

'ஆமாம். நீ அதிலே இருக்கிறபோது,' என்றான் ரெடனா.

மானுயல் சிரித்தான்.

எதுவும் பேசாமல் மானுயலையே பார்த்துண்டு இருந்தான் ரெடனா.

'உனக்கு இஷ்டமானால் ஒரு ராத்திரிக்கு ஏற்பாடு செய்கிறேன்,' ரெடனா முன்வந்து சொன்னான்.

'எப்போ' மானுயல் கேட்டான்.

'நாளை இரவு.'

'வேறு ஒருவருக்கு பதிலாக நான் இருக்க விரும்பவில்லை' என்றான் மானுயல். அவர்கள் எல்லாம் செத்துப்போனதே இந்த மாதிரி தான். சால்வடார் செத்ததும் அப்படித்தான். தன் விரல்களுக்களால் மேஜைமீது தட்டினான்.

'இருக்கிற நிலை இதுதான்.' என்றான் ரெடனா.

'அடுத்தவாரம் என்னைப் போடக்கூடாது நீ? என்றான் மானுயல்.

'உனக்கு சீட்டு விழாது,' என்றான் ரெடனா. 'அவர்கள் கேட்கிறதெல்லாம் லிட்ரி, ருபிட்டோ, லா டோரி. அவர்கள் நல்ல பயல்கள்.'

'எனக்கும் அது கிடைக்கிறதை பார்க்க வருவார்கள் அவர்கள்,' என்று மானுயல் நம்பிக்கையுடன் சொன்னான்.

'இல்லை, வரமாட்டார்கள். நீ யாரு என்கிறதே அவர்களுக்கு தெரியாது.'

'என்னிடம் நல்ல வேலை இருக்கு இன்னும்,' என்றான் மானுயல்.

'நாளை இரவுக்கு உன்னை போடுகிறேன்,' என்றான் ரெடனா. 'இளம்பயல் ஹெர்னாண்டஸ் கூட வேலை செய்யலாம். இரண்டு நொவில்லோக்களை (பருவத்துக்கு கொஞ்சம் மீறின அல்லது குறைவான வயது காளைகள்) கொல்லலாம்.'

'யாருடைய காளைகள்?' மானுயல் கேட்டான்.

'எனக்கு தெரியாது. கொட்டத்தில் இருக்கிற சரக்குதான். மிருக வைத்தியர்கள் பகலுக்கு அநுமதிக்காததுகளாக இருக்கும்.'

'பதில் ஆளாக நான் இருக்க விரும்பவில்லை,' என்றான் மானுயல்.'

'இந்தா, ஒப்புக்கொள், இல்லை, விட்டுவிடு,' என்றான் ரெடனா. காகிதங்களை பார்க்க முன் குனிந்தான். இதற்குமேல் அக்கறை இல்லை அவனுக்கு. ஒரு கணம் மானுயல் அவனிடம் வேண்டிக் கொண்டதும் பழைய நாட்களை அவன் நினைத்துக்கொண்டதும் போய்விட்டது. லாரிட்டாவுக்கு பதில் இவனை போட்டு விடலாம், ஏன்னால் பணசகாயமாக அமர்த்திவிடலாம். மற்றவர்களையும் மலிவாக பிடித்து விடமுடியும். அவனால் கொஞ்சம் இவனுக்கு ஒத்தாசை செய்யலாம் என்று பார்த்தான். அவனுக்கும் ஒரு வாய்ப்பும் கொடுத்திருக்கிறான். இனி அவன்பாடு.

'என்ன கிடைக்கும் எனக்கு?' மானுயல் கேட்டான். இன்னமும் அவன் மறுத்துவிடுகிற நினைப்போடேயே விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால், தான் மறுக்க முடியாது என்கிறதும் அவனுக்கு தெரியும்.

'இருநூற்று ஐம்பது பெஸட்டா (ஸ்பானிய ஃபிராங்க் நாணயம்)' என்றான் ரெடனா. அவன் நினைத்தது ஐந்நூறு. ஆனால் வாய்திறந்ததும் அது இருநூற்று ஐம்பது என்று சொன்னது.

'வில்லால்ட்டாவுக்கு ஏழாயிரம் கொடுக்கிறாயே நீ?' என்றான் மானுயல்.

'நீ வில்லால்ட்டா இல்லையே,' என்றான் ரெடனா.

'அது எனக்கு தெரியும்' மானுயல் சொன்னான்.

'அவனுக்கு அடிக்கிறது' என்று ரெடனா விளக்கினான்.

'அது சந்தேகமா' என்றான் மானுயல். எழுந்து நின்றான். 'ரெடனா, மூந்நூறாக கொடு.'

'சரி, வாங்கிக்கொள்' ரெடனா சம்மதித்தான். ஒரு கடுதாசிக்காக மேஜை டிராயரில் கையிட்டான்.

'இப்போது ஒரு ஐம்பது கிடைக்குமா?' மானுயல் கேட்டான்.

'பேஷாக,' என்றான் ரெடனா. தன் பாக்கட் புஸ்தகத்திலிருந்து ஐம்பது பெஸட்டா நோட்டை எடுத்து மேஜைமீது விரித்து வைத்தான்.

மானுயல் அதை எடுத்து தன் பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.

'குவாட்ரில்லா (காளைச்சண்டை போடுகிற படை) விஷயம் என்ன?' அவன் கேட்டான்.

'இரவு என் கிட்ட வேலை செய்கிற பசங்கள் இருக்கிறார்கள்,' என்றான் ரெடனா. 'அவர்கள் சரியான ஆட்கள்தான்.'

'பிகடார்கள் (குதிரை முதுகிலிருந்து காளையை ஈட்டியால் குத்துபவர்கள்) சமாசாரம்?' மானுயல் கேட்டான்.

'அதிக ஆள் இல்லை.' ரெடனா ஒப்புக்கொண்டான்.

'ஒரு நல்ல பிக் ('பிகடார்' சுருக்கம்) எனக்கு வேணுமே,' மானுயல் சொன்னான்.

'அப்போ அமர்த்திவிடு' என்றான் ரெடனா. 'போய் பிடித்து விடு.'

'இதிலே இருந்தா?' என்றான் மானுயல். 'இந்த அறுபது டியுரோவிலே இருந்து (டியுரோ = ஐந்து பெஸட்டா நாணயம்), எந்த குவாட்ரில்லாவுக்கும் நான் பணம் தரப்போகிறதில்லை.'

ரெடனா பேசவே இல்லை, பெரிய மேஜைக்கு அப்பால் மானுயலை பார்த்திருந்தான்.

'ஒரு நல்ல பிக்காவது எனக்கு வேணும் என்கிறது உனக்கு தெரியுமே,' என்றான் மானுயல்.

ரெடனா எதுவும் பேசவில்லை. தள்ளி இருந்து பார்க்கிற பார்வையாக மானுயலை பார்த்தான்.

'இது சரியில்லை' என்றான் மானுயல்.

ரெடனா தன் நாற்காலியில் பின்சாய்ந்து இன்னும் அவனைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான், எங்கேயோ இருந்து.

'வழக்கமாக உள்ள பிக்குகள் இருக்கிறார்கள்' என்று, தருவதாகச் சொன்னான்.

'எனக்கு தெரியும்' என்றான் மானுயல், 'உன் வழக்கமான பிக்குகளை எனக்கு தெரியும்.'

ரெடனு புன்னகைக்கவில்லை. விஷயம் முடிந்து விட்டதாக மானுயல் அறிந்து கொண்டான்.

'எனக்கு வேண்டியதெல்லாம் ஒரு சீரான இடைநேரம்தான்,' என்று மானுயல் நியாயம் விளக்கி சொன்னான். 'நான் அங்கே நேரே போகிற போது காளையை குறிபார்க்க சாத்யமாக இருக்கணும் எனக்கு.'

காது கொடுக்காத ஒருவனிடம் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

'அதிகப்படியாக எதாவது வேணுமானால் போய் அமர்த்து' என்றான் ரெடனு. 'அங்கே வழக்கமான குவாட்ரில்லா (படை) இருக்கும். நீ விரும்புகிற அத்தனை பிக்குகளையும் கொண்டுவா. 'சார்லொட்டா' பத்தரை மணிக்கு முடிந்துவிடும்.'

'ரொம்ப சரி' என்றான் மானுயல். 'நீ அதைப் பற்றி நினைக்கிறது அந்த மாதிரிதான் என்றால்.'

'அந்த மாதிரிதான்,' என்றான் ரெடனு.

'நாளை இரவு உன்னை பார்க்கிறேன்' என்றான் மானுயல்.

'நான் சரியாக அங்கே இருப்பேன்' என்றான் ரெடனு.

மானுயல் சூட்கேஸை எடுத்துக்கொண்டு வெளியே போனான்.

'கதவை சாத்திவிடு,' ரெடனு சொன்னான்.

மானுயல் திரும்பிப் பார்த்தான். ரெடனு ஏதோ கடுதாசிகளை பார்த்தவனாக முன்சாய்ந்து இருந்தான். கிளிக்கிடும்படியாக கதவை அமுக்கிச் சாத்தினான் மானுயல்.

படி இறங்கி கதவை தாண்டி தெருவின் வெப்ப ஒளிக்குள் சென்றான். தெருவில் உஷ்ணமாக இருந்தது. வெள்ளைக் கட்டிடங்கள்மீது பட்ட வெளிச்சம் கண்களில் பளிச்சென தாக்கி கண்களை உறுத்தியது. இறக்கமான தெருவின் நிழல் பக்கமாகவே 'பியூர்டோ டெல் சோல்'லை நோக்கிச் சென்றான். ஓடுகிற தண்ணீர் மாதிரி நிழல் அடர்ந்தும் குளிர்ந்தும் இருந்தது. ஊடோடும் தெருக்களை கடக்கும்போது வெப்பம் திடுமென வீசி அடிக்கும். தான் கடந்து சென்ற அத்தனை பேரிலும் மானுயல் தனக்கு தெரிந்த யாரையும் பார்க்கவில்லை.

பியூர்டோ டெல் சோல்லுக்கு கொஞ்சம் முன்னாடி ஒரு கஃபேக்குள் நுழைந்தான்.

கஃபே நிசப்தமாக இருந்தது. ஒரு சிலர் சுவர்ப்பக்க மேஜைகள்மீது உட்கார்ந்திருந்தார்கள். ஒரு மேஜையில் நாலுபேர் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். ஆண்களில் அநேகர் மேஜைமீது தங்கள் முன் காலி காபி கப்புகளும், மதுக் கோப்பைகளும் இருக்க புகை பிடித்துக்கொண்டு சுவர் ஓரமாக உட்கார்ந்திருந்தார்கள். நீளமான அறை வழியே நடந்து ஒரு சின்ன பின் அறைக்கு சென்றான். மூலையில் ஒருவன் மேஜைமுன் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மானுயல் மேஜைகள் ஒன்றின் முன் உட்கார்ந்தான்.

ஒரு பரிமாறி நுழைந்து மானுயல் மேஜை அருகில் நின்றான்.

'ஜுரிட்டோவை பார்த்தாயா?' மானுயல் அவனை கேட்டான்.

'சாப்பாட்டுக்கு முந்தி அவன் இங்கே இருந்தான்,' என்றான் பரிமாறி. 'ஐந்து மணிக்கு முன்னாடி திரும்பமாட்டான் அவன்.'

'கொஞ்சம் காபியும் பாலும் சாதா மதுவும் கொண்டுவா' என்றான் மானுயல்.

ஒரு பெரிய காபி கோப்பையும் மதுக்கோப்பையும் உள்ள ஒரு தட்டுடன் பரிமாறி திரும்பி வந்தான். அவனது இடது கையில் ஒரு பிராந்தி சீசா இருந்தது. சுழற்றி அவைகளை மேஜைமீது வைத்தான். அவன் பின் வந்த ஒரு பையன் நீண்ட பிடி உள்ள பளபளப்பான மூக்குள்ள ஜாடிகளிலிருந்து காப்பியையும் பாலையும் கோப்பைகளில் ஊற்றினான்.

மானுயல் தன் தொப்பியை எடுத்தான். அவன் தலையில் மேலாக குத்தி இருந்த அவனது பின்னலை பரிமாறி கவனித்தான். மானுயல் காப்பி அருகில் உள்ள சின்ன கோப்பையில் பிராந்தியை ஊற்றிக் கொண்டே காப்பி—பையனை பார்த்து கண் சிமிட்டினான். காப்பி—பையன் மானுயலின் வெளுத்த முகத்தை வியப்புடன் பார்த்தான்.

பரிமாறி, சீசாவை கார்க்கிட்டுக்கொண்டே, 'இங்கே சண்டை போடுகிறீர்களா?' என்று கேட்டான்.

'ஆமாம்,' என்றான் மானுயல். 'நாளைக்கு.'

சீசாவை இடுப்பில் பதித்துப் பிடித்துக் கொண்டே பரிமாறி நின்றான்.

'சார்லி சாப்லின்ஸ்ஸிலேயா?' அவன் கேட்டான்.

காப்பிப்-பையன் திகைத்து அப்பால் பார்த்தான்.

'இல்லை, சாதாவிலே.'

'சேவ்ஸ்ஸும் ஹெர்னண்டஸ்ஸும் என்கிறதாக நான் நினைத்தேன்,' என்றான் பரிமாறி.

'இல்லை, நானும் இன்னொருவரும்.'

'யார்? சேவ்ஸ்ஸா ஹெர்னண்டஸ்ஸா?'

'ஹெர்னண்டஸ் என்று நினைக்கிறேன்.'

'சேவ்ஸ்ஸுக்கு என்ன?'

'அவன் காயப்பட்டுட்டான்.'

'யார்மூலம் தெரிந்தது உங்களுக்கு?'

'ரெடனு.'

'ஹெ, லூயி,' பரிமாறி அடுத்த அறைக்கு கத்தினான். 'சேவ்ஸ்ஸுக்கு "கொகிடா"வாம்.'

சர்க்கரை கட்டிகளின் மேல் காகிதத்தை பிரித்து எறிந்துவிட்டு அவைகளை காப்பிக்குள் போட்டான் மானுயல். கிளறி விட்டான். திதிக்கவும் சூடாகவும், அவன் காலி வயிறு வெதுவெதுப்பாகவும் பிராந்தியையும் குடித்துத் தீர்த்தான்.

'இன்னொரு கோப்பை இது கொடு,' என்று பரிமாறியை கேட்டான்.

பரிமாறி சீசா கார்க்கை அகற்றி தட்டில் வழிந்து சிதற கோப்பை நிறைய ஊற்றினான். இன்னொரு பரிமாறி மேஜைக்கு முன் வந்திருந்தான். காப்பி-பையன் போய்விட்டான்.

'சேவ்ஸ்ஸுக்கு படுகாயமா?' இரண்டாவது பரிமாறி மானுயலை கேட்டான்.

'எனக்கு தெரியாது,' என்றான் மானுயல். 'ரெடனு அதை சொல்லவில்லை.'

'அவன் இதுலே எங்கே அக்கறை காட்டப் போகிறான்,' என்றான் உயரமான பரிமாறி. மானுயல் அவனை இதற்குமுன் பார்த்தது இல்லை. இப்போதுதான் அவன் சேர்ந்திருப்பான்.

'இந்த டவுனில் ரெடனு ஆதரவு இருந்தால் நீங்கள் பிழைத்து ஆளாகிவிடுவீர்கள். இல்லை, நீங்

கள் பேசாமல் பேசய் சுட்டுக் கொள்ளலாம்.'

'நீதான் சொன்னயே,' உள்ளே வந்திருந்த மற்றொரு பரிமாறி சொன்னன். அப்பவும் நீ சொன்னய்.'

'நான் சொன்னேன் என்கிருயே. நீ சொல்றது சரிதான்.' என்ருன் உயரமான பரிமாறி. 'அந்த பறவையைப்பற்றி பேசுகிறபோது நான் என்ன சொல்கிறேன் என்பது எனக்கு தெரியும்.'

'வில்லால்டாவுக்கு என்ன செய்துவிட்டான் பாருங்களேன்,' என்ருன் முதல் பரிமாறி.

'அது மட்டும் இல்லே,' என்ருன் உயரமான பரிமாறி,' மார்சியல் லாலண்டாவுக்கு என்ன செய்துவிட்டான் பாருங்களேன், நாசியோனுலுக்கும்.'

'நீதான் சொல்கிருயே, பையா,' குட்டையான பரிமாறி ஏற்றுச் சொன்னன்.

தன் மேஜைமுன் நின்று பேசும் அவர்களை கவனித்துப் பார்த்தான் மானுயல். தன் இரண்டாவது பிராந்தியையும் அவன் குடித்துவிட்டான். அவர்கள் அவனை மறந்தே விட்டார்கள். அவனைப் பற்றி அக்கறையும் இல்லே, அவர்களுக்கு.

'அந்த ஒட்டகங்கள் கோஷ்டியைத்தான் பாருங்களேன்.' என்ருன் அந்த உயரமான பரிமாறி. 'இந்தநாசியோனுல் நம்பர் இரண்டைஎப்போதாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?'

போன ஞாயிற்றுக்கிழமை நான் பார்த்தேன், இல்லேயா ?' என்று முதல் பரிமாறி சொன்னன்.

'அவன் ஒரு ஒட்டச் சிவிங்கி,' குட்டையான பரிமாறி சொன்னன்.

'நான் சொன்னேனு இல்லேயா ?' என்ருன் உயரமான பரிமாறி. 'ரெட்டை பசங்கள் அவர்கள்.'

'இதோ பாரு, இன்னெரு கோப்பை கொடு,' என்ருன் மானுயல். அவர்கள் பேசியபோது அந்த பரிமாறி தட்டில் சிதறவிட்டிருந்த பிராந்தியை ஊற்றிக் குடித்திருந்தான் அவன்.

முதல் பரிமாறி கோப்பை நிறைய பழக்கப்படி ஊற்றினன். மூவரும் பேசிக்கொண்டே அறையை விட்டு போய்விட்டார்கள்.

தள்ளின மூலேயில் தலே பின் பக்கமாய் சுவரில் சாய உள்ளிழுக்கும் மூச்சின்போது லேசான குறட்டையுடன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான் அந்த மனிதன்.

மானுயல் தன் பிராந்தியை குடித்தான். அவனுக்கும் தூக்கம் வந்தது. டவுனுக்குள் போகப் பார்த்தால் கடும் உஷ்ணம். தவிரவும் செய்வதற்கும் எதுவும் இல்லே. அவன் ஸுரீட்டோவை பார்க்க விரும்பினன். அவன் காத்துக்கொண்டு இருக்கிற போது தான் தூங்கப்போகலாம். அங்கேதான் இருக்கிறதா என்று நிச்சயித்துக்கொள்ள மேஜைக்கு அடியில் இருந்த சூட்கேஸை எட்டி உதைத்தான். ஒருவேளை, ஆசனத்துக்கு அடியில் ஒட்டி அதை வைத்தால் நல்லது. குனிந்து அதை உள்ளே தள்ளினன். பிறகு மேஜை முன் சாய்ந்து தூங்கப் போனன்.

அவன் விழித்தபோது யாரோ ஒருவன் அவன் மேஜைமுன் எதிர்ப்பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். இந்தியன் (சிவப்பு இந்தியன்) மாதிரி அழுத்தமான பழுப்பு முகம் உள்ள ஒரு பருமனை ஆள் அவன். கொஞ்ச நேரமாக அவன் அங்கே உட்கார்ந்து இருக்கிருன். பரிமாறியை போகச்சொல்லிவிட்டு பத்திரிகையை படித்துக்கொண்டும் மேஜைமீது தலேவைத்து தூங்கும் மானுயலே இடையிடையே கவனித்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தான். பத்திரிகையை படிக்கிறபோது வார்த்தைகளே உதடுகளால் உருவாக்கிக்கொண்டு சிரமப்பட்டு படித்தான். அது அலுக்கும்போது மானுயலே பார்த்தான். அவன் கருப்பு 'கார்டொபா' தொப்பி முன் தணிய நாற்காலியில் பதிந்து உட்கார்ந்திருந்தான்.

மானுயல் நிமிர்ந்து உட்கார்ந்து அவனை பார்த்தான்.

'ஹெலோ, ஜுரிட்டோ,' என்ருன் அவன்.

'ஹெலோ, பையா,' என்ருன் பருமனனவன்.

'தூங்கிவிட்டேன்.' தன் உள்ளங்கையால் நெற்றியை மானுயல் தேய்த்துக்கொண்டான்.

'நீயாக இருக்கலாம்னு தான் நினைத்தேன்.'

'எல்லாம் எப்படி இருக்கு ?'

'சரியாகத்தான். உன் விஷயம் என்ன ?'

'அவ்வளவு சரியாக இல்லே.'

இருவரும் மவுனமாக இருந்தார்கள். பிகடார் ஜுரிட்டோ மானுயலின் வெளிறிய முகத்தை கவனித்தான். தன் பாக்கெட்டில் பத்திரிகையை வைக்க மடிக்கும் பிகடாரின் படலான கைகளை மானுயல் கூர்ந்து பார்த்தான்.

'உன்கிட்ட ஒரு ஒத்தாசைகேட்கலாம்னு இருக்கிறேன் மனேஸ்' என்ருன் மானுயல்.

மனேஸ்டுரோஸ் ஜுரிட்டோவின் செல்லப் பெயர். அவனது தடித்த கைகளை நினைக்காமல் அவன் அதை காதில் போட்டுக்கொண்டதில்லே. சுய பிக்ஞையுடனே மேஜைமீது அவைகளை வைத்தான்.

'ஒரு கோப்பை குடிக்கலாம்,' என்ருன் அவன்.

'நல்லா' என்ருன் மானுயல்.

பரிமாறி வந்து, போய், திரும்பிவந்தான். மேஜைமுன் இருந்தஇருவரையும் திரும்பிப் பார்த்துவிட்டு அவன் போய்விட்டான்.

'என்ன விஷயம் மானலோ ?' கோப்பையை வைத்துக்கொண்டே கேட்டான்.

'நாளே இரவு எனக்காக இரண்டு மாடுகளுக்கு 'பிக்' (குதிரைமீது இருந்து ஈட்டியால் குத்துவாயா) பண்ணுவாயா ?' மேஜைக்கு எதிரேஇருந்த ஜுரிட்டோவை பார்த்துக் கேட்டான் மானுயல்.

'ஹுஹும்' என்ருன் ஜுரிட்டோ. 'நான் பிக் பண்ணுகிறதில்லே.'

மானுயல் கோப்பையை பார்த்தான். இந்த பதிலே அவன் எதிர்பார்த்தவன்தான். கிடைத்துவிட்டது, ஆமாம் கிடைத்து விட்டது.

'மன்னித்துக் கொள் மானலோ, நான் பிக் பண்ணுகிறதில்லே.' ஜுரிட்டோ தன் கைகளை பார்த்துக் கொண்டான்.

'சரி, இருக்கட்டும்', என்ருன் மானுயல்.

'ரொம்ப வயதாச்சு எனக்கு'. ஜுரிட்டோ சொன்னன்.

'கேட்டுப் பார்த்தேன்' என்ருன் மானுயல்.

'இரவு மாட்டுச் சண்டை நாளேக்கா ?'

'ஆமாம். ஒரு நல்ல பிக் இருந்தால் சமாளித்துடலாம்னு பார்த்தேன்.'

'உனக்கு என்ன கிடைக்கும் ?'

'மூந்நூறு பெஸட்டா.'

'பிக் செய்கிறதுக்கே அதுக்கு அதிகமாக

இடைக்குமே எனக்கு.'

'தெரியும் எனக்கு' என்றான் மானுயல். 'உன்னை கேட்க எனக்கு வாய் இல்லைதான்.'

'இன்னும் எதுக்கு இதெல்லாம் உனக்கு?' ஜுரிட்டோ கேட்டான். 'உன் பின்னலை, ஏன் நீ வெட்டி எறிந்து விடக்கூடாது, மானலோ?'

'உனக்கு தெரியாது.' என்றான் மானுயல்.

'கிட்டத்தட்ட என் வயசு ஆச்சே உனக்கு.' ஜுரிட்டோ சொன்னான்.

'எனக்குத் தெரியாது' என்றான் மானுயல். 'செய்யவேண்டி இருக்கு. இதை அமர்த்தி, ஒத்த இடைவேளையும் கிடைத்தால் — அதுதான் எனக்கு வேண்டியது.நான் இதைவிட முடியவில்லை மனோஸ்.'

'இல்லை, நீ விட்டு விடணும்.'

'ஆமாம்,விலகி இருக்கத்தான் முயற்சிபண்ணிப் பார்த்தேன்.'

'உன் மனசு படுவது எனக்குத் தெரியும். ஆனால் இது சரி இல்லை. நீ வெளியேறி விடணும். இறங்கக் கூடாது.'

'இயலாதே. தவிரவும் இப்பல்லாம் திறமாக சமாளிக்கிறேனே.'

ஜுரிட்டோ அவன் முகத்தைப் பார்த்தான்.

'ஆசுபத்திரியிலே வேறே இருந்திருக்கிறாய்.'

'குத்துப்பட்டபோது திறமையாக வேலை காட்டினேனே.'

ஜுரிட்டோ எதுவும் பேசவில்லை. தட்டில் இருந்த 'சாக்னக்' (பிரஞ்சு பிராந்தி)யை கோப்பையில் ஊற்றினான்.

'அதைவிட நல்ல ஃபெய்னாவை (சண்டை) பார்த்ததே இல்லைன்னு பத்திரிகைகள் எழுதினதே.'

ஜுரிட்டோ அவனையே பார்த்தான்.

'நான் சுதாரிக்கிறபோது சரியாக இருப்பேன் என்கிறதுதான் உனக்கு தெரியுமே.'

'உனக்கு ரொம்ப வயதாச்சு,' என்றான் பிகடார்.

'இல்லை' என்றான் மானுயல். 'என்னை விட பத்து வயது பெரியவன் நீ.'

'என் விஷயம், வேறே.'

'எனக்கு அவ்வளவு வயதாகவில்லை,' என்றான் மானுயல்.

மவுனமாக அவர்கள் உட்கார்ந்து இருந்தார்கள் — மானுயல் பிகடாரின் முகத்தை கவனித்துக் கொண்டு.

'குத்துப்படுகிறவரை நான் நல்லா வேலை காட்டினேன்' என்றான் மானுயல்.

'என்னை நீ பார்த்து இருக்கணும் மனோஸ்' என்றான் மானுயல் அவனை கடிந்துரைத்து.

'உன்னை பார்க்கவே விரும்பவில்லை நான்' என்றான் ஜுரிட்டோ.

'எனக்கு நடுக்கமாக இருக்கு.'

'நீ என்னை சமீபத்தில் பார்க்கவில்லை.'

'உன்னை நிறைய பார்த்திருக்கிறேன்'.

ஜுரிட்டோ மானுயலை பார்த்தான், அவன் கண்களை தவிர்த்துக் கொண்டு.

'நீ இதை கைகழுவிடணும் மானலோ.'

'முடியாது' என்றான் மானுயல். 'இப்போ நல்லா போகிறேன்னு நான் சொல்கிறேன்.'

கைகள் மேஜைமீது இருக்க ஜுரிட்டோ முன் குனிந்தான்.

'கேள், உனக்கு நான் பிக் பண்ணுகிறேன். நாளை இரவு நீ நன்றாக போகவில்லை, வெளியேறி விடுவாய்! செய்வாயா?'

'நிச்சயம்'.

மனச்சடைவு நீங்கி ஜுரிட்டோ பின் சாய்ந்தான்.

'நீ வெளியேறித்தான் ஆகணும்,' என்றான் அவன். 'எத்துவேலை வேண்டாம். பின்னலை வெட்டி ஆகணும்.'

'நான் வெளியேறவே ஏற்படாது', என்றான் மானுயல். 'என்னை இருந்து பாரு. என்கிட்ட சரக்கு இருக்கு.'

ஜுரிட்டோ எழுந்தான். விவகாரம் செய்து அலுத்து விட்டது அவனுக்கு.

'நீ வெளியேறித்தான் ஆகணும்' என்றான் அவன். 'நானே உன் பின்னலை வெட்டி விடுவேன்.'

'இருக்காது, மாட்டாய்,' என்றான் மானுயல். 'உனக்கு அதுக்கு வாய்ப்பு கிட்டாது.'

ஜுரிட்டோ பரிமாறியை கூப்பிட்டான்.

'வா போகலாம்' என்று அழைத்தான் ஜுரிட்டோ சாப்பாட்டு விடுதிக்கு.

மானுயல் பெட்டிக்காக ஆசனத்துக்கு அடியில் கையிட்டான். அவனுக்கு மகிழ்ச்சி. ஜுரிட்டோ தனக்கு பிக் பண்ணுவான் என்பது அவனுக்கு தெரியும். இருக்கிறவர்களில் சிறந்தவன் அவன். விஷயம் சுளுவாகி விட்டது.

'சாப்பாட்டு விடுதிக்குப் போய் சாப்பிடலாம் வா' என்றான் ஜுரிட்டோ.

மானுயல் 'சார்லி சாப்லின்ஸ்' முடிவதற்கு 'பேஷியோ டி கெபல்லோ'வில் காத்து நின்றிருந்தான். ஜுரிட்டோ அவன் அருகில் நின்றான். அவர்கள் நின்ற இடம் இருண்டு இருந்தது. மாட்டுச் சண்டை கோதாவுக்கு (வாடிவாசல்) இட்டுச் செல்லும் உயரமான கதவு மூடி இருந்தது. அவர்கள் தலைக்கு மேலே ஒரு கத்தல், பிறகு சிரிப்புக் கூப்பாடு கேட்டது. அப்புறம் நிசப்தம். பேஷியோ டி கபெல்லோ பக்கத்து கொட்டங்களின் வாசனையை மானுயல் விரும்பினான். இருட்டில் மணம் நன்றாக இருந்தது. அரீனா (கோதா வட்டம்) விலிருந்து இன்னொரு கூப்பாடு, பிறகு கைதட்டல். நீடித்த கைதட்டல் தொடர்ந்து கேட்டது.

'இந்த பயல்களை நீ பார்த்திருக்காயா?' இருட்டில் மானுயல் அருகில் பருமனாயும் மங்கலாயும் நின்ற ஜுரிட்டோ கேட்டான்.

'இல்லை' என்றான் மானுயல்.

ரொம்ப வேடிக்கையான பயல்கள், என்றான் ஜுரிட்டோ. இருட்டில் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

சண்டை மைதானத்துக்கு செல்லும் உயரமான இறுக்கமான இரட்டைக் கதவு வீசித் திறக்கவும் மின்சார விளக்குகளின் கண் கூசும் வெளிச்சத்தில் சுற்று வழி எல்லாம் இருட்டாக இருக்க, பிளாஸா (சண்டை மைதானம்) உயர்ந்துதெரிவதை மானுயல் கண்டான். சண்டை மைதாவத்தின் விளிம்பு ஓரமாக ஊர்சுற்றிகள் மாதிரி உடை அணிந்த இருவர் வணங்கியும் ஓடிக்கொண்டும் இருந்தார்கள். அவர்களுக்குப்பின், மணலில் எறியப்பட்ட தொப்பிகளையும் பிரம்புகளையும் பொறுக்கி இருட்டில் திரும்ப

மேலே எறிந்து கொண்டிருந்த, ஒரு ஹோட்டல் பையன் உடை அணிந்த மூன்றுமவன் தொடர்ந்து கொண்டிருந்தான்.

முற்றத்தில் எலக்டிரிக் வெளிச்சம் ஏற்றப்பட்டது.

'ஏதாவதொரு குதிரை பார்த்து ஏறிக்கொள்கிறேன்; அதுக்கு இடையில் நீ பயல்களை திரட்டு,' என்றான் ஜுரிட்டோ.

அவர்களுக்குப் பின்னடி, அரினாவுக்குள் போய் செத்த காளையை இழுத்துச்செல்ல வரும் கோவேறு கழுதைகளின் கிணுங்கல் சப்தம் கேட்டது. ஆசனங்களுக்கும் பெரிராவுக்கும் (கோதாவைச் சுற்றிய வட்டத்து பலகை அடைப்பு) இடையே நடபாதையில் நின்று தமாஷ் ஆட்டத்தை பார்த்துக் கொண்டிருந்த 'குவாட்ரில்லா' ஆட்கள் நடந்து வந்து முற்றத்து வெளிச்சத்தில் கோஷ்டியாக பேசி நின்றார்கள். வெண்மையும் ஆரஞ்சுமான சூட் அணிந்த ஒரு நல்ல தோற்ற வாலிபன் மானுயலிடம் வந்து புன்னகைத்தான்.

'நான்தான் ஹெர்னாண்டேஸ்', என்று சொல்லி கைகொடுக்க முன் வந்தான்.

மானுயல் கைகுலுக்கினான்.

'இன்றிரவு நமக்கு வாய்த்தது யானைகளாக்கும்' என்று பையன் சொன்னான்.

'கொம்பு உள்ள பெரிசுகள்தான்' என்று மானுயல் ஆமோதித்தான்.

'உங்களுக்கு விழுந்தது மகாமோசம்' என்றான் பையன்.

'ரொம்ப சரி' என்றான் மானுயல். 'பெரிசாக இருக்கிறதுக்கு தக்கபடி ஏழைகளுக்கு நிறைய இறைச்சி.'

'அந்த ஒரு ஆள் எங்கே இருந்து கிடைத்தது.' ஹெர்னாண்டஸ் இளித்தான்.

'அது பழைய ஆள்,' என்றான் மானுயல். 'நீ குவாட்ரில்லாவை ஒழுங்குபடுத்து. எப்படி அமைந்திருக்கு எனக்கு என்று அப்போதுதான் தெரியும்.'

'நல்ல பயல்கள் இருக்கான் உங்களுக்கு.' என்றான் ஹெர்னாண்டஸ். அவன் ரொம்ப உற்சாகமாக இருந்தான். முந்தி இரண்டு தடவை அவன் இராச் சண்டை போட்டிருக்கிறான். மாட்ரிட்டில் அவனுக்கும் ஆதரவு கிடைக்க ஆரம்பித்து இருந்தது. ஐந்து நிமிஷத்தில் சண்டை ஆரம்பிக்கப் போகிறதில் அவனுக்கு சந்தோஷம்.

'பிக்குகள் எங்கே?' மானுயல் கேட்டான்.

கொட்டத்துக்குப் போய் நல்ல குதிரைக்காக அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹெர்னாண்டஸ் இளித்துச் சொன்னான்.

சவுக்குகள் கொடுக்க, மணிகள் கிணுகிணுக்க கோவேறு கழுதைகள் வாசல் வழியே அடித்தோடி வந்தன. இளம் காளை மணலில் உழுது சால் விட்டு வந்தது.

காளை போன அப்புறம் 'பாஸியோ'வுக்கு அவர்கள் தயாரானார்கள்.

மானுயலும் ஹெர்னாண்டஸ்ஸும் முன் நின்றார்கள். குவாட்ரில்லா' படை வாலிபர்கள் தங்கள் கெட்டியான கேப்களை (உள்புறம் மஞ்சள்,வெளிப்பக்கம் லேசான சுத்த செகப்பு நிறமுள்ள, விடைப்பான கெட்டிக்கரை போட்ட காலருடன் கூடிய ஒரு பக்கம் பட்டாலும் மறுபக்கம் நெறுக்கி நெய்த பிரஞ்சு லினனாலும் ஆன ஒரு உருவாக்கின் படுதா) புஜங்கள்மீது மடித்துவைத்துக்கொண்டு பின் நின்றார்கள். பின்னால் நான்கு பிகடார்கள் அரை இருட்டான கோரல்லுக்குள் (உள் கொட்டம்) எஃகு முனையுள்ள ஈட்டிக்கம்புகளுடன் குதிரைகள்மீது ஏறி இருந்தார்கள்.

'குதிரைகளை பார்க்கக்கூட ரெடனா போதுமான வெளிச்சம் விடாதுதான் அதிசயம்,' என்றான் ஒரு பிகடார்.

'இந்த தோல் உருவங்களை நாம் சரியாக பார்க்காவிட்டாலே சந்தோஷப் படுவோம் என்கிறது அவனுக்கு தெரியும்,' என்றான் மற்றொரு பிக்.

'நான் ஏறி இருக்கிற இது நிலைக்கவிடமாட்டேன்கிறதே,' என்றான் முதல் பிகடார்.

'இந்தா, அதுகள் குதிரைகள்!'

'சந்தேகமா, குதிரைகளேதான்.'

இருட்டில், தொத்தலான குதிரைகளில் உட்கார்ந்து அவர்கள் பேசினார்கள்.

ஜுரிட்டோ எதுவும் பேசவில்லை. அத்தனையிலும் நிதானமான ஒரே குதிரை அவனுக்கு கிடைத்திருந்தது. கோரல்லுக்குள்ளேயே அதை சுற்ற விட்டு நோட்டம் பார்த்திருந்தான். கடிவாளத்துக்கும் குதிமுள்ளுக்கும் அது மசிந்து கொடுத்தது. அதன் வலது கண் பட்டையை எடுத்துவிட்டு மண்டைத் தட்டில் காதுகளை இறுக்கி கட்டி இருந்த நூலை வெட்டிவிட்டான். அது நல்ல உரமான குதிரை. கால்களில் நல்ல உரம். அவனுக்கு வேண்டியது' எல்லாம் அதுதான். காரிடா (ஜல்லிக்கட்டு) முழுதுக்கும் அது மேலேயே சவாரி செய்ய அவன் உத்தேசித்து இருந்தான். ஏற்கெனவே, அரை-இருட்டில் குதிரைமீது ஏறி, பெரிய மெத்தை இட்ட சேணத்தின்மீது உட்கார்ந்தது முதலே 'பேஸியோ'வுக்காக காத்து மானசீகமாகவே முழு காரிடாவுக்கும் பிக் பண்ணிவிட்டான். அவனுக்கு இருபக்கத்திலும் மற்ற பிகடார்கள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சை கவனிக்கவே இல்லை அவன்.

இரண்டு மாட்டடார்களும் (காளையுடன்போரிடுபவர்கள்) தங்கள் மூன்று பியோன்களுக்கு (காளைகள் திமில்மீது பாண்டிரில்லாக்கள் என்ற கிடுக்கி ஈட்டிகளை பாய்ச்சி, ஆட்டம் காட்டி மாட்டடார்களுக்கு உதவ அவர்களால் அமர்த்தப்பட்டவர்கள்) முன்னால், அதேமாதிரி தங்கள் இடது புஜங்கள்மீது கேப்கள் மடித்து இருக்க சேர்ந்து நின்றார்கள். தனக்குப் பின் நின்ற மூன்று வாலிபர்களைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தான் மானுயல். அந்த மூவரும் ஹெர்னாண்டஸ் மாதிரி மாட்ரிலினேக்கள், சுமார் பத்தொன்பது வயது பயல்கள். அவர்களில் ஒருவனை மனம் ஆழ்ந்த, ஒதுங்கின்ற, முகம் கறுத்த ஜிப்ஸியை அவனுக்கு பிடித்தது. திரும்பினான்.

'உன் பெயர் என்ன பையா ?' ஜிப்ஸியை கேட்டான் அவன்.

'ஃபியூயன்டிஸ்' ஜிப்ஸி சொன்னான்.

'நல்ல பெயர் அது' என்றான் மானுயல்.

ஜிப்ஸி பல் தெரிய சிரித்தான்.

'காளை வெளியேறினதும் நீ எடுத்துக்கொண்டு போய் கொஞ்சம் ஓட்டம் காட்டு,' என்றான் மானுயல்.

'ஆகட்டும்,' என்றான் ஜிப்ஸி. அவன் முகம்

ஆழ்ந்து இருந்தது. தான் என்ன செய்யணும் என் கிறதைப்பற்றி அவன் நினைக்க ஆரம்பித்தான்.

'இதோ புறப்பட்டாச்சு,' என்றான் மானுயல் ஹெர்னாண்டஸ்ஸிடம்.

'சரி, நாமும் போவோம்.'

தலை நிமிர்ந்து, வாத்ய முழக்கத்துக்கு வீசியவாறு, வலது கைவீசி அலைக்க வெளியேறி 'ஆர்க்-லைட்'டுகளுக்கு அடியில் மணல் பரப்பின அரினாவை கடந்து சென்றார்கள். பின்னால் குவாட்ரில்லாக்கள், அதன் பின் குதிரைமீது பிகடார்கள், அதற்கும் பின் சண்டைக்கள பணியாட்களும் கிணுகிணுக்கும் கோவேறு கழுதைகளும். அரினாவை கடந்து வரிசையிட்டுச் சென்றபோது கூட்டம் ஹெர்னாண்டஸ்ஸை கொண்டாடியது. பெருமிதத்துடன், வீசிக்கொண்டு பவனிபோனபோது நேர் எதிரே பார்த்தார்கள்.

பிரசிடெண்டுக்கு முன் அவர்கள் வணங்கினார்கள். ஊர்வலம் பிரிவுகளாக பிரிந்தது. காளைச் சண்டைக்காரார்கள் பெரீராவுக்குப்போய் தங்கள் கனமான மேலங்கிகளை கழற்றி லேசான 'கேப்'களை எடுத்துக்கொண்டார்கள். கோவேறு கழுதைகள் வெளியேறிவிட்டன. பிகடார்கள் தத்தின காலப்பில் கோதாவட்டத்தை சுற்றிவந்து, இருவர், கிட்ட வந்த வாசல்வழியே போய்விட்டார்கள். பணியாட்கள் மணலை சீராக பரப்பினார்கள்.

மானுயல், அவனுக்காக மானேஜராகவும் வாள் வைத்திருப்பவனாகவும் வேலைபார்த்த ரெடானாவின் ஆட்கள் ஒருவனால் ஊற்றப்பட்ட தண்ணீரை குடித்தான். தன் மானேஜரிடம் பேசிக்கொண்டிருந்ததை விட்டு ஹெர்னாண்டஸ் அவனிடம் வந்தான்.

'உன் கை நல்ல கை, பையா' என்று மானுயல் அவனை பாராட்டினான்.

'என்னை விரும்புகிறார்கள்,' என்றான் ஹெர்னான்டன் மகிழ்ச்சியுடன்.

'பாஸியோ (அணிவகுப்பு), எப்படி ?' ரெடானா ஆட்களை மானுயல் கேட்டான்.

'கல்யாணம் மாதிரிதான்,' என்றான் மானேஜர். 'பிரமாதம், ஜாஸிலிட்டோ, பெல்மாண்டிமாதிரி இருந்தது நீங்கள் வந்தது.'

ஜுரிட்டோ சவாரி வந்தான். ஒரு தாட்டியான குதிரை சவாரிக்காரன் சிலை மாதிரி, தன் குதிரையை சுழற்றித் திருப்பி, காளைவெளியேறும், கோதாவின் மறுகோடியில் உள்ள டோரில் (உள் சங்குவாடி)லுக்கு நேராக நிறுத்தினான். 'ஆர்க் லைட்' வெளிச்சத்தில் அவனுக்கு விசித்திரமாக இருந்தது. பெரும் தொகைக்கு உஷ்ணமான பிற்பகலில் அவன் பிக் பண்ணி இருக்கிறான். இந்த விளக்கு வெளிச்சவேலை அவனுக்கு பிடிக்கவில்லை. ஆரம்பித்து விட்டால் தேவலை என்று விரும்பினான்.

மானுயல் அவனிடம் சென்றான்.

'பிக்பண்ணிவிடு(ஈட்டியால் குத்திவிடு)மனோஸ், என்றான் அவன், 'எனக்கு அளவாக நிற்க அவனை கிறங்க வைத்துவிடு.'

அதெல்லாம் பிக் பண்ணிவிடுகிறேன், பையா.' ஜுரிட்டோ மணலில் துப்பினான். 'கோதாவை விட்டே எம்பிக் குதிக்கவைக்கிறேன் அவனை.'

'அவன் மேலேயே சாய்ந்துவிடு, 'மனோஸ்,' என்றான் மானுயல்.

'சாய்ந்தே விடுகிறேன்,' என்றான் ஜுரிட்டோ. 'எது தடுக்கப்போகுது?'

'இதோ வரப்போகிறான்,' என்றான் மானுயல்.

பாதங்கள் மிதிவளையத்தில் பதிய, மான்தோல் கவசம் அணிந்த தாக்கான கால்கள் குதிரையை கவ்விப் பிடிக்க, இடது கையில் கடிவாளமும் வலது கையில் நீண்ட ஈட்டியுமாக வெளிச்சத்திலிருந்து கண்களை மறைக்க அகலமான தொப்பி கண்ணுக்குத் தழைய, டோரில்லின் தள்ளி இருந்த கதவை கவனித்து உட்கார்ந்து இருந்தான் ஜுரிட்டோ. அவன் குதிரையின் காதுகள் துடித்தன. இடது கையால் அதை ஜுரிட்டோ தட்டிக் கொடுத்தான்.

டொரில் சிவப்புக் கதவு வீசித் திறந்தது. ஒரு விநாடி ஜுரிட்டோ அரினாவைத் தாண்டி இருந்த வெறுமையான அந்த நடைபாதைக்குள் கூர்ந்து பார்த்தான். காளை பாய்ந்து வந்தது. விளக்குகள் அடியில் வரவும், நாலு காலிலும் சறுக்கி வருகிற மாதிரி. பிறகு காலப் எடுத்து தாக்கியது. வேகமான தவ்வாளிபோட்டு தடைபடாமல் நகர்ந்தது. இருட்டுத் தொழுவத்திலே இருந்து விடுபட்ட மகிழ்ச்சியுடன் தாக்கிப் பாய்ந்தபோது அகன்ற நாசிகள் வழியாக அது மூச்சு உதறினதைத் தவிர மற்றப்படி அமைதியாக.

முதல் ஆசன வரிசையில் கொஞ்சம் சலிப்படைந்து முழங்காலுக்கு முன் இருந்த சிமிண்டு சுவரில் எழுத முன் குனிந்த 'எல்ஹெரால்டோ' பத்திரிகை காளைச்சண்டை விமர்சகர் எழுதினார். 'காம்பெக்னரோ, நீக்ரோ 42 ஒரே ஆர்ப்பாட்டத்துடன் 90 மைல் வேகத்தில் வந்தது...'

அடைப்பு பலகைமீது சாய்ந்து காளையை கவனித்து இருந்த மானுயல் தன் கையை அலைத்தான். ஜிப்ஸி தன் கேப் புரள முன் ஓடினான். காளை முழு காலப்பில் சுழன்று தலைதணிய வால் எழும்ப கேப்பை தாக்கியது. ஜிப்ஸி திருகலாக ஓடினான். அவன் தாண்டிப் போகவும் காளை அவனைக் கண்டு, கேப்பை விட்டுவிட்டு ஆளைத் தாக்கியது. ஜிப்ஸி ஒரே ஓட்டமாக பெரிராவின் சிவப்பு வேலிப் பலகையை தாண்டி குதித்துவிட்டான். காளை அடைப்புப் பலகையை கொம்புகளால் அடித்தது. இரண்டுதரம் கொம்பை அலைத்து குத்தி, குருட்டுத்தனமாக பலகையில்மோதியது.

எல்ஹெரால்டோ' விமர்சகர் – சிகரெட் கொளுத்தி தீப்பெட்டியை காளையை நோக்கி எறிந்துவிட்டு தன் நோட்புக்கில் எழுதினார். 'பெரிசாகவும் பணம் கொடுக்கும் வாடிக்கைக்காரர்களை திருப்தி செய்யத்தக்க கொம்புகளுடன் காம்பக்னரோ காளைப் போர்க்காரர்கள் அரணையே பிளந்து நுழைகிற போக்கை காட்டியது.'

காளை பலகைவேலியை முட்டுகிறபோது மானுயல் மணலுக்குள் இறங்கினான். கோதா சுற்றுக்கு கால்வழியில் இடதுபக்கம் பெரீராவை ஒட்டி வெள்ளைக் குதிரையை ஜுரிட்டோ நிறுத்தி இருப்பதை ஓரக்கண்ணால் பார்த்தான் அவன். அவனுக்கு முன் நெருங்கி, இருகைகளிலும் விளிம்பு மடித்துக் கொண்டு, மானுயல் கேப்பை தூக்கிப் பிடித்து காளையை பார்த்து கூவினான். 'ஹா ! ஹா !' காளை திரும்பினது. கேப்பை நோக்கி, பாய்ந்து தாறுமாறாக அது தாக்கினபோது பலகை வேலியை உரசினமாதிரி இருந்தது மானுயல் அட்டத்தில் விலகி காளை தாக்கவும் குதிங்காலால் சுழித்து திரும்பி அதன் கொம்புகளுக்கு முன்னால் கேப்பை வீசினான்.

வீசி நிறுத்தவும் அதே போல தன் உடலோடு ஒட்டி கேப்பை பிடித்துக்கொண்டு மறுபடியும் காளையை எதிர்த்து நின்றான். காளை மறுபடியும் தாக்கவும் சுழித்துக்கொடுத்தான். அவன் வீசிய ஒவ்வொரு தடவையும் கூட்டம் ஆர்ப்பரித்தது. நாலுதரம் அவன் காளையோடு சுழன்றான், கேப்பை தூக்கிப் பிடித்துக்கொண்டு. அது முழுமூச்சாக அலை அடிச்சாப்லே வந்தது. ஒவ்வொரு தடவையும் காளை மறுபடியும் தாக்க நிகழச் செய்தான். ஐந்தாவது வீச்சில் கேப்பை அவன் இடுப்போடு ஒட்டிப்பிடித்து சுழன்றான். கேப் ஒரு பாலட் நாட்டியக்காரி பாவாடை மாதிரி விசிறினது. ஒரு பெல்ட்மாதிரி காளை தன்னை சுற்றவிட்டான். அடிவிலகி நின்றான், வந்து நிலை ஊன்றி வெள்ளைக்குதிரைமீது இருந்த ஜூரீட்டோவுக்கு எதிரே காளையை நிற்கவைத்து. குதிரை காளைக்கு நேராக, காதுகள் முன்விடைத்து, உதடுகள் நடுங்க. கண்களுக்கு மேலாக தொப்பியுடன், ஜூரிட்டோ முப்பட்டை வேல் எஃகு முனை காளையை நோக்க அவன் வலது கையில் ஒரு கோணத்தில் நீளமான வேல்கம்பு முன் நீண்டு இருக்க பாதியில் இறுக்கிப் பிடித்து முன்சாய்ந்து இருந்தான்.

எல் ஹெரால்டோ விமர்சகர் சிகரெட்டை எடுத்துக்கொண்டு காளைமீது கண்பதித்தவாறே எழுதினார். 'மகா வேலைக்காரன் மானலோ ஏற்கத்தக்க வேரோனிக்காக்கள் (கேப் படுதாவைக் காட்டி காளை தன்னை நெருங்கிவரச் செய்து, குத்துப்படாமல் சமாளித்து, வேலை காட்டுவது) தொடர்ச்சியாக வேலைகாட்டினான். பெல்மாண்டி பாணி முத்திரை விழுந்தது கடைசியில் ரசிகர்களிடம் நல்ல கரகோஷம் வாங்கினான். இனி குதிரைக்காரன் வேலை நடக்கப்போகிறது.'

காளைக்கும் வேல்கம்பு முனைக்கும் உள்ள தூரத்தை அளவிட்டு குதிரைமீது உட்கார்ந்திருந்தான் ஜூரிட்டோ. அவன் பார்க்கையிலேயே, காளை தன்னை சரிப்படுத்திக்கொண்டு குதிரையின் மீது குறியாக பாய்ந்தது. குத்த அது தலையை தணிக்கவும் காளையின் முதுகுக்கு மேலாக விம்மிப் புடைத்த திமில்மீது ஈட்டிமுனையை பாய்ச்சினான் ஜூரிட்டோ. தன் முழுகனத்தையும் சாய்ந்து அந்த வேல்மீது ஏற்றினான். தன் இடது கையில் வெள்ளைக் குதிரையை இழுத்து உயரே கிளப்பினான், அதன் முன் குளம்புகள் உயரே அலைக்க. காளையை மறுபுறம் குத்தித் தள்ளுகிறபோதே குதிரையை பக்கம் வீசித் திருப்பினான். எனவே கொம்புகள் குதிரையின் வயிற்றுக்கு அடியில் குத்தாமல் போய் விட்டன. குதிரை பதறலுடன் கீழே இறங்கியது. அப்போது ஹெர்னாண்டஸ் (பராக்கு காட்டி) காட்டின கேப்பை தாக்கின காளையின் வால் அதன் நெஞ்சில் வீசி அடித்தது.

கேப்போடேயே காளையைகூட்டிக்கொண்டு ஹெர்னாண்டஸ் அட்டத்தில் ஓடினான், மற்ற பிகடாரை நோக்கி. கேப்பை ஒரு தரம் வீசி அது குதிரைக்கும் சவாரிக்காரனுக்கும் நேர் எதிரே நிற்க வைத்து விட்டு தான் பின்னடித்து விட்டான். குதிரையை பார்க்கவும் காளை பாய்ந்தது. பிகடாரின் ஈட்டி முதுகில் வழுக்கிப்போய் விட்டது. காளையின் பாய்ச்சல் குதிரையை தூக்கிவிடவும் பிகடார் தன் வலது கால் துல்யமாக உயரே எழும்ப சேணத்திலிருந்து ஏற்கெனவே பாதி நழுவிவிட்டான். ஈட்டிக் குறியும் தவறிவிட்டான். தனக்கும் காளைக்கும் இடையே குதிரை இருக்கும்படியாக வலது பக்கமாக விழுந்தான். தூக்கிவிட்டு குத்தப்பட்ட குதிரை, காளை இன்னும் அதை குத்த, கீழே சரிந்தது. பிகடார் குதிரையை தன் பூட்ஸ் காலால் உந்தித் தள்ளி, உதவி வந்து அவனை தூக்கி அப்புறப்படுத்தி நிக்கவைக்க எதிர்பார்த்து தெளிவாக கிடந்தான்.

விழுந்த குதிரையை காளை குத்திக்கொண்டே இருக்க விட்டான் மானுயல்; அவனுக்கு அவசரம் இல்லை. பிகடார் தப்பிச்சுட்டான். தவிரவும் இந்த மாதிரி பிகடாருக்கு அப்போதுதான் தெரியும். அடுத்த தடவை கொஞ்சம் அதிகமாக நிலைப்பான். சுத்த சோதா பிக்குகள்! பெரிராவிலிருந்து கொஞ்சம் தள்ளி, விறைப்பான குதிரையுடன் காத்துக்கொண்டு மணலை கடந்து இருந்த ஜூரிட்டோவை பார்த்தான்.

ஹா! காளையை கூப்பிட்டான். 'டோமார்!' அதன் கண்களை கவரும்படியாக இரண்டு கையிலும் கேப்பை பிடித்துக் கத்தினான். காளை குதிரை கிட்ட இருந்து பிய்த்துக்கொண்டு கேப்பை தாக்கியது. மானுயல் அட்டத்தில் ஓடி, கேப்பை விரித்துப் பிடித்து, நின்று, குதிக்காலில் சுழன்று காளை ஜூரிட்டோவுக்கு நேராக நிற்க கொண்டுவிட்டான்.

(அடுத்த ஏட்டில் முடியும்)

ஹெமிங்வே

'கடலும் கிழவனும்' என்ற தன் குறு நாவலுக்கு நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் எர்னஸ்ட் ஹெமிங்வே. அவரது கட்டுக்கதை உலகம் ஸ்பானிய காளைச் சண்டைக்காரர்கள், மீன் பிடிப்பவர்கள், குஸ்தி, குத்துச்சண்டைக்காரர்கள், சூதாடிகள் போன்ற ஒரு தரத்து மக்கள் சமூக வாழ்வைப் பற்றியதாக பெரிதும் இருக்கும். இலக்கியத்தில் இது குறித்த அவரது சாதனை சிறப்பாக குறிப்பிடப்படுவது. போர்முனை ரிபோர்ட்டராக வேலை பார்த்திருக்கும் அவரது நடை பேச்சுத் தோரணைக்கு ஏற்ப ஒரு நேரடியான தன்மை வாய்ந்து இன்று ஒரு பாணியாககருதப்படுகிறது. அவரது காளைச்சண்டை நாவல் 'ஸன் ஆல்ஸோ ரைஸஸ்' என்பது. இந்த கதை 'அன்டிஃபீடட்' அவரது சிறந்த கதைகளில் ஒன்று. தமிழக ஜல்லிக்கட்டு நாவலான என் 'வாடிவாசல்'லை படித்த வாசகர்களுக்கு இந்த ஸ்பானிய காளைச்சண்டை பற்றிய சிறந்த கதையை அறிமுகப்படுத்த விரும்பி மொழி பெயர்த்திருக்கிறேன். 'எர்னஸ்ட் ஹெமிங்வேயின் சிறு கதைகள்' தொகுப்பிலிருந்து எடுத்தது.

—சி. சு. செ.

ஆய்வு

மௌனியின் மனக்கோலம்

சி. சு. செல்லப்பா

4

மௌனி வேடிக்கையாகவும் எழுத முடியும் என்பது ஒருபுறம் இருக்க, மௌனி கதாபாத்திரங்கள் நடமாட்ட உலகமே ஒரு வேடிக்கை உலகம் என்பதை இதுவரை ஆராய்ந்த பன்னிரெண்டு கதைகளில் பெரும்பாலனதில் பார்த்தோம். அழியாச் சுடர் தொகுப்பில் மீந்துள்ள கதைகள் மூன்றும் இந்த விசித்திர, வேடிக்கை உலகப் பரப்பை இன்னும் விளக்கிக் காட்டுபவை. நினைவுச் சுழல், மனக்கோலம், நினைவுச் சுவடு ஆகிய மூன்றின் தலைப்பும் பொதுப் போக்காக, ஒரு சிந்தனை ஓட்ட நிலையை குறிப்பதானாலும் சிந்தனைப் போக்கின் தன்மையில், வீச்சில், சாயல் வேறுபாடு கொண்டவை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல சுவட்டின் ஒரு வழிப்போக்கும் சுழலின் ஒரு வட்ட இயங்கலும் கோலத்தின் கணக்கற்ற நானாவித வரைதலும் வெவ்வேறு பாதையும் எல்லையும் கொண்டவை.

நினைவுச்சுழல் கதை இதுதான். மாமன் மகன் அத்தை மகள் உறவுள்ள, சிறு வயதில் சேர்ந்து விளையாடின சேகரனும் கமலாவும்—சமீபமாக அதிகம் பார்த்திராதவர்கள்—எதிர்பாராதவிதமாக சந்திக்கிற போது கமலா அவன் குடிகாரனாயும் பிடில் வாசிப்பில் சாதகம் உள்ளவனாயும் இருப்பதைக்கண்டு, முன்னதுக்கு வெறுப்பும் பின்னதுக்கு திருப்தியும் கொண்டு தன் கல்லூரி விழாவில் தன் கச்சேரிக்கு பிடில் வாசிக்கும்படி கேட்கிறாள். தாமதமானாலும் சேகரன் சமயத்துக்கு வந்து விடுகிறான். அவன் வாசிப்பில் தனக்கு ஏதாவது அது சமாசாரம் சொல்லுகிறதா என்று நினைக்கத் தோன்றியது அவனுக்கு. இறந்த காலத்தின் எதிரொலி இடைவிடாது அசரீரியாகக் கூப்பிடுவதாக எண்ணினான். 'யாவராலும் தொடர முடியாத அங்கே போகிறேன்' என்று அவன் பிடில் சொல்லிக்கொண்டிருந்ததாக உணர்ந்தாள். கச்சேரி முடிந்து அவன் வந்தவாறே வெளியேறிவிட்டான். மனது நிதானம் இழந்த அவன் நிதானம் பெற மீண்டும் குடித்துவிட்டு தன் அறையில் பிடில் வாசிக்கிறான். 'உலகிலே ஒளிக்கப்பட்டவனே போன்று இருத்தலை மிக வேண்டினான்.' மறுநாள் மாலை கமலா சேகரனை காணச் சென்றபோது அவன் போய்விட்டான். முதல் தடவை அவனைப் பார்த்ததும் 'ஏதோ காணமற்போன வஸ்துவைத் தேடி எடுக்க முயற்சிக்கும்' சிரமத்தை அனுபவித்த கமலா, 'அவனைப் பால்யமுதல் தான் அறிந்த ஒவ்வொன்றையும் கிளறிப்பார்த்த' கமலா எதற்காக அவன் இப்படிப் போய்விட்டான் என்பது புரியாது திகைத்தவள்— 'அவன் கானம் தனக்கு ஏதாவது செய்தி கொண்டதா' என்று அறிய அவதிப்பட்டு, 'எங்கேயோ இருந்து, ஒளிந்ததைத் தேடித்தருவித்து அழைத்ததை அது மறைந்தும் சஞ்சலம் கொடுப்பதற்குக் காரணம்' புரியாமல் தவித்து, 'சேகரன் எங்கு சென்றான் என்பது தெரியாததனாலா இவ்வளவு மனச் சஞ்சலம் அல்லது அவனிடம் ஏதாவது ரகசியம் அவளால் பகரப்பட்டதாக நினைத்து அவன் இழப்பில் சஞ்சலமா' என்றெல்லாம் மனம் உழன்று, யோசிக்க முடியாமல், நினைவுச் சுழல் மாறி நினைவுச் சுழலில் சிக்கினவளாக நிலை அடிபட்டுப்போனவள் ஆகிறாள். தன் பெண்மையே வீழ்ச்சி உற்றதாக அவளுக்கு ஒரு உணர்வு ஏற்படுகிறது.

இந்த கதையின் உள்ளடக்கம் ஒரு நிச்சயம் கொண்டிராதது போலவும் வழுக்கிப்போகிற மாதிரியும் மேலுக்குத் தோன்றுகிறது. உண்மையில் மற்ற கதைகளைவிட இதில்தான், அவர்களிடையே உள்ள உறவு என்ன, என்ன உறவில் எத்தகைய மோதல் (கான்ஃப்ளிக்ட்) காட்டப்பட்டு, விளைவு தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்க்க கொஞ்சம் சிரமப்பட வேண்டி இருக்கிறது. இந்த கதையில் வருகிற துறவுகோல் வாக்கியம் இது. 'தன் மனதில் புரியாது புறம்பாக மறைந்து நின்ற ஒரு உணர்ச்சி எழுப்பப்பட்டதுதான் இவ்வகை மனக்கிளர்ச்சிக்கு ஆதாரம்போலும். என்ன எண்ணம், அறியாத வகையில் ரகசியமெனக்கருதிய எண்ணம், அவரோடு பகிர்ந்து கொண்டேன்? வெளியே தெளியத் தோன்ற முடியாதது உள்ளே இருந்ததா?' இந்த வாக்கியத்தைக்கொண்டு நாம் கதையை முழுக்கப் பார்க்கப் போனால் முழுக்கதை மிகத் தெளிவாகிவிடும். சிறு வயதில் சேர்ந்து விளையாடின அத்தங்காள் அம்மான் சேய் உறவுள்ள அவர்கள் சந்தர்ப்பத்தால் அதிகம் சந்திப்பது நின்று போயும் ஒருவரையொருவர் மனதில் போட்டுக்கொண்டவர்கள். நெஞ்சுக்குள் நசுக்கிவிடப்பட்ட (ரிப்பரஸ்டு) நினைப்புகள் இருவர் வாழ்விலும் மூடிக்கிடந்துவிட்டன. அவன் 'நீ எங்கே இருக்கிறாய் என்பது தெரியவில்லை. உன்னைப்பார்க்க—' என்கிற போதும், அவள் அவனை பால்யமுதல் தான் அறிந்தவிதம் ஒவ்வொன்றையும் கிளறிப்பார்க்கிற போதும், அவை ஞாபகங்களாக மேல் எழும்பி 'ஏன்'னிலும் 'அழியாச் சுடர்'ரிலும் போல தாக்கி பாதிக்கின்றன. ஆனால் அவைகளின் பாதிப்பு தோரணையிலிருந்து இது மாறுபட்டது. ஒருவர் மற்றவருக்காக அல்ல என்பது இருவருக்கும் நிச்சயமாகிவிட்டது. அவர்கள் சந்திப்பே இருவரையும் 'திடுக்கிட'வைக்கிறது. அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. ஆனால் யதேச்சையாக பார்த்துவிட்டபிறகு கமலா பின்தொடர்ந்து அவனை அறையில் சந்திக்கிறாள். மதுக் குப்பியை பார்த்துவிட்டு 'அதை கொட்டப் போகிறேன். நீ யாரென உனக்குத் தெரிகிறதா? மாமா இருந்தால் இப்படி இருப்பாயா?' என்கிற போது பழைய உறவை அதனால் உள்ள உரிமையை வலியுறுத்துபவளாகிவிடுகிறாள்—சேகரனும் 'இனி' இல்லை, இதுமட்டும்—' என்று 'மன்றாடுபவன்போல் பேசும்போது அந்த உரிமையை வழங்குபவனாக ஆகிவிடுகிறான். குடிகாரனை அவனை வெறுக்கும்

அவள் கலைஞனை அவனை விரும்புகிறாள். பக்கவாத்தியம் வாசிக்க அழைக்கிறாள். ஆனால் அவன் சரி என்று சொல்லியது அவளுக்கு பிடிக்கவில்லை. அதே சமயம் தான் எதற்காக அழைத்தோம் என்றும் அவளுக்கு யோசனை எழுந்தது. அந்த இடத்தைவிட்டுப் போகவே அவசரப்படுகிறான். ஆக அவர்கள் வைக்கப்பட்டுள்ள நிலை சிக்கலானதாக ஆகிவிடுகிறது.

ஆனால், அவர்கள் ஒருவரை ஒருவர் முன்பு காதலித்தார்களா, இல்லை இப்போதைய நிலையில் காதலிக்கிறார்களா? இது வெகு சூசனையாகத்தான் உணர்த்தப்பட்டிருக்கிறது. 'சிறு வயதில் இருவரும் சேர்ந்தே சகோதர சகோதரியாக விளையாடினார்களானாலும்' என்கிற வாக்கியத்தை நாம் பொருட்படுத்தினாலும் பொருட்படுத்தாவிட்டாலும் குழந்தைகளாக, சிறுவர்களாக அவர்களிடையே இருந்த அபிமானம் வளர்ந்து வந்திருப்பதும் சந்தர்ப்பத்தால் அது நிறைவேற்றலுக்கு இடம் இல்லாது போய்விட்டதும் தெரிகிறது. அந்தஸ்து வித்யாசத்தாலோ அல்லது வேறு எந்த வேறுபாடாலோ அவர்கள் ஒன்றுபட ஏது இல்லாமல் இருந்திருக்கக்கூடும். அது எது என்பதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால் கச்சேரியில் அவர்கள் சேர்ந்து வாசித்தபோது அவர்கள் இருவரும் ஒன்றாகிவிடுகிறார்கள். 'இரவின் இருள் வெளியில் பயந்த இரு குழந்தைகளின் மௌனமான பிணைப்புப்போல இருந்தது அந்த சேர்ந்த வாசிப்பு' என்கிறதில் அந்த ஒன்றிப்பை, அவர்கள் இருவரிடையேயும் இறுகிய பந்தத்தை, அவன் அவளுக்கு ஏதோ செய்தி தெரிவித்ததாகவும், அவனிடம் தன்னால் ஏதோ ரகசியம் கொடுக்கப்பட்டதாகவும் நினைக்கத் தோன்றுகிற ஒரு உறவை அவர்கள் அந்த கணங்களில் பெற்று, சாச்வதமானதாக ஆக்கிவிட்டார்கள் என்பது தெளிவாகிறது. அதற்குப்பின் அவன் எங்கு போனால் என்ன? அவள் எந்த மற்றொரு சூழலில் தடுமாறினால் என்ன? அந்த ஒரு சூழல் போதும் அவர்களுக்கு. அவன் மறைந்துவிட்டான். அவள் தன் 'பெண்மையின் வீழ்ச்சியை' நன்கு உணர்ந்துகொண்டாள். இந்த பெண்மையின் வீழ்ச்சி கமலாவுக்கு ஞானோதயமாக வருகிறது. குடிப்பழக்கத்துக்காக அவனை வெறுத்தாலும் கச்சேரிக்கு மறுநாள் அவனை காணப்போனாள் கமலா. அவனை தனக்குள்ளிருந்து அகற்றமுடியாதவளாக-அவனைக் காணாமல் மனம் சஞ்சலப்பட்டு 'என்ன எண்ணம், அறியாத வகையில் ரகசியமெனக் கருதிய எண்ணம், அவனோடு பகிர்ந்துகொண்டேன்' என்கிறபோது தன் பெண்மையின் வீழ்ச்சி அவளுக்கு படுகிறது. இந்த 'பெண்மையின் வீழ்ச்சி'யைக்கொண்டு முன் பார்க்கிறபோது சேகரனைப்பற்றிய கமலாவின் நினைப்புப் போக்கு எப்படி எல்லாம் இருந்திருக்கக்கூடும் என்று அநுமானிக்க முடிகிறது. மேலாக, அவர்கள் உறவு சரித்திரமே நம் கண்முன் விரிகிறது. 'கொஞ்சநேரம்'மில் அவனுக்கும் ரோஸ்ஸாக்கும் உள்ள உறவைவிட மென்மையானது, நுண்மையானது, சிக்கலானது கமலா—சேகரன் உறவு. 'வெளியே தெரியத் தோன்றமுடியாதது உள்ளே இருந்ததா? இந்த புரியாத அமைதிக்கு காரணம்? என்று கமலா தன்னைக் கேட்டுக் கொள்கிறபடி, பிரக்ஞை நிலைக்கும் அடியில் உள்ள ஒரு உணர்வு நிலையில் இருவரிடையேயும் இருந்து வந்திருக்கிற உறவு அது. 'சப்-கான்ஷஸ்' என்கிற, தான் அறிய இயலாத ஒரு மங்கலான பிரக்ஞையாக, நம் கவனத்துக்கு வராத ஒரு நிலையில் இருந்து, ஏற்பட்ட ஒரு உணர்ச்சிக் கொதிப்பில், மேலெழும்பி வந்தது. அந்த நிலையை மௌனி வெற்றிகரமாக கையாண்டிருக்கிறார். கதையை படித்து முடித்ததும் ஒரு முழுமையை நமக்குள் உணர முடிகிறது.

அடுத்த கதை 'மனக்கோலம்.' 'வாழ்க்கை லக்ஷியம் என்பது என்னவென்றே புரியாத' கேசவன், 'நிலைகொள்ளாது இச்சைகள் மனவிரிவில் விரிந்துகொண்டே போனால் மதிப்பிற்கான துரத்துதலில் தானாகவா இச்சைகள் பூர்த்தியாகின்றன? பிடிக்க முடியாதெனத் தோன்றும் எண்ணத்தில் இந்த துரத்திப் பிடிக்கும் பயனிலா விளையாட்டு எவ்வளவு மதியீனமாகபபடுகிறது' என்று சொல்லிக்கொள்ளும் கேசவன், கௌரியின் கண்களை ஒருநாள் சந்தித்த வாய்ப்பில், அவளை 'அகலாத லக்ஷியமாக' அவள் வேறு ஒருவரது மனைவி என்பதையும் ஏற்க மறுத்து இச்சை விரிப்பு கொள்கிறான். அதன் வேகம் அவனை வெகு தொலைக்கும் உந்திவிட்ட நிலையில் ஒரு பயங்கர கனவுபோன்ற பிரமை உணர்வு நிலையில் பதறி விழிப்புக்கொள்கிறான். அவன் மனது அதன் பின் காலைகாண ஆரம்பித்தது, தெளிகிறது. மௌனியின் மற்ற காதல் கதைகளுக்கு மாறாக 'இச்சை'க்கு அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ள கதை. கு. ப. ரா. வைப்போல காதலுக்கு ஒரு புனித அர்த்தம் கொடுத்திராத புதுமைப்பித்தன் 'இயற்கையின் தேவை' என்ற நோக்கில் தன் கட்டுக்கதை ஆண்-பெண் உறவு உலகத்தை நடத்தி இருப்பவர். மௌனி இந்த கதையில், 'கையால் ஆகாதவன் கணவன் ஆகிறான். பசிக்குப் பிச்சைகேட்க யாரிடமும் என்னேரமும் முடிகிறதா? தனக்கென்று ஒருமனைவி. தன் பலவீனத்தை உணர்ந்ததில் தான் மனைவி என்கிற பாத்தியம் கொண்டாட இடமேற்படுகிறது ஆண்களுக்கு. பெண்ணோ எனில் தன் பலத்தை மறக்க, மறைக்கத்தான் மனைவியாகிறாள்' என்று கேசவனின் இச்சை விரிப்புக்கு ஆதாரமான வரிகள் மூலம் 'உள்ளூற உறைத்து தடித்ததொரு, உணர்ச்சி வேகம் அவனை வெகு தூரம் உந்தித் தள்ளிவிட்ட,' 'அகத்தில் பிளவுபட்ட' ஒரு நிலையை எடுத்துக் காட்டி இருக்கிறார். ஆனால் புதுமைப்பித்தனது 'இயற்கையின் தேவை' அடிப்படைக் கதைகளில் உள்ள ஒரு வலு, சத்து இந்த கதையில் ஏறவில்லை. அவனுடைய இச்சை விரிப்பு வெகு சாமான்யமாக எழுச்சி கொள்கிறது. அவனுடைய விழிப்பும் வெகு மந்தமாக விழுந்திருக்கிறது. கேசவன் சிந்தனைகளிலே காலத்தை கழித்தமாதிரி கதையும் சிந்தனைகளாகவே நிரம்பிக் காண்கிறதே தவிர உச்சநிலைக்கு உதவக்கூடிய (உச்ச நிலையே சப்பையாக வந்திருக்கிறபோது) வகையில் தீவிரம், பொருத்தம், தேவையளவு கொள்ளவில்லை. அர்த்த புஷ்டியான தலைப்புக்குத் தக்க கதையாக உருவாகாமல் திறமைக்குறி காட்டுகிற, ஆனால் சாதனைகாட்டாத ஒரு இளம் கையின் படைப்பாகவே தோன்றுகிறது.

அழியாச் சுடர் தொகுப்பில் பாக்கி உள்ள

கதை நினைவுச்சுவடு. கடற்கரையில் எதிர்பாராத சந்திப்பில், தன் நண்பனுடன் இருந்த சேகரன் தனக்கு சற்று தள்ளி உட்கார்ந்திருந்த பெண்களில் ஒருத்தியை வீடு திரும்புகையில் தொடர்ந்து சென்று அவள் நுழைந்த வீட்டிலிருந்து'சேகரா' என்றுவந்த அழைப்பின் பின் நண்பனுடன் நுழைந்து, தான் அங்கு கண்ட சுசீலா முன்பு தனக்கு உறவு இருந்த ஒரு தாசியாயும் தான் தொடர்ந்து வந்த பெண் காந்தா தன் மகளாயும் இருக்க காண்கிறான். காந்தாவை உச்சி மோந்துவிட்டு, அப்பா... அம்மாவுக்காக இல்லாவிடினும் எனக்காக இருக்கமாட்டீர்களா?' என்று அவள் ஏங்கிக் கேட்கையிலேயே வாசலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். இந்த கதையின் உள்ளடக்கம் மௌனியத்தன்மை வாய்ந்ததாக இருந்தாலும், 'பிரபஞ்சகானம்' 'அழியாச்சுடர்,' 'மாறுதல்,' 'மாபெருங்காவியம்' போல,சிந்தனைச் சுழற்சியும் சிக்கலும் காணப்படாத, கதையம்சத்தை குடைந்து பார்க்க சிரமப்படுத்தாத, சொல் முறையில் மனோதத்துவ வெளியீட்டுக்கு காட்டப்பட்டிருக்கிறதை விட வர்த்தமான வெளியீட்டுக்கு அதிகம் அக்கறை செலுத்தப்பட்டு, இந்த கதை சொல்லலும் கலைக்குறை காணாமல் அளவான ரசப்பாங்குடன் வந்திருக்கிறது.

'அழியாச் சுடர்' தொகுப்பு கதைகள் பதினைந்தையும் நாம் பார்த்தாகிவிட்டது. முழுமொத்தமான மதிப்பீட்டை செய்யுமுன் இதில் சேராத சமீபத்திய 'குடை நிழல்' (1959 அக்டோபர்) 'பிரக்ஞை வெளியில்' (1960 அக்) கதைகளையும் தனியாகபார்த்துவிடலாம்.

அதற்கு முன் ஒரு தகவல். தேடின மூன்று மௌனி கதைகளில் ஒன்று எதிர்பாராமல் கிடைத்திருக்கிறது, 'சரஸ்வதி' ஆசிரியர் விஜயபாஸ்கரன் முயற்சியால். சமயத்துக்கு அவர் கதையை என்னிடம் தந்திருக்கிறார். அவருக்கு என் நன்றி. 'மாருட்டம்' (1938) என்ற அந்த கதை மௌனி வேடிக்கையாக எழுதக்கூடும் என்பதற்கு மற்றொரு உதாரணம். அன்று, முப்பதுக்களில், தேசிய வேஷம் போட்டுக்கொள்ளும் ஒரு மனப்பாங்குள்ளவர்கள் இருந்ததை கிண்டல் செய்தது. வழக்கமாக சில்க் ஷர்ட்டும் விசிறிமடிப்பு அங்கவஸ்திரமும் அணிகிற; மேடையில் ஆசனங்களில் உட்கார அந்தஸ்துள்ள ஒருவர், அன்று கதர் ஜிப்பாவும் காந்தி குல்லாவுமாக மாறிவிட, தற்செயலாக அவரது வழக்க உடை போலவே ஒருவர் அன்று போட்டுக்கொள்ள, அதனால் அவர்தான் இவர் என்று கருத இடம் ஏற்பட்டதைப் பற்றியது. லேசுக்கதை, மௌனி 'ஸ்பெஷல்'களில் ஒன்றல்ல.

'குடை நிழல்' கதையும் 'நினைவுச்சுவடு' போல சிக்கல் இல்லாத கதை. ஆனால் மனோதத்துவமும் கதை சொல்லலும் இழைந்துவிட்ட ஒரு வெளியீட்டுத்தன்மை கொண்டதாக இருக்கிறது. முந்தின கதைக்கும் இதற்கும் உள்ள ஒரு வித்யாசத்தைக் காட்டுவதற்காக இது சொல்லப்படுகிறதே தவிர ஏதோ ஒரு குறிப்பிடத்தக்க ஒரு தனி விசேஷ குணம் என்பதற்காக சொல்லப்படவில்லை. கதைப்படைப்பில் இந்த இரண்டும் இயல்பாக திறம்பட கையாளப்பட்டிருப்பதுதான் முறை. கதை இது. மழையில் நனைந்து இருந்த அழகிய ஜோன்ஸை பஸ் ஸ்டாண்டில் சந்தித்த சுந்தரம்; ஏற்பட்ட அறிமுகத்தில், தன் குடையில், அவள் போகவேண்டிய இடத்துக்கு இட்டுச் செல்ல முன் வந்து, அவளது விரும்பியும் விரும்பாமலுமான அநுமதியுடன் வீட்டுக்குப் போகிறான். தான் 'யார் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லாமலே அநேக ஆடவர்கள் அறிந்து கொண்டு' இருக்க, அவனால் தெரிந்துகொள்ள இயலாதது மட்டுமின்றி, 'சொன்னாலும் நீங்கள் தெரிந்து அறிந்து கொள்ளமுடியுமோ.' என்று சந்தேகப்பட்டதுடன் 'முடிந்தாலும், உங்களுக்கு நன்மையானதா' என தான்சந்தேகப்பட்டதாக அவனிடமே கூறும் ஜோன்ஸ் அவனை ஒரு கணத்தில் நன்றாக அறிந்து கொண்டவளாகிறாள். இவ்வளவுக்குப்பிறகு அவனுக்குகொஞ்சம் புரிகிறது. அவளிடம் அநுதாபம் தோன்றுகிறது. அவனை புரிந்துகொண்ட அவள், 'உங்களைப் பெண்ணுடையில் பெண்ணுக்கு என் சிநேகிதியாக என் பக்கத்திலேயே, ஏன்—என் உள்ளேயே வைத்துக்கொள்ள ஆசையாக 'இருப்பதாகக் கூறிய அவள், தன் வாடிக்கைக்காரர்களிலிருந்து விலக்கானவனாக இருந்த அவனது குடும்பத்தைப்பற்றி அவனிடமிருந்தே அறிந்துகொண்டிருந்த அவள், 'இப்போது நீங்கள் வேண்டா விருந்தினன் போல வந்திருக்கிறீர்கள்... பிரிவு உபசாரம் தான் உங்களுக்கு நான் செய்கிறேன்... உங்களைப் பிடிக்காது வெளியனுப்பத்தான் என் மனம் உங்களிடம் இவ்வளவு ஆசை கொள்கிறது' என்று 'அத்தகைய ஒருத்தி'யிலிருந்து வந்த 'விலக்கான' வார்த்தைகளுடன் அனுப்பிவிடுகிறபோது, அநுதாபம்கொண்ட அவன் ஐந்து ரூபாய்களை வைத்துவிட்டுப் போய்விடுகிறான். ஜோன்ஸ் சிரித்துக் கொள்கிறாள். ஆனால் மறுநாள் அவள் எதிர்பார்த்து இராதநிலையில் அவன் திரும்பி வரவும் அவனது அநுதாபத்தை விரும்பாத அவள், 'உங்களால் ஒன்று செய்ய முடியாததினால் தான் உங்களிடம் நான் பிரியம்கொண்டிருக்கிறேன்' என்று சூசனையாக தனக்கும் அவனுக்கும் இடையே இருக்கிற, இருக்கவேண்டிய நிலையை உணர்த்துகிறாள். மூன்றாம் தடவை சுந்தரம், ஜோன்ஸ் எதிர்பாராது வந்தபோது, ஆச்சர்யம் அடைந்த அவள், 'என்னை, உன்னைப்பற்றிய வரையில் என்னை, நீ இன்னும் அறிந்துகொள்ளவில்லை என்று தோன்றுகிறது. உன்னையும் நான் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால், நீ எனக்கு இப்படி வருத்தம் கொடுக்கமாட்டாய்,' என்று கூறி தடை விதித்தவள், நான்காம் தடவை அவன் வருகையை எதிர்பார்த்து அவன் பாதையிலிருந்தே விலகிவிடுகிறாள். நான்காம் தடவை போன சுந்தரம் ஜோன்ஸ் இடத்தில் வேறொருவளைக் காண 'ஒருக்கால் இவ்வூருக்கு வராமல் இருந்தாலும் இருக்கலாம்' என்றுஜோன்ஸைப் பற்றி அவள் தகவல் சொன்னதுடன், அவள் கொடுக்கச்சொன்னதாக ஐந்து ரூபாயை கொடுக்கிறாள். 'நீயே வைத்துக்கொள்' என்ற சுந்தரம் வீழ்ந்தவனாக திரும்புகிறான். கதை உள்ளடக்கம் ஏதோ தனிப்பட்டது, என்று சொல்லத்தக்காவிட்டாலும் சொல்முறையில் ஒரு நேர்த்தி இருக்கிறது. மௌனியின் இந்தகதை

நீண்ட இடைக்காலத்துக்குப் பின் வெளிவந்தது. மௌனியின் நடையிலே இயல்பாக உள்ள இறுக்கம் இதில் சற்று தளர்ந்தும் சூசனை உணர்த்தல் (ஸஜஸ்டிவிட்டி) மென்மை குறைந்தும் இருப்பதும் தெரிகிறது. பல வாக்கியங்கள் அவ்வளவு அப்பட்டமாக (ஆப்வியஸ்) இருக்கின்றன. அதே சமயம் மனோதத்துவ தாத்பரியம் சந்தேகத்துக்கு இடமின்றியும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு கதையைக்கொண்டு மௌனியின் இன்றைய எழுத்துப் போக்கில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதாக திடீர் முடிவுக்கு வந்து விடுவதற்கில்லை.

ஏனெனில், அவரது இருபதாவது கதையான 'பிரக்ஞை வெளியில்' (அக்டோபர் 60) கதையில் வேதாளம் திரும்ப முருங்கமரம் ஏறிக்கொண்டதாக மௌனி உள்ளடக்கத்திலும், சரி சொல்வழியிலும் சரி தன் பழைய நிலையை எடுத்துக்கொண்டு விட்டது தெரிகிறது. முதலில் கதையை பார்த்து விடுவோம். கடற்கரையில் நண்பனுடன் நடந்துசென்ற சேகரன் சற்று தள்ளி உட்கார்ந்து இருந்த மூன்று பெண்களில் ஒருத்திமீது விழுந்த தன் கவனத்தில், நண்பனிடம், சமீப காலமாக சுசீலா (கிராமத்தில் இருக்கும் அவன் மனைவி)வைப் பார்க்கும்தோற்றம், பார்த்தால் தோன்றும் நினைப்புகள் எழுவதாகச் சொல்கிறான். மறுநாள் சேகரனுக்கும் அந்த பெண்ணுக்கும் ஏற்பட்ட யதேச்சை சந்திப்பில் அறிமுகமாகிறார்கள். மாலையில் கடற்கரையில் அவனையும் மற்றவர்களையும் சந்தித்து அறிமுகம் ஏற்பட்டு அந்த கோஷ்டியில் ஒருவராக ஆகிறான். ஒருவர் பெயரை மற்றவர் கேட்காமலேயே அவர்கள் தினம் பழகி வருகையில், ஒரு நாள் தன் மனைவி பெயரும் அந்த பெண் பெயரும் ஒன்றாக இருப்பதை அறிந்த வியப்பில் 'முன்பு நான் ஒரு உருவை வைத்துக்கொண்டு இருவராகக் கண்டு ஆட்டினேன்போலும். இப்போதோ வெனில் ஒரு பெயரை வைத்து இருவராக ஆட்டுகிறேன்போலும்' என்று 'சுவாதீனமாக' பேசி அந்த விநோதத்தை மனதில் எண்ணிப் பார்க்கிறான். நாட்கள் ஆக, மறுநாள் ஊருக்குப் போவதாக அந்த பெண்களிடம் சொல்லி, தினமும் தள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கிறான். ஒருநாள் அவர்களை சந்திக்கும் பதைப்பில் சென்றபோது அவன் 'கல்சட்டிக்கார' பிரயாணத்தை மற்ற இரு பெண்களும் சுட்டி பரிகசிக்கையில், சுசீலா மட்டும் அவனைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறாள். காத்திருக்கும் மனைவியைப் பார்க்க அவன் ஊர் திரும்பாது இருப்பது தவறாகப்பட,அதற்கு காரணம் தான் தானே தன்னிடம் பழகுவதில் அவன் ஒருவகை இன்பம் கண்ட பிரமையலா, அப்படியானால் ஒரு கணவனை மனைவியிடமிருந்து பிரிப்பதுகுரூரம்அல்லவா, தான் தானறியாமல் அதைச் செய்கிறாளா, என்று தெளிவுபடாத நிலையில் உழல்கிறாள். 'சேகரனை தான் ஒரு பெண்ணாக மதித்துத் தான் பழகுவது போன்ற ஒரு உணர்ச்சி தனக்கு இருந்து வருவது போலவும் ஒரு வேளை தன் பெயர்கொண்ட மனைவி அவனுக்கு இருப்பதால்தான் அவளை இவனிடம் பார்ப்பது போலவும் உணர்வு நிலையை தன் சினேகிதர்களிடம் வெளிக்காட்டிக்கொண்டவள்,அவளே ஊரடையாது தடுப்பதைத்தான் தான் செய்வதாகவும் அவ்வித எண்ணம் தனக்கும் ஒரு இடமளிப்பதாகவும் தனக்கு அதில் திருப்தி ஏற்படுவதுபோலவும் தோன்றுவதாகவும் உணர்கிறாள். கடற்கரையில் பேசிவிட்டு அவர்கள் திரும்புகையில், சேகரனை பிரியும் இடத்தில், இரண்டு சுசீலாக்களுக்கு நடுவே நிதானிக்க முடியாமல் முன்பின் போவது தெரியாமல் தவித்தது போலவே சேகரன் நடுத்தெருவில் வந்த மோட்டாரை சமாளிக்க முடியாமல் காரடிபட்டு 'சாவு' பிடித்துக்கொள்ள கீழே விழுகிறான். தன் மனதிற்குள் இதை நிச்சயம்செய்துகொண்ட சுசீலா'ஒரு கணத்தில் தான் நின்ற இடம் மறுபடி சூன்யமானதென' உணர்வுபெற்று 'கணவனுக்கும் மனைவிக்கும் குறுக்காகத் தடுத்து நின்றதென்பதில் தான் பெற்றிருந்ததாக கருதும் இடத்தை மரணம் தட்டிக் கொண்டு போய்விட, இனி எவ்விடம் தன்னிடமாகக் காண்பது என்ற மனத்தடுமாற்றத்தில் அறை திரும்புகிறாள். சுசீலாவின் நினைப்போட்டத்தில், 'பெயரென தன்னைக் கலைந்து கண்டதில் சேகரன் மனைவி சுசீலா எனவா மனதில் உருக்கொண்டாள்' என்று கேட்டுக்கொள்ள ஆரம்பித்து, தானாக வேண்டி எதிலும் தன்னைக் காணத் தேடுவதுபோல, கன்னியான தான் சேகரன் மனைவி சுசீலாவை மனதில் கண்டதில், அவளாகத் தன்னையும் கண்டுகொண்டுவிட்டாள்போலும்' என்று, கணவன் வருகைக்காக எதிர்பார்த்து காதல்கொண்ட மனைவியாக தன் மாடி ஜன்னலடியில் நிற்பதான ஒரு உணர்வு எழ 'அப்படியாயின் ஒருவகையில் தான், 'காதல்'கண்ட பெண், கலியாணமாகாத கைம்பெண்தானே' என்ற ஒரு உலுக்கும் நினைப்பு உச்சத்தை எட்டுகிறாள்.

இந்த கதைச் சுருக்கம் போதாது இந்த கதையின் தனிச்சிறப்பை அறிய. படிக்கிறபோது உணர்வதிலே தான் இந்த கதை உருவாகிறது, முழுமை பெறுகிறது. சுசீலா வருகிற அதிர்ச்சி நினைவு முடிவுக்கு, மௌனி, கதை ஆரம்பத்திலிருந்து செய்கிற வகைநேர்த்தியானது.நடுவில் தொய்வோ,விலகலோ பராக்கோ இல்லாமலும், ஆரம்பத்தில் இப்படி முடியக்கூடும் என்பதற்கும் எதிர்பார்ப்புகொடுக்காமல், முடிவில் இப்படி நடக்காது என்பதற்கும் வழி இல்லாமல்,உணர்ச்சிப் பெருக்கிலும் மனவோட்டத்தின் தர்க்க நியாயப் போக்கின் வழியே நியாயம் விழ-அது எத்தகைய பிடிக்காத விஷயமானாலும் சரி, அதுவேறு விஷயம்-செய்திருக்கிறார். விவரம் காட்ட முடியாத இனம் அறிய முடியாத அடிமனதின் ஒரு ஓட்ட நிலையில், பிரமை என்று வெளித்தெரிய நாம் அபிப்பிராயம் சொல்லக்கூடிய நிலையில் உள்ள ஒரு மனப்போக்கை வெகு நுண்மையாக கையாண்டிருக்கிறார் மௌனி.

ஆக, இந்த நான்கு கட்டுரைகளிலும் மௌனிக்கு ஒரு வாசக வழிகாட்டியாகத் (ரீடர்ஸ் கைட்) தான் கதைகளை தனித்தனியேயும் தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒப்பிட்டும் பார்த்திருக்கிறேன்— மௌனி விஷயத்தில் மற்றவர்களைவிட அது தேவை என்பதால் . அடுத்த பகுதியில் பொதுக்குணங்களை ஆராய உத்தேசித்திருக்கிறேன்.

(தொடரும்)

எழுத்து அரங்கம்

ஜேம்ஸ் பாரி என்ற நாடக ஆசிரியர் பீட்டர் பான் என்ற நாடகம் எழுதினார். அதன் வெற்றியில் அவருக்கே சந்தேகம் ஏற்பட்டதனால் இன்னும் ஒரு நாடகம் நஷ்ட ஈடாக எழுதி பிரசுரகர்த்தர்களிடம் கொடுத்தார். நஷ்ட ஈடாக கொடுத்தது பிரசித்தியாகவில்லை. முதலில் கொடுத்ததே நன்றாக இருந்தது. எமிலி பிராண்டி எழுதிய 'உதரிங் ஹயிட்ஸ்' என்ற நாவலை பிரசுரிக்க எந்தப் பதிப்பாளரும் முன்வரவில்லை. எல்லிஸ் பெல் என்ற புனைபெயரில், ஒரு குறிப்பிட்ட பிரதிகள் விற்பனையாகும் வரையில் எல்லாச் செலவுகளையும் தானே ஏற்றுக்கொள்ளச் சம்மதித்து அந்தப் பெண் அந்த நாவலை வெளியிட மிகுந்த பிரயாசைப்பட நேர்ந்தது. உலகத்தின் சிறந்த நாவல்களில் ஒன்றாக அந்தப் புத்தகம் இன்றளவும் கருதப்படுகிறது. ஆகவே போகிறபோக்கில் ஒரு நாவலோ, கதையோ உதவாக்கரை என்று ஒரு விமர்சகர் ஒதுக்கித் தள்ளிவிடுவது பொறுப்பற்ற காரியமேயாகும். ஜேம்ஸ் பாரியின் உதாரணம் ஓர் ஆசிரியர்கூட தமது சிருஷ்டிகளைப்பற்றி தர நிர்ணயம் செய்வது கடினம் என்பதை விளக்குகிறது.

வங்கிம் சந்திர சட்டோபாத்யாய எழுதிய நாவல்களை வன்மையாகக் கண்டித்து விமர்சனம் செய்து கொண்டிருந்தார் டாக்டர் மித்ரா என்பவர். ஆனால் இன்று அந்த டாக்டர் மித்ரா என்பவரின் பெயர் மறைந்து விட்டது. வங்கிம் சாட்டர்ஜியின் நாவல்கள் மங்காப் புகழுடன் பிரகாசிக்கின்றன. இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் இலக்கிய சிருஷ்டிகளைக் கண்டனம் செய்வதே நோக்கமாகக் கொண்டிராமல் தரமுள்ள இலக்கியம் ஏன் வளரவில்லை என்றாவது ஆராய்ச்சி செய்தால் பலனுண்டு.

புதுமை வேண்டுமென்று பழைமையை இகழ்வதும் சரியாகாது. இந்தப் புதுமைப் பித்தம் இலக்கியத்தில் மட்டும் அன்று; மற்றக் கலைகளுக்கும் கூட தாவிப் படர்ந்திருக்கிறது. பிக்காஸோவின் படங்களை ரசிப்பவர்கள் ரவிவர்மாவின் படங்கள் கூட நன்றாக இல்லை என்று சொல்கிறார்கள். 'ஸர்ரியலிஸம்' என்று இந்தப் புதுமைக்குப் பெயர் கூறுகிறார்கள். அதாவது மனதுக்கு அடித்தளத்திலேயிருக்கும் உள் மனதிலிருப்பதை அப்படியே கலை பிரதிபலிக்கவேண்டும் என்கிறார்கள். உள்மனதில் அலங்கோலமான நிலையில் இருப்பது அப்படியே வெளிப்படையாக கலையுருவம் பெறவேண்டும் என்கிறார்கள். 'இந்தக் கவிதை எழுதியபோது இரண்டு பேருக்கே அதைப்பற்றி தெரியும். ஒருவர் கடவுள், இன்னொருவர் நான். கடவுள் எங்கிருக்கிறாரோ தெரியாது. எனக்கோ அதன் பொருள் மறந்து போய்விட்டது. அந்தக் கவிதா ரஸத்தைப் பருகக் கூடியவர் வேறு யார் இருக்கிறார்? என்று ராபர்ட் பிரௌனிங் தமது கவிதை ஒன்றைப்பற்றி விளக்கம் கூறினார். புதுமைக் கதைகளும், கவிதைகளும் பல இந்தமாதிரி பிக்காஸோ சித்திர வகையைச் சேர்ந்தவை. புதுமை வானத்தில் கற்பனைச் சிறகடித்துப் பறப்பவர்கள் சாதாரண வாசகர்களுக்காக எழுதப்படும் கதைகளை மட்டரகமானவை என்று கருதுகிறார்கள். சாமான்ய வாசகர்களுக்காக எழுதாமல் இந்தப் புதுமைப் பித்தர்களுக்காக ஓர் எழுத்தாளர் எழுதிக்கொண்டிருப்பது என்பது தமிழ்நாட்டில் இயலாத காரியம். 'வியாபாரப்' பத்திரிகைகளுக்காக எழுதாமல், 'உயர்ந்த' தரமுள்ள ரசனைகளை எங்கு அனுப்பிப் பிரசுரிக்க முடியும்? ஆங்கிலத்தில் வேண்டுமானால்' இயூடோரா வெல்ட்டி போன்ற ஆசிரியர்கள் இருக்கமுடியும். தமிழ்நாட்டில் சாத்தியமில்லை. அடுப்பங்கரைக் காரியங்களையும் கவனித்துக்கொண்டு இடையிடையே பத்திரிகையையும் படித்துக்கொண்டிருக்கும் குடும்பப் பெண்களுக்காவும் எழுதப்படுகிற கதைகளிலும் கலைத்திறமை இருக்க முடியுமா என்பதே பிரச்னை.

இந்த மாதிரிக் கதைகளில் பல, குடும்பச் சூழ்நிலைகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்படும்போது ஆங்காங்கே சில ஒற்றுமைகள் ஏற்படுவது இயல்பு. ஒரு வீட்டிற்கு ஒரு பெண்ணின் தோழி வருகிறாள். கணவன் அந்தப் பெண்ணைப் பார்க்கிறான். அந்தப் பெண் போன பிறகு கணவனை மனைவி ஏன் அந்தப் பெண்ணை அப்படிப் பார்த்தீர்கள் என்று கேட்கிறாள். இந்தப் பிளாட்டில் உயர்ந்த 'தனித்வம்' என்ன இருக்கிறது? எழுதுகிற ரீதியில் வித்யாசம் இருக்கலாம். டிரீட்மென்டில்--எழுத்தாளருடைய திறமையைக் காட்டலாம். 'சுகி' சுப்பிரமணியன் இன்றுள்ளசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். பல பத்திரிகைகளில் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறார். இவ்வளவு பட்டவர்த்தனமாக அவரைப்பற்றி வாசகர்கள் தவறான எண்ணம் கொள்ளும்படி தாங்கள் செய்ததற்கு மனப்பூர்வமாக வருத்தம் தெரிவிக்கிறேன். சகோதர எழுத்தாளர் ஒருவருடைய பெருமையைத் தாங்கள் குறைசெய்கிற இந்த முயற்சியை பாராட்டுவதற்கில்லை. காலஞ்சென்ற கு.ப.ரா.விடம் எனக்கு நல்ல மதிப்பு உண்டு. குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. அவரே ஆங்கிலக் கதை ஒன்றைத் தழுவி எழுதியிருக்கலாம். சுகியும் அந்த ஆங்கிலக் கதையைப் படித்து தமிழில் அந்த அழகான கற்பனை இருக்கவேண்டும் என்று, கு.ப.ரா எழுதியது தெரியாமலே எழுதியிருக்கலாம். ஆங்கிலம் நன்றாகத் தெரிந்த 'சுகி' மாரீசம் செய்வதாக இருந்தால் போயும் போயும் இன்னொரு தமிழ்க்கதையைத் தழுவுவானேன்? மேலும் சுகியின் கதையின் முடிவு கு. ப. ரா. வின் கதையின் முடிவிலிருந்து வேறுபட்டது. எந்தவிதமாகப் பார்த்தாலும் 'சுகி'யை இந்தப் பழியிலிருந்து மிகவும் கௌரவமான முறையில் விடுதலை செய்ய விரும்புகிறேன்.

ஆனை. ஸா. குஞ்சிதபாதம்

ஆனதாண்டவபுரம்.

(அன்பர் குஞ்சிதபாதம் 'இன்றுள்ள சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர்' என அவர் கரு

தும் ஒருவரது பெருமையை குறைசெய்கிற முயற்சியாக நாம் செய்திருப்பதாக குறிப்பிடுகிறார். அத்தகைய உத்தேசம் எதுவும் நமக்கு இல்லை. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளது எழுத்து. எழுத்துத் துறையில் 'மாரீசம்' மட்டுமல்ல, இன்று அது தேங்கிக் கிடப்பதற்கு காரணமாக உள்ள பல்வேறு குறைகளையும் அவ்வப்போது எடுத்துக்காட்டி, கருத்து பரிமாறி, குறைகள் நீங்கி சரியான பாதையில் அது உயர்ந்து செல்ல வகை செய்வதுதான் அதன் நோக்கம். எனவே கதையின் ஆரம்பம், களம், அசைவு, ஒரு குறிப்பிட்டவிதமான சந்தேக அபிப்ராயம்,இவைகளுக்குஆதாரமாக வாசக மனம் இணக்கம் கொள்ளச் செய்து, இறுதியில் மட்டும் ஓ'ஹென்ரி திருப்பம் வலிந்து தரப் பட்டுள்ள, இன்று எழுதப்பட்டுள்ள, ஒரு கதையை எடுத்துக்காட்டி, அது முன்னர் ஒரு எழுத்தாளரால் எழுதப்பட்ட அமைப்பு முறையிலேயே பெரிதும் இருப்பதை பார்த்து வாசகர் கவனத்திற்கு கொணர்ந்தோம். அன்பர் தன் கடிதத்தில் 'சுகியின் கதை முடிவு கு. ப. ரா. வின் கதை முடிவிலிருந்து வேறுபட்டது' என்று சொல்கிறபோது, அதுவரையில் உள்ள ஒருமைப்பாட்டை மறுக்கவில்லை. இந்த கதை சம்பந்தப்பட்ட மட்டில் வலிந்து கொடுக்கப்பட்ட திருப்பம்—ஒரு 'ட்விஸ்ட்'—அதை சுயம் என காப்பாற்றக்கூடியதாக இல்லை என்பதுதான் நமது கருத்து.

அன்பர், சுகியை 'பழியிலிருந்து மிகவும் கௌரமான முறையில் விடுதலை செய்ய' முன்வரும் முயற்சியில் கு.ப.ரா. வே, மாரீசம் செய்திருக்கலாம் என்று சொல்லுகிறார். இந்த 'லாம்' முக்கு பதில் அன்பர் 'செய்திருக்கிறார்'என்று ஆதாரங்கள் காட்டி இருந்தால் நமக்கு புதிய தகவல் கிடைத்து கு. ப. ரா. வின் அந்த கதை பற்றி, ஏன், கு. ப. ரா. பற்றியும் புனர் மதிப்பீடு செய்ய வகை ஏற்பட்டிருக்கும். 'எழுத்து' சுகிக்கும் கு. ப. ரா.வுக்கும் வித்யாசம் காட்டாது. அடுத்து 'கு. ப. ரா. செய்தது தெரியாமல் சுகியும் செய்திருக்கலாம்' என்கிறார். அந்த 'லாம்'மும் சரியில்லை. கு. ப. ரா.வை நன்கு படித்து ரசித்தவர் சுகி என்பது சமீபத்தில் அவர் சிறுகதை பற்றி செய்த சொற்பொழிவு காட்டி இருக்கிறது.

அடுத்து, 'ஆங்கிலம் தெரிந்த சுகி போயும் போயும் இன்னொரு தமிழ்க் கதையைத் தழுவுவானேன்' என்கிறார். வேடிக்கைக் கேள்வி. ஆங்கிலம் தெரிவதற்கும் மாரீசத்துக்கும் சம்பந்தம் இல்லை. தவிரவும் இந்த கேள்விக்கு அன்பர் குஞ்சிதபாதமோ நாமோ காரணம் சொல்ல முடியாது. ஆங்கிலம் தெரிவது வேறு; ஆங்கில இலக்கியம் தெரிவது வேறு. சுகியைப் பற்றி நமக்குத் தெரியாது. பொதுவாக இன்று நம் கலாசாலைப் பட்டம் பெற்ற பெரும்பாலோருக்கு உலக இலக்கிய ஞானம் அவ்வளவாக இல்லாதிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆ—ர்)

2

எது இலக்கியம் என்பதே புதிராக இருக்கும் பொழுது, நல்ல இலக்கியம், காளான் இலக்கியம் என்று விமரிசனம் செய்யவேண்டிய சூழ்நிலை ஒன்று இப்பொழுது தமிழ் நாட்டில் இல்லை. எது இலக்கியம் என்பதில் தற்சமயம் நாட்டில் வெவ்வேறான அபிப்ராயங்கள் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. ஒருவருக்குப் பத்திரிகை தொடர் கதைகள் தாம் பேரிலக்கியமாக இருக்கின்றன. மற்றவருக்கு சங்ககாலப் பாடல்கள் தாம் இலக்கியமாகும். இன்னொருவருக்குத் துப்பறியும் நாவல்கள் மட்டும் இலக்கியம்.

நண்பர் க. நா. சுப்ரமண்யம் சொல்கிறார். 'இலக்கியம் என்று சொல்லப் படுவது பூராவுமே ஒரு உணர்ச்சியைச் சன்னமாகத் தட்டி எழுப்பி, அந்த உணர்ச்சியைச் சமனப் படுத்துவது தான்." (சரஸ்வதி—ஜூலை 58—'எது இலக்கியம்?')

அன்பர் லா. ச. ராமாமிருதத்தின் சிறுகதைகளை அனேகர் சிறந்த இலக்கியம் என்று நம்புகிறார்கள். முதல்தர சிறுகதை எழுத்தாளர்களில் முதலிடம் பெறவேண்டியவர் லா. ச. ரா. என்பது பலரின் அபிப்ராயம். ஆனால், நண்பர் வல்லிக்கண்ணன் சரஸ்வதி—ஜூலை 15, 59 இதழில் 'உதிரிப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் எழுதுகிறார்.

"சமீபத்தில் லா. ச. ரா.வும் நானும் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் தனது எழுத்து வளர்ச்சிபற்றி என்னிடம் கேட்டார். 'உங்கள் எழுத்தாற்றல் அற்புதமான வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தில் நீங்கள் வெற்றி பெறவில்லை இன்னும். உங்கள் எழுத்துக்கள் என்னை அழவைக்கவில்லை. உங்கள் எழுத்தைப் படிக்கிறவர்களில் எவருக்காவது அழுகை வரும் என்றும் எனக்குத் தோன்றவில்லை' என்றேன்."

சாதாரணமாக, பரவச நிலை கண்ணீரை வரவழைக்கும். உணர்ச்சி பெருகும்பொழுது கண்ணீரும் பெருகுகிறது. நல்ல ஓர் எழுத்து வாசகனை உணர்ச்சியின் எல்லைக்கு அழைத்துச் செல்லும் பொழுது, வாசகன் கண்ணீர் விடுகிறான். நம் சினிமாப் படங்களில் சில சில சமயங்களில் காண்பது, சினிமாதான் என்பதை மனதுக்குள் நினைவுறுத்திக் கொண்டே இருந்தாலும், கண்ணீரை வரவழைத்து விடுகின்றன அல்லவா? "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி...'' இப்படி தெய்வத்தின் எதிரே பக்தி பரவசத்தில் நிற்கும்பொழுது கண்ணீர் பெருகுவதும் உணர்ச்சி மிகுதியால்தானே? அதேபோல ஒரு சிறு கதை கண்ணீரை வரவழைத்தால், அது வாசகனை தன்னை மறக்கச் செய்து உணர்ச்சியுள் ஆழ்த்துகிறது என்பது பொருள். அது நல்ல சிறு கதை, அதாவது நல்லதொரு இலக்கியம் என்பது மறுக்க முடியாதது. அப்படி ஒரு சிறுகதை கண்ணீரை வரவழைக்காவிடில், அது நல்ல சிறுகதையல்ல, இலக்கியமுமல்ல என்பது தானே அர்த்தம்?

நண்பர் வல்லிக்கண்ணன் லா. ச. ரா. வின் கதை தனக்குக் கண்ணீரை வரவைக்கவில்லை என்கிறார். அதோடு மட்டுமல்ல. வேறு எவருக்கும் கண்ணீரை வரவழைத்திருக்கும் என்பதையும் அவர் நம்பவில்லை. அதாவது, லா. ச. ரா. வின் கதைகள் அவர் உணர்வைத் தட்டி எழுப்பவில்லை என்பது

பொருள். அதாவது, சிறுகதை இலக்கிய கர்த்தாக்களில் முதலிடம் (அல்லது முதல் மூன்று பேர்களில் ஒருவராக இடம்) பெறுபவரின் எழுத்தே நண்பர் வானா, கானாவை கண்ணீர்விட வைக்கவில்லை. அதாவது, நல்ல சிறுகதை கண்ணீரைப் பெருக்க வைக்கும், அவர் சிறுகதை சிலவற்றைப் படித்துக் கண்ணீர் பெருக்கி யிருக்கிறார், ஆனால், லா. ச. ரா. வின் கதை அவர் கண்ணீரை வரவழைக்கவில்லை, அதனால், லா. ச. ரா. வின் சிறுகதைகள் இலக்கியம் அல்ல என்பது தான் இதன் பொருள்! அல்லவா?

க. நா. சு. வின் கருத்துப்படி, நல்ல இலக்கியம் உணர்ச்சியைத் தட்டி எழுப்பி அந்த உணர்ச்சியை சமனப் படுத்த வேண்டும் என்பது அவர் சொல்கிறார். "தமிழரது இந்தத் தலைமுறை சிறுகதை இலக்கியம், 'ஜனனி' (லா. ச. ரா. வின் சிறுகதைத் தொகுப்பு) என்கிற கதைத் தொகுப்பின் மூலம் பிரமாதமான வளம் பெற்றிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்." (படித்திருக்கிறீர்களா? —க. நா. சு.) இதன்மூலம் க. நா. சு., லா. ச. ரா. வின் சிறுகதைகளை இலக்கியமாக மதிக்கிறார் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. அதாவது, லா. ச. ரா. வின் கதைகள் உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, அதை சமனப்படுத்துகிறது என்பது பொருள். அல்லவா?

இப்படி ஓர் எழுத்தாளரின், அதுவும் மிகப் பிரபல எழுத்தாளரின் கதைகளே ஒரு விமர்சகருக்கு இலக்கியமாகவும், இன்னொருவருக்கு வெறும் சாதாரணக் கதைகளாகவும் இருக்கும்பொழுது, எது இலக்கியம் என்பது பற்றி எழுத்தாளர்களுக்கு உள்ளாகவே சர்ச்சை இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அவரவர்களுக்குத் தோன்றியது தான் இலக்கியமென்றால், ஐம்பது காசு மொழி பெயர்ப்புத் துப்பறியும் நாவல்களும் இலக்கியம் தான். நல்ல காலமாக தமிழ் வாசகர்கள் அவ்வளவு ஆழத்திற்கு இன்னும் தாழ்ந்து விடவில்லை. பலர் துப்பறியும் நாவல்களை இலக்கியமாகக் கொள்வதில்லையாதலால் (க. நா. சு. வும், வானா, கானாவும் நிச்சயமாக அவைகளை இலக்கியம் என்று சொல்வதில்லையாதலின்) எது இலக்கியம் என்பதற்கு முன்னேற்பாடாக சரியான ஓர் அஸ்திவாரம் அமைக்கப் பட்டிருக்கிறது என்று நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அதனால், "எது இலக்கியம்?" என்பது பற்றி நாம் முடிவு செய்து கொள்ள வேண்டியது வெகு அவசியமாகிவிட்டது. இலக்கியம் என்ற சொல்லே 'லட்சியம்' என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இலக்கணம் என்பது 'லட்சணம்' என்பதின் தமிழ் வடிவம்போல எவ்வித லட்சியமுமற்ற எழுத்து (கலை கலைக்காகவே என்பது போல) இலக்கியமாகுமா என்பதும், லட்சியத்தை, அதாவது குறிக்கோளைக்கொண்ட எழுத்துக்கள் இலக்கியமாகிவிடுமா என்பதும் சிந்தனைக்குரிய விஷயங்கள்.

நல்ல இலக்கியம் நாட்டில் இன்று வளரவில்லை என்று கூறிப் பொறுப்பை யார்மீதோ சுமத்துவதில் பொருள் இல்லை. இன்றைய தமிழ் சமுதாய நிலை அப்படி இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். சாக்கடை நீர் வெள்ளமாகப் பெருகி சமுதாயத்தை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் பொழுது, மூழ்கியவர்களிடமிருந்து நறுமணத்தையா எதிர்பார்க்க முடியும்?

தோல்வியே கண்ட தலைவர்.

பேச்சிலே வளர்ந்த கட்சி.

கொலை, களவு, விபச்சாரச் செய்திகளுக்கு முதலிடம் அளிக்கும் நாளிதழ்.

ஆண், பெண் உறவை மட்டும் கதைக் கருவாகக்கொண்டு உலவும் வார ஏடு.

நெஞ்சில் நஞ்சைத் திணிக்கும் சிறுவர் பத்திரிகை.

மேற்கண்ட ஐந்து தலை நாகம் தமிழ் நாட்டின் காற்றையே விஷமாக்கும் பொழுது நல்ல இலக்கியம் இங்கு எப்படி எதிர்பார்க்க முடியும்? வங்காளத்தைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதில் பயன் என்ன?

—ம. நா. ராமசாமி

உதகமண்டலம்

(அன்பர் இரண்டு மேற்கோள்களை எடுத்துக் காட்டி, நல்ல இலக்கியம் எது என்பது பற்றிய ஒரு முடிவுக்கு எதை வைத்துக்கொண்டு வருவது என்று கேட்கிறார். நல்ல இலக்கியம் உணர்ச்சியை சன்னமாக தட்டி எழுப்பி, அந்த உணர்ச்சியை சமனப்படுத்துவதா அல்லது வாசகன் கண்ணில் கண்ணீர் வரச்செய்து அழவைப்பதா, எது? இது ரசமான ஆராய்ச்சிக்கு இடம் தருவது. அடுத்த ஏடு எழுத்து அரங்கத்துக்கு சுருக்கமாக தங்கள் கருத்துகளை அனுப்பும்படி வாசகர்களை கேட்டுக் கொள்கிறோம். 'ஆ-ர்')

3

...சில நல்ல எழுத்தாளர்களின் வாக்கியங்களையும் சில எழுத்தாளர்கள் கையாளுகிறார்கள். உதாரணமாக ராமாமிருதத்தின் 'புற்று' கதையில் வரும் கீழ்க்கண்ட வாக்கியங்களை லட்சுமி சுப்ரமண்யம் என்பவர் நவம்பர் மாத 'கல்கி'யில் 'ஆதாரம்' என்ற கதையில் பயன்படுத்தி இருக்கிறார். இரண்டும் தரப்படுகின்றன.

'அவள் மேலிருந்து மென்மையான மணம். பென்சிலால் ஒழுங்காகத் தீட்டிய புருவங்கள். உதடுகள் இரத்தப் பூவாய் முளைத்திருந்தன.
(ஆதாரம்)

'அவள் மேலிருந்துவீசும் வாசனையில் எனக்கு மயக்கம் கூட உண்டாயிற்று. பென்சிலால் வெகு ஜாக்கிரதையாக தீட்டி இருந்த புருவங்கள் வெகு ஒழுங்காய் வளைந்திருந்தன. உதடுகள் முகத்தில் முளைத்த இரத்தப் பூவாய்த்தானிருந்தன.
(புற்று)

இதையும் வெளியிடுங்கள்.

—சுப. கோ. நாராயணசாமி

நாச்சியார் கோவில்

(அன்பர் எடுத்துக்காட்டி இருக்கும் இந்த இரண்டுக்கும் நல்ல ஒற்றுமை இருப்பதை மறுக்க முடியாது, தொடர்ந்து மூன்று தகவல்கள் அதே விதமாக வந்திருக்கின்றன. ஒரு நல்ல உபமானம், உருவகம், வர்ணனை அம்சம் நம்மை கவர்ந்து நம்மை அறியாமல் நம் எழுத்தில் கலந்துவிடலாம். அல்லது நாம் அறிந்தே ஒரு வரியை அதில் சேர்க்க ஏற்படலாம். இதை ('—') குறியிட்டுக் காட்டலாம், நாம் வேண்டுமென்றே செய்தால். இதில் இன்னொன்று முதல் இரண்டும் சாதாரணமானது என்றும் யாருக்கும் தோன்றலாம் என்றும் சொல்லி விடலாம். 'ரத்தப்பூ' உருவகம் முழுக்க முழுக்க ராமாம்ருதம் முத்திரை விழுந்தது. அதனால்தான் மற்றவர் கையாளும்போது அவ்வளவு துல்யமாக வாசகர் மனதில் பட்டிருக்கிறது. இன்னொரு விஷயமும் கூட. நாம் இரண்டு கதைகளையும் படித்ததில் 'ரத்தப்பூ' உருவகம் புற்று கதையில் கதாபாத்திரத்தின் சுபாவத்துக்கு ஏற்ப அமைந்திருக்கிறது, 'ஆதாரம்' கதையில் அப்படியில்லை. அத்தகைய ஒரு உருவகத்துக்கு அவசியமே இல்லை. பொருத்தம் இல்லாமல் விட்டுத் தெரிய கிடக்கிறது. ஒன்றிரு வாக்கியங்கள், உபமான, உருவங்களைக் கூட வாசகர்கள் மனதில் போட்டுக் கொள்கிற இந்த நாட்களில், எழுத்தாளர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஆ-ர்.)

4

தங்கள் "எழுத்து" மாத வெளியீட்டின் 'மார்கழி" (டிசம்பர்) இதழ் கண்டேன். மாரீசம் என்ற தலைப்பில் எடுத்துக் காட்டிய தங்கள் இதழின் நேர்மையையும், தொண்டையும் மெச்சாமல் இருக்க முடியவில்லை. கடந்த காலத்தில் நடந்த தவறுகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் இன்றைய எழுத்தாளர்களும் வருங்கால எழுத்தாளர்களும் இத்தகைய தவறுகளைச் செய்யாவண்ணம் நல்வழி காட்டியுள்ளமை போற்றத்தக்கது.

தவறிழைத்த எழுத்தாளர்களுள் ஒரு சிலர் உங்கள்மீது ஆத்திரப்படக்கூடும். அவர்கட்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள் உரியதாகட்டும். செய்த தவறை ஒப்புக்கொண்டு இனிமேல் இத்தகைய தவறு ஏற்படாமல் நடக்க முயல்வதுடன் தங்களையும், தங்கள் ஏட்டையும் போற்றிப் போதிய ஆதரவு தருவதே அவர்கள் கடமை. பலரும் தங்கள் நண்பர்களுடன் பேசிய விஷயம் பகிரங்கமாக வந்துவிட்டதையிட்டு பகையை பாராட்டுவதில் பலன் யாதுமில்லை.

இதுபோன்ற தவறிழைத்தோர் இன்னும் அநேகர் உளர். அவர்கள் தவறையும் எடுத்துக்காட்டுங்கள்.

"புதுமைப் பித்தன்'' அவர்கள் எழுதிய கதை "பொன்னகரம்'' "ஸ்டார், பிரசுரம் வெளியிட்ட "புதுமைப் பித்தன் கதைகள்" என்ற தொகுப்பில் உள்ளது. அதே கதையை ஈழத்து எழுத்தாளர் செ. கணேசலிங்கம் அவர்கள் எடுத்து சிறிது மாற்றி எழுதி இருக்கிறார். "நல்லவன்" என்ற பாரி நிலைய வெளியீட்டில் வந்திருக்கிறது, புத்தக வடிவில். டாக்டர் மு. வ. அவர்கள் முன்னுரை வழங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே இவ்விரு கதைகளையும் தாங்கள் "எழுத்து'' வில் வெளியிட்டு ஈழத்து எழுத்தாளர்களையும் நல்வழி நடக்கச் செய்வீர்கள் என்பது என் நம்பிக்கை.

எஸ். எஸ். சாமி.

அச்சுவேலி (சிலோன்)

(அன்பர் குறிப்பிட்ட ,பொன்னகரம்' நமக்கு தெரியும். 'நல்லவன்' இதுவரை நாம் பார்க்கவில்லை. இரண்டையும் படித்துள்ள அன்பருக்கு இது பட்டிருக்கிறது. இந்த இரண்டு கதைகளையும் எழுத்துவில் போடும்படி கேட்டிருக்கிறார். ஒரு மாதிரிக்காகத்தான் சென்ற ஏட்டில் செய்யப்பட்டதே தவிர இப்படியே தொடர்ந்தால் 'எழுத்து' வேறு வரிகளுக்கு இடம் கொடுக்க முடியாமல் போய்விடும். கதைச்சுருக்கம், ஒரேவிதப் போக்கு இவைகளை ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி சுருக்கமாக எழுதினால் நலமாக இருக்கும். ஆ-ர்.)

உங்கள் காதுக்கு

'இன்று தமிழ் நாட்டில் இரண்டாயிரம் கவிகள் இருக்கிறார்கள்'.

—அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்

'ஒரு நாவலென்ன, இரண்டு நாவலென்ன, ஒரே சமயத்தில் எட்டு நாவல்கூட எழுதலாம்.'

—பி. எம். கண்ணன்

'வெறும் சோம்பேறித்தனத்தால் வசன கவிதை பாடும் துறையில் சில எழுத்தாளர்கள் திளைக்கின்றனர்.'

—ரா. ஸ்ரீ. தேசிகன்

'எனக்கு விமர்சனத்தில் நம்பிக்கை இல்லை.'

—க. நா. சுப்ரமண்யம்

'இங்கே எழுத இடம் கிடைக்காதவர்கள் வெளி நாட்டில் விமர்சனம் எழுதுகிறார்கள்.'

—அகிலன்.

'இலங்கை எழுத்தாளர்கள் கூடியவரையில் புனை பெயர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது.'

—'பகீரதன்' (மஹாலிங்கம்)

'ஈழத்து எழுத்தாளர்களிடையே ஒற்றுமை இல்லை.'

—பகீரதன்

('அம்பி' தொகுத்தது)

இலக்கிய வம்பு

எந்த நாட்டிலுமே சுத்த இலக்கிய பத்திரிகைகள் என்று ஒரு சிலதான் இருக்கும். தொழில் ரீதியாக அது சரிக்கட்டாது என்பதால் பணம்போடுபவர்கள் அதற்கு அதிகம் முன்வரமாட்டார்கள். எனவே ஏதாவதொரு பணச் செல்வாக்கான, அக்கறை கொண்ட ஒரு ஸ்தாபனம் கொடுக்கும் நன்கொடை இத்யாதிகளைக் கொண்டு நடந்துவரும் அல்லது சர்வகலாசாலைகள் ஆதரவில் வெளிவரும். அமெரிக்காவில் இப்படி சில மாகாணத்து சர்வகலாசாலைகள் நடத்தும் 'குவார்ட்டர்லி'கள் (மூன்று மாதங்களுக்கு ஒரு முறை) இருக்கின்றன. 'சீவானி ரிவ்யூ' 'ஹட்ஸன் ரிவ்யூ', 'பார்ட்டிஸன் ரிவ்யூ' 'யேல் ரிவ்யூ', இப்படி பல. இங்கிலாந்தில் அந்த மாதிரி சர்வகலாசாலை சார்பான பத்திரிகைகள் அதிகம் இல்லை. ஆனால் தனிப்பட நடத்தும் பத்திரிகைகள் இருக்கின்றன. இருந்தன. அமெரிக்காவில் உள்ள இலக்கியப் பத்திரிகைகளுக்கான திடமான ஆயுள் பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு இல்லை. பல பிரபல இலக்கிய பத்திரிகைகள் மறைந்து இருக்கின்றன. இருபத்திரண்டு ஆண்டுகள் நடந்த, பிரபல பிரிட்டிஷ் விமர்சகர் எஃப். ஆர். லெவிஸ் நடத்திய 'ஸ்குருடினி' சமீபத்தில் மறைந்தது. ஐஃபர் இவான்ஸ் நடத்திய 'அடல்ஃபி'யும்கூட இப்போது 'எஸ்ஸேஸ் இன் கிரிடிஸம்', லண்டன் மாகஸைன்' இவை நடக்கின்றன. சமீபத்தில் 'ரிவ்யூ ஆஃப் லிடரேச்சர்' இன்னொரு பத்திரிகையும் புதிதாக வருகின்றன.

எனவே இலக்கிய பத்திரிகைகளுக்கு நீடித்த, தொடர்ந்த பலம் கிடைப்பது சிரமமாக தெரிகிறது. பிரிட்டனில் 'பொயட்ரி' என்ற பத்திரிகை ஒரு 'பொயட்ரி கிளப்' என்று சங்கமாக அமைத்துக் கொண்டவர்களால் நடத்தப்படுவது. இல்லாவிட்டால் எந்த பத்திரிகை அத்தனை கவிதைகளையும் போடக்கூடும் என்பதால் போலும். ஆகவே, தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையிலும் கூட இலக்கியப் பத்திரிகைகளின் வாழ்வு தற்போதைய சூழ்நிலையில் வேறு எவ்விதம் இருக்கமுடியும், சிரமமாக இல்லாமல்?

இலக்கிய பத்திரிகைகளைப்பற்றி பேசும்போது ரசமான சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஐரோப்பாவில்உள்ள அமெரிக்கர்கள் சிலர் சேர்ந்து ஐரோப்பிய—அமெரிக்க இலக்கிய பரிமாறுதலுக்காக பிரான்சில் ஒரு பத்திரிகை நடத்த முடிவு செய்தார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் வீடுகளுக்குச் சென்று சந்தா சேகரித்தார்கள். ஒரு குறிப்பிட்ட சந்தா சேகரித்தபின் அந்த பத்திரிகை வெளிவந்தது. பத்திரிகை மட்டுமல்ல புஸ்தக விஷயத்திலும் இப்படி நடந்திருக்கிறது. ஃபிரான்சில் புதுக்கவிதை முயற்சிகளை ஆதரித்து புஸ்தகமாக போட எந்த பிரசுரத்தாரும் முன் வரவில்லை, சில இளம்கவிகளின் கவிதைகளை. இந்தகவிகள் தங்கள் புஸ்தகங்களை அச்சடித்து, வீதிகளில் சென்று—கொட்டும் மழை, பனியிலும்கூட தங்கள் புஸ்தகத்தை தாங்களே விற்றார்களாம். எனவே தமிழ் நாட்டில் ஒரு இலக்கியப் பத்திரிகை ஆசிரியர் சந்தாவுக்காக வீடு வீடாகச் சென்றாலும் அது இலக்கியப் பத்திரிகை மரபு வழி வந்ததுதானே?

பத்திரிகைகளை விட்டு தனி நபர்களைப்பற்றி பார்க்கலாம். வில்லியம் புளோமர் என்பவர் ஒரு பிரிட்டிஷ் கவி. ஆனால் அவரைப் பார்த்தால் ஒரு பெரிய வியாபார தொழில் நிபுணர் மாதிரி இருக்குமாம். அவ்வளவு டீக்காக தோன்றுவார். ஒரு சமயம் அவர் தன் தலைமயிரை சற்று நீளமாக வளரவிட்டார். அதற்காக அவருக்கு க்ஷவரம் செய்பவரிடமிருந்து அவருக்கு சூடு கிடைத்தது. 'ஏன் ஸார், நீங்கள் என்ன ஒரு கவி மாதிரி தோன்ற ஆசைப்படுகிறீர்களா' என்று கேட்டார் அவர். புளோமர் என்ன செய்வார்? தர்ம சங்கடப் பட்டார். தானும் ஒரு கவி என்று சொல்வதா, வேண்டாமா? என்று. பாதி ஆசை, அதை சொல்லி அவனுக்கு கவிதை பற்றிய ஒரு சிறு பிரசங்கம் செய்ய வேண்டும் என்று. 'இங்கிலீஷ்காரர்கள் சிறப்பாகச் செய்வது கவிதைதான்; எனவே அவர்களைப் பற்றி கவுரதை கொடுத்துப் பேசவேண்டும் என்றும் சொல்ல நினைத்தவர் வாயை மூடிக்கொண்டு விட்டார். பிறகு அவன் தன்னைப் பற்றியும் என்ன நினைத்துவிடுவானோ என்ற தயக்கம் போலும்!

கவிகளைப்பற்றி பேசுகிறபோது கவிதை வாசகர்களைப் பற்றிய ரசமான சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒரு பிரிட்டிஷ் கவி ஒரு கலாசாலையில் விதை பற்றி பிரசங்கம் செய்தார் அந்த கலாசாலையில் ஆபீஸில் வேலை பார்க்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்தனர். கவிதையின் முக்யத்வம், அதில் உள்ள மனிதாபிமான நோக்கம் பற்றிய பிரசங்கம் அது. பிரசங்கம் முடிந்ததும் அந்த பெண்கள் 'கவிதை என்பது விஷயத்தை மூக்கைச் சுற்றித் தொடுவதாக தங்களுக்குப் படுவதாகச் சொன்னார்களாம்! அவர் மற்றொரு சொற்பொழிவு போலீஸ் பயிற்சிப் படையினருக்கு நிகழ்த்தினர். அவர்கள் கேட்டார்களாம். 'ஆமாம், இதில் எவ்வளவு பணம் கிடைக்கும்' என்று!

இம்மாதிரியான வாசகர்களைப் பார்க்கும்போது கு. ப ரா. கதை சம்பந்தமான ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. மின்னக்கலை' என்ற சிறு கதையை கு. ப. ரா. கலைமகள் பத்திரிகையில் எழுதி இருந்தார். டிராமில் அவர் போய்க்கொண்டிருந்தபோது முறையாக தமிழ் படித்த ஒருவர் 'அந்த கதை வெகு நன்றாக இருப்பதாக பாராட்டிப் பேசினாராம். அந்த காலத்தில் கதைகளை ரசித்து சொல்பவர்களே அபூர்வம். கு.ப. ராவுக்கு திருப்தியாக இருந்தது. டிராமிலிருந்து இறங்க வேண்டிய சமயம் வந்ததும் அவர் எழுந்துபோகையில், கு ப. ரா.விடம் 'ஆமாம் அந்த கதை அடுத்த இதழில் தொடருமோ இல்லையோ' என்று கேட்டாராம்! கு ப ரா அப்படியே அயர்ந்து உட்கார்ந்து விட்டார். இதை பிறகு கு. ப. ரா தன் நண்பர்களிடம் சொல்லி சிரித்தார்.

பொங்கல் சலுகை

புது சந்தாதாரர்களுக்கு

ஒரு நல்ல வாய்ப்பு

எழுத்துக்கு புது சந்தாதாரர்களாக வரும் ஜனவரி முதல் சேருபவர்களுக்கு சென்ற ஆண்டு எழுத்து (12 ஏடுகள்) முழுவதும் பாதி விலைக்கு-ரூ. 2.50-க்கு தரப்படுகிறது.

1961-க்கு ஆண்டு சந்தா	ரூ. 5·00
முந்தின ஆண்டு தொகுதி	ரூ. 2·50
	ரூ. 7·50

இந்த ஏழரை ரூபாயை அனுப்பிவைத்து சிறந்த இலக்கிய கருத்து பொக்கிஷமான 24 ஏடுகளையும் அன்பளிப்பு நாவல் 'வாடிவாசல்'லையும் பெற்றுக் கொள்ளவும். (தபால் செலவு உள்பட)

சலுகை ஜனவரி 31 வரையில்

எழுத்து

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa from 19-A, Pilliar Koil Street, Triplicane, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street Triplicane, Madras-5.